QB365 - Question Bank Software

# வரலாறு

## இரண்டாம் பருவம்

### தொகுதி 3



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 104 16-07-2019 2.29.50 PM

QB365 - Question Bank Software

# பொருளடக்கம்

## வரலாறு


| அலகு | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும் | 107 |
| 2. | மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும் | 122 |
| 3. | குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை | 138 |


## புவியியல்


| | | |
|---|---|---|
| 1. | வளங்கள் | 156 |


## குடிமையியல்


| | | |
|---|---|---|
| 1. | தேசியச் சின்னங்கள் | 173 |
| 2. | இந்திய அரசமைப்புச் சட்டம் | 187 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| 1. | பொருளியல் – ஓர் அறிமுகம் | 200 |


9GHYF6
மின்நூல்

9GRUGT
மதிப்பீடு

B441_SOC_6_T2_TM
இணைய வளங்கள்



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 105 16-07-2019 2.29.50 PM

QB365 - Question Bank Software



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 106 16-07-2019 2.29.50 PM

QB365 - Question Bank Software

அலகு 1

# வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்



9H1QIG

## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- ஆரியர்களின் பூர்வீகம், அவர்கள் இந்தியாவிற்குள் குடியேறுதல் ஆகியவற்றை அறிந்து கொள்ளல்.
- வேதகாலம் குறித்து கற்றுக் கொள்வதற்கான சான்றுகளை அடையாளம் காணல்.
- தொடக்க மற்றும் பின்வேதகால அரசியல், பொருளாதார மத வடிவங்களின் உருவாக்கத்தைப் புரிந்து கொள்ளல்.
- தொடக்க மற்றும் பின்வேதகால மக்கள் வாழ்ந்த பகுதிகளைக் கண்டறிதல்.
- தொடக்க வேதகாலத்திற்கும் பின்வேதகாலத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ளல்.
- தமிழ்நாட்டின் பெருங்கற்கால, இரும்புக்காலப் பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்.

## வேதகாலம்

சிந்துவெளி நாகரிகத்தின் சரிவோடு இந்தியாவில் நகரமயமாதலின் முதல் கட்டம் ஒரு முடிவிற்கு வந்தது. ஆரியரின் வருகையால் வேதகாலம் எனும் காலகட்டம் தொடங்கியது.

**வேதகாலம்** – இந்திய வரலாற்றில் கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 600 காலகட்டம். 'வேதங்கள்' என்பதில் இருந்து இப்பெயரைப் பெற்றது.

## ஆரியர்கள் என்போர் யார்?

ஆரியர்கள் இந்தோ–ஆரிய மொழி பேசும், இடம் விட்டு இடம் குடிபெயர்ந்து செல்லக்கூடிய கால்நடை மேய்ப்பவர்கள் ஆவர். இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து அலையலையாகக் குடிபெயர்ந்து இந்துகுஷ் மலைகளிலுள்ள கைபர் கணவாய் வழியாக வந்தனர்.

கால்நடைகளை மேய்ப்பதே இவர்களின் முதன்மைத் தொழில் என்றாலும் அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண் முறையையும் (slash and burn agriculture) பின்பற்றினர்.



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software




**உங்களுக்குத் தெரியுமா?**

**அழித்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண்முறை** (Slash and Burn Agriculture)

இம்முறையில் நிலத்தின் மீதுள்ள மரங்கள் மற்றும் செடி, கொடிகள் அனைத்தும் வெட்டப்பட்டு எரிக்கப்படும். அந்நிலத்தில் குறுகிய காலகட்டத்திற்கு வேளாண்மை செய்து அதன்பின் அந்நிலம் கைவிடப்படும். பின்னர் மக்கள் மற்றொரு இடத்தில் இதே போன்று வேளாண்மை செய்யத் தொடங்குவர்.

| காலம், பரப்பு, சான்றுகள் | |
|---|---|
| புவியியல் பரப்பு | வட இந்தியா |
| காலப்பகுதி | இரும்புக் காலம் |
| கால அளவு | கி.மு (பொ.ஆ.மு) 1500– 600 வரை |
| சான்றுகள் | வேதகால இலக்கியங்கள் |
| நாகரிகத்தின் இயல்பு | கிராம நாகரிகம் |

## ஆரியர்களும் இந்தியாவில் அவர்களின் வாழ்விடங்களும்:

- ரிக்வேதகால ஆரியர்கள் நாடோடிகள் ஆவர். அடிப்படையில் மேய்ச்சல் சமூகத்தினரான அவர்களுக்கு கால்நடைகளே முக்கிய சொத்து ஆகும்.
- ரிக்வேத காலத்தில் ஆரியர்களின் வாழ்விடம் பஞ்சாப் ஆகும். அப்போது அப்பகுதி 'சப்த சிந்து' அதாவது ஏழு ஆறுகள் ஓடும் நிலப்பகுதி என்றழைக்கப்பட்டது.
- ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 1000–இல் ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து சிந்து கங்கைச் சமவெளியில் குடியமர்ந்தனர்.
- இரும்புக் கோடரி, இரும்பினாலான கொழுமுனையைக் கொண்ட கலப்பை ஆகியவற்றைப் பரவலாக பயன்படுத்தினர்.



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

உங்களுக்குத் தெரியுமா?

**நான்கு வேதங்கள்:**
ரிக், யஜுர், சாம, அதர்வன.

## சான்றுகள்

### வேத கால இலக்கியங்கள்

வேத கால இலக்கியங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **சுருதிகள்** – நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும். அவைகள் புனிதமானமவை, நிலையானவை, கேள்விகள் கேட்கப்பட முடியாத உண்மை எனக் கருதப்பட்டவை. சுருதி என்பது கேட்டல் (அல்லது எழுதப்படாதது) எனும் பொருள் கொண்டது; இவை வாய்மொழி வாயிலாக அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

2. **ஸ்மிருதிகள்** – ஆகமங்கள், தாந்திரீகங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய மதம் குறித்த போதனைகளைக் கொண்ட நூல்களாகும். அவை நிலையானவை அல்ல, தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகுபவை.

'ஸ்மிருதி' என்பதன் பொருள் இறுதியான எழுதப்பட்ட பிரதி என்பதாகும்.




உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவின் தேசிய குறிக்கோள்**

"சத்யமேவ ஜெயதே" ("வாய்மையே வெல்லும்") என்ற வாக்கியம் முண்டக உபநிடதத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

## தொல்பொருள் சான்றுகள்:

சிந்து மற்றும் கங்கை நதிப்பகுதிகளிலும் பஞ்சாப், உத்திர பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய தொல்லியல் ஆய்விடங்களிலும் கிடைத்துள்ள இரும்புக் கருவிகள், மட்பாண்டங்கள் ஆகியன.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 109 16-07-2019 2.29.52 PM

QB365 - Question Bank Software

**வேதகாலத்தை வகைப்படுத்துதல்**

வேதகாலத்தின் இரண்டு கட்டங்கள்

- தொடக்க (ரிக்) வேத காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1500 – 1000
- பின்வேதகாலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 – 600

## வேதகாலப் பண்பாடு

### அரசியலும் சமூகமும்

ரிக் வேத கால அரசியல் ரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். குலம் (clan) என்பதே அரசியலின் அடிப்படை அலகாகும். அதன் தலைவர் குலபதி ஆவார். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கிராமம் ஆகும். கிராமத்தின் தலைவர் கிராமணி ஆவார். பல கிராமங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு 'விஸ்' (குலம்) என்றழைக்கப்பட்டது. இதற்கு விசயபதி தலைவர் ஆவார். 'ஜனா' (இனக்குழு)வின் தலைவர் ராஜன் ஆவார். இவர் ஜனஸ்யகோபா (மக்களின் பாதுகாவலர்) எனப்பட்டார். ரிக் வேத காலத்தில் பல இனக்குழு அரசுகள் (ராஷ்டிரம்) இருந்தன. (பரதர், மத்சயர், புரு).

### அரசர்

தனது இனக்குழுவைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பதே ராஜனின் முக்கியப் பொறுப்பாகும். அவருடைய அதிகாரம் இனக்குழு மன்றங்களான விதாதா, சபா, சமிதி, கணா ஆகிய அமைப்புகளால் கட்டுப்படுத்தப்பட்டது. இவைகளில் விதாதா (இனக்குழுவின் பொதுக்குழு) மிகப் பழமையானதாகும்.

> **சபா** – மூத்தோர்களைக் கொண்ட மன்றம்.
>
> **சமிதி** – மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு.

அரசர் தனக்கு உதவி செய்வதற்காக புரோகிதர் (தலைமை குரு) ஒருவரை பணியில் அமர்த்திக் கொண்டார்.அரசியல்,பொருளாதாரம்,இராணுவம் தொடர்பான விஷயங்களில் அரசனுக்கு சேனானி (படைத் தளபதி) உதவி செய்தார். கிராமங்களின் தலைவர் கிராமணி ஆவார்.

ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்து கங்கை, யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குடியேறியபோது தொடக்ககாலக் குடியேற்றங்கள் மாற்றம் பெற்று பிரதேச அரசுகளாயின. பரம்பரை அரசுரிமை தோன்றியது. முடியாட்சி முறையில் அரசரின் அதிகாரங்கள் அதிகரித்தன. அரசர் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள பல சடங்குகளையும் யாகங்களையும் நடத்தினார்.

பின்வேதகாலத்தில்பலஜனாக்கள்அல்லது இனக்குழுக்கள் இணைக்கப்பட்டு ஜனபதங்கள் அல்லது ராஷ்டிரங்கள் உருவாயின. சமிதி, சபா ஆகியவை தங்கள் முக்கியத்துவத்தை இழந்தன. விதாதா என்ற மன்றம் இல்லாமல் போனது. புதிய அரசுகள் தோன்றின. பாலி (Bali) என்பது மக்கள் தாங்களாகவே மனமுவந்து அரசனுக்கு கொடுத்துவந்த காணிக்கையாகும். பின்வேதகாலத்தில் இது ஒரு வரி ஆக மாற்றம் பெற்று மக்களிடமிருந்து தொடர்ந்து முறையாக வசூல் செய்யப்பட்டது. குரு மற்றும் பாஞ்சால அரசுகள் செழித்தோங்கிய காலம் இது. மேலும் அயோத்தி, இந்திரப்பிரஸ்தம், மதுரா போன்ற நகரங்களும் இக்காலத்தில் உருவாயின.

> பாலி – இது ஒரு வரி ஆகும். ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் 1/6 பங்கை இவ்வரியாகச் செலுத்த வேண்டும்.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 110 16-07-2019 2.29.52 PM

**சமூக அமைப்பு**

வேதகால சமூகம் தந்தை வழிச் சமூகமாகும். வெள்ளைநிறத்தோல்கொண்டஆரியர்கள்,கருப்பு நிறத் தோல் கொண்ட ஆரியரல்லாதவர்களிடம் இருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டனர். கருப்பு நிற ஆரியர் அல்லாத மக்களை தசயுக்கள், தாசர்கள் என்று அழைத்தனர். தொடக்க வேதகால சமுதாயத்துக்குள் மூன்று பிரிவுகள் (Treyi) காணப்பட்டன. பொது மக்கள் விஸ் என்று அழைக்கப்பட்டனர். போர்வீரர்கள் சத்ரியர்கள் எனவும் மதகுருமார்கள் பிராமணர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பிற்கால கட்டத்தில் திறன் கொண்ட, ஆரியரல்லாத மக்களை ஆரியர்கள் தமது சமுதாய ஏற்பாட்டுக்குள் கொண்டுவர நேர்ந்தது. அப்போது நான்கு இறுக்கமான வர்ண அமைப்பு உருவாக்கப்பட்டது. மதகுருவான பிராமணர், போரிடும் சத்ரியர், நில உடைமையாளர்களான வைசியர், வேலைத் திறன் கொண்ட சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் கொண்ட சமூக அமைப்பு உருவானது. இவ்வாறு நான்கு படிநிலைகள் கொண்ட சமூக ஒழுங்கு உருவாக்கப்பட்டது.

வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கிய சான்றுகள் இருக்கின்றபோதிலும், பயன்பாட்டுப் பொருள் சான்றுகள் போதுமான அளவு இல்லை.

**பெண்களின் நிலை**

ரிக்வேதகால சமூகத்தில், பெண்கள் ஓரளவிற்கு சுதந்திரம் பெற்றிருந்தனர். மனைவி குடும்பத்தின் தலைவியாக மதிக்கப்பட்டார். பெண்கள் தனது கணவருடன் தமது வீட்டில் சடங்குகள் நடத்தினார். குழந்தைத் திருமணத்தையும், உடன்கட்டைஏறுதலையும்அறிந்திருக்கவில்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளத் தடைகள் இல்லை. இருந்தபோதிலும் பெற்றோரிடமிருந்து சொத்துக்களைப் பெறும் சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டது. பொது நிகழ்வுகளில் பெண்கள் எந்தப் பங்கும் வகிக்கவில்லை.

பின்வேதகாலத்தில் சமூகத்தில் மட்டுமின்றி, குடும்பத்திலும் கூட பெண்களின் பங்கும் அவர்களுக்கான நிலையும் குறைந்துபோனது. பெண்கள் குடும்பத்தில் சடங்குகளை நடத்த முடியாத நிலை உருவானது. திருமணம் தொடர்பான விதிகள் இறுக்கமும் குழப்பமும் பெற்றன. பலதார மணம் சாதாரணமாக நடைபெற்றது. கைம்பெண் மறுமணத்திற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. கலப்புத் திருமணம் நிராகரிக்கப்பட்டது.

**பொருளாதார வாழ்க்கை**

வேதகாலப் பொருளாதாரமானது கால்நடை மேய்ச்சலும் வேளாண்மையும் கலந்ததாகும். ரிக்வேதகால ஆரியர்களின் முதன்மைத் தொழில் கால்நடைகள் மேய்ப்பது என்றாலும் மரவேலை செய்வோரும், தேர்கள் செய்வோரும், மட்பாண்டங்கள் செய்வோரும், உலோக வேலை செய்வோரும், துணி நெய்வோரும், தோல்வேலை செய்பவர்களும் இருந்தனர். பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் இக்காலத்தைச் சேர்ந்ததாகும். குதிரைகள், பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், காளைகள் மற்றும் நாய்கள் வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்டன.



சிந்து மற்றும் பஞ்சாப் பகுதிகளில் ஆரியர்கள் நிரந்தரமாகக் குடியேறியபின் அவர்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினார். யவா (பார்லி) அவர்களின் முதன்மை

QB365 - Question Bank Software

பயிராகும். கோதுமை, பருத்தி ஆகியவை சிந்துவெளி மக்களால் பயிர் செய்யப்பட்ட போதிலும் ரிக் வேதத்தில் அவைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொரு வருடமும் இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது.

பின்வேத காலத்தில் ஆரியர்கள் பசு, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை மட்டுமல்லாமல் யானைகளையும் பழக்கப்படுத்தினர். தொடக்க வேத கால கைவினைஞர்களோடு நகை செய்வோர், சாயத்தொழில் செய்வோர், உலோகங்களை உருக்குவோர் போன்றோரும் சமூகத்தில் இடம் பெற்றிருந்தனர். இக்காலப் பண்பாடு **வர்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு** என்று அழைக்கப்படுகிறது.

இரும்புக் கொழுமுனை கொண்ட கலப்பை மற்றும் இரும்புக் கோடாரி ஆகியவற்றின் உதவியோடு அதிக அளவிலான நிலங்களில் வேளாண்மை செய்யப்பட்டது. நெல், கோதுமை, பார்லி ஆகியன பயிர் செய்யப்பட்டன. வேளாண்மை வளர்ச்சி பெற்றதால் நிலத்தின் மீது தனியுரிமை உருவானது. புதிய தொழில்களும், கலைகளும் வளர்ந்து உபரி உற்பத்தி ஏற்பட்டு வணிகத்துக்கு இட்டுச் சென்றன.

வணிகம் பெருகியது. பண்டமாற்றுமுறை பரவலாகக் காணப்பட்டது. (ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை வாங்குவது). அவர்கள் நிஷ்கா, சத்மனா என்னும் தங்க நாணயங்களையும், கிருஷ்ணாலா என்னும் வெள்ளி நாணயங்களையும் வணிகத்தில் பயன்படுத்தினர்.

உங்களுக்குத் தெரியுமா?

**ரிக்வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள்**

- தங்கம் (ஹிரண்யா)
- இரும்பு (சியாமா)
- தாமிரம்/செம்பு (அயாஸ்)

**மதம்**

ரிக்வேதகால ஆரியர்கள் பெரும்பாலும் நிலம் மற்றும் ஆகாய கடவுளர்களை வழிபட்டனர். பிருத்வி (நிலம்), அக்னி (நெருப்பு), வாயு (காற்று), வருணன் (மழை), இந்திரன் (இடி) போன்றவற்றை வணங்கினர். மேலும் அதிதி (நித்தியக் கடவுள்), உஷா (விடியற்காலைத் தோற்றம்) ஆகிய குறைவான பெண் தெய்வங்களை வணங்கினர். அவர்களின் மதம் சடங்கு முறைகளை மையமாகக் கொண்டது. வேத மந்திரங்களைப் பாராயணம் செய்வதே வழிபாட்டு முறையாக இருந்தது. குழந்தைகள் (பிரஜா), பசு (கால்நடைகள்), செல்வம் (தனா) ஆகியவற்றின் நலனுக்காக மக்கள் தெய்வங்களை வணங்கினர். பசு புனிதமான விலங்காகக் கருதப்பட்டது. அக்காலத்தில் கோவில்கள் இல்லை. சிலை வழிபாடும் வழக்கத்தில் இல்லை.

பின்னாளில் மதகுருவாக இருப்பது ஒரு தொழிலாகவும், அது பரம்பரைத் தொழிலாகவும் ஆனது. ஆரியர் அல்லாத கடவுள்களும் ஏற்கப்பட்டிருக்கலாம். இந்திரனும், அக்னியும் முக்கியத்துவத்தை இழந்தனர். பிரஜாபதி (படைப்பவர்), விஷ்ணு (காப்பவர்), ருத்ரன் (அழிப்பவர்) ஆகிய கடவுளர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வேள்விகளும், சடங்குகளும் மிகவும் விரிவடைந்தன.

## கல்வி

**குருகுலக்கல்வி முறை**

- குருகுலக் கல்வி முறை என்பது பழங்கால கற்றல் முறை ஆகும்.
- குருகுலம் என்னும் சொல் குரு (ஆசிரியர்), குலம் (குடும்பம் அல்லது வீடு) என்ற இரண்டு சமஸ்கிருத வார்த்தைகளின் கூட்டாகும்.
- இம்முறையில் மாணவர்கள் (சிஷ்யர்கள்) குருவுடன் தங்கியிருந்து, அவருக்குச் சேவை செய்வதோடு கல்வியும் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்வர்.
- வாய்மொழி மரபில் மாணவர்கள் பாடங்களைக் கற்றனர். கற்றவை



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 112 16-07-2019 2.29.52 PM

அனைத்தையும் மாணவர்கள் மனப்பாடம் செய்தனர்.

- நான்கு வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கணம், தர்க்கவியல், நெறிமுறைகள், ஜோதிடம், கணிதம், இராணுவ உத்திகள் ஆகியன மாணவர்களுக்குக் கற்றுத்தரப்பட்டன.



- ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்வதற்கான பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- இரு பிறப்பாளர்கள் (Dvijas) மட்டுமே குருகுலத்தில் மாணவர்களாகச் சேர்க்கப்படுவர். பெண்களுக்கு பொது கல்வி அளிக்கப்படவில்லை.

### நான்கு ஆஸ்ரமங்கள்: (வயதின் அடிப்படையில்)

பின்வேதகால இறுதியில் வாழ்க்கையின் நான்கு நிலைகள் (நான்கு ஆஸ்ரமங்கள்) என்ற கோட்பாடு உருவாயின.

- பிரம்மச்சரியம் (மாணவப் பருவம்)
- கிரகஸ்தம் (திருமண வாழ்க்கை)
- வனப்பிரஸ்தம் (காடுகளுக்குச் சென்று தவம் செய்தல்)
- சன்னியாசம் (வீடுபேறு அடைவதற்காக துறவற வாழ்க்கை மேற்கொள்ளல்)

**சிந்துவெளி மற்றும் வேதகால நாகரிகங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.**

| | |
|---|---|
| | |
| | |

### தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் சமகாலத்தில் நிலவிய பண்பாடுகள்

வடஇந்தியாவின் தொடக்ககால வேதப் பண்பாடு இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவிய செம்புக்கால பண்பாட்டோடு ஒத்துப்போகிறது. மக்கள் செம்பையும் (chalco) கல்லையும் (lithic) ஒரே காலகட்டத்தில் பயன்படுத்தியதால் இது செம்புக் காலகட்டம் Chalcolithic Culture என்று தமிழில் அழைக்கப்படுகின்றது.

இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடு முதிர்ந்த நிலை ஹரப்பா பண்பாட்டின் சமகாலப் பண்பாடாகும். ஹரப்பா பண்பாட்டின் வீழ்ச்சிக்குப் பின்னருங்கூட, செம்புக் காலப் பண்பாடு தொடர்ந்து நிலவியது.

வடஇந்தியாவின் பின்வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தைச் சேர்ந்தவை ஆகும். இரும்புக் காலத்தின் முடிவில் மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டினுள் கி.மு. (பொ.ஆ.மு) 600 – கி.பி. (பொ.ஆ) 100 இல் காலடி எடுத்து வைத்தனர்.

பண்டைய தமிழகத்தின் பெருங்கற்காலம், சங்ககாலத்திற்கு முந்தைய காலத்தோடு ஒத்துப்போகிறது. கருப்பு மற்றும் சிவப்புநிற மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் ஒரு கூறாக உள்ளது.

## தமிழ்நாட்டின் பெருங்கற்காலம் / இரும்புக்காலம்.

உங்களுக்குத் தெரியுமா?

பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithic Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, lith என்றால் 'கல்' என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

9HJHLR

### தமிழகத்திலுள்ள பெருங்கற்கால/இரும்புக்கால தொல்லியல் ஆய்விடங்கள்.

**ஆதிச்சநல்லூர்–தூத்துக்குடி மாவட்டம்**

இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில், முதுமக்கள் தாழிகள், பல்வகைப்பட்ட மட்பாண்டங்கள் (கருப்பு, சிவப்பு) இரும்பாலான குத்துவாள், கத்திகள், ஈட்டிகள், அம்புகள், சில கல்மணிகள், ஒரு சில தங்க ஆபரணங்கள் கிடைத்துள்ளன.

வீட்டு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகளான புலி, யானை, மான் போன்றவற்றின் வெண்கலத்தாலான உருவங்கள் கிடைத்துள்ளன.

மட்பாண்டங்கள் செய்தல், கல் மற்றும் மரங்களைப் பயன்படுத்தி பொருட்கள் செய்தல் போன்ற திறன்களை மக்கள் பெற்றிருந்தனர்.





**கீழடி – சிவகங்கை மாவட்டம்**

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை திருப்புவனம் தாலுகாவிலுள்ள கீழடி கிராமத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த பழமையான நகரத்தை அகழ்ந்து ஆய்வு செய்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் நன்கு அமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு போன்ற சான்றுகள் இந்த ஆய்வில் கிடைத்துள்ளன. மேலும் தமிழ்–பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள மண்பாண்டங்கள், கண்ணாடியிலான மணிகள், செம்மணிகள், வெண்கல படிகம், முத்துக்கள், தங்க ஆபரணங்கள், இரும்புப் பொருட்கள், சங்கு வளையல்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை போன்றவையும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் துறை இரு மாதிரிகளை கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறையில் கணிக்க அமெரிக்காவில் புளோரிடா என்னும் இடத்தில் உள்ள பீட்டா அனாலடிக் என்ற நிறுவனத்திற்கு அனுப்பியது. அச்சோதனையில் இப்பொருள்கள் கி.மு (பொ.ஆ.மு) 200ஐச் சார்ந்தது என்பது தெரியவந்துள்ளது. இங்கு ரோம்

நாட்டைச் சேர்ந்த பழங்கால தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவை இந்தியாவிற்கும் ரோம் நாட்டிற்கும் இடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு மேலும் சில சான்றுகளாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பன குறித்தும் பெரிப்பிளஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.





**பொருந்தல் – திண்டுக்கல் மாவட்டம்**



கிடைத்துள்ள பொருட்கள்: புதைகுழிப் பொருட்கள், கண்ணாடி மணிகள் (வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சை வண்ணங்களில்) இரும்பு வாள்கள், தமிழ் – பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள், அரிசி நிரப்பப்பட்ட மட்பாண்டங்கள், ஓரளவு அரிதான கற்களான படிகக்கல், சிவப்பு நிற மணிக்கற்கள், சங்கு மற்றும் கண்ணாடி வளையல்கள்.

இரும்பினாலான கதிர் அறுக்கும் அரிவாள், ஈட்டி, கொழுமுனைகள் ஆகியவை தமிழக மக்கள் நெல் விளைவித்ததற்கு சான்றுகளாய் உள்ளன. இங்கு கிடைத்துள்ள அரிசி நிரம்பிய பானை, மக்களின் முக்கிய உணவாக அரிசி இருந்தது என்பதை மெய்ப்பிக்கிறது.

**பையம்பள்ளி – வேலூர் மாவட்டம்**

இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் – இரும்பினால் செய்யப்பட்ட தொல் பொருட்களோடு பெருங்கற்காலத்து கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ரேடியோ கார்பன் முறையில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. (பொ.ஆ.மு) 1000 என கணிக்கப்பட்டுள்ளது.

### கொடுமணல்–ஈரோடு மாவட்டம்



பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள கொடுமணல் என்னும் ஊர் இதுவே என அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு தமிழ் பிராமி எழுத்துக்களைக் கொண்ட முந்நூற்றுக்கும் அதிகமான மண்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் நூல் சுற்றி வைக்கப்பயன்படும் சுழல் அச்சுக்கள், சுருள்கள், துணிகளின் சிறிய துண்டுகள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், மணிகள் முக்கியமாக சிவப்பு நிற மணிக்கற்கள் ஆகியவற்றையும் தொல்லியல் ஆய்வு அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். புதைகுழி மேட்டிற்கு அருகே காணப்பட்ட நினைவுக் கல் (Menhir) பெருங்கற்காலத்தைச் சேர்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்

புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும். ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும். இந்த பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.



முதுமக்கள் தாழிகள் இவை இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பெரிய மண் பானைகள் ஆகும்.

#### கற்திட்டைகள் (Dolmens):



பாண்டவன் திட்டு, தருமபுரி

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இருபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின்மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்) கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்) நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

#### நினைவு கற்கள் (Menhir)



பிரிட்டானிய (Breton) மொழியில் 'மென்' என்றால் கல், 'கிர்' என்றால் "நீளமான" என்று பொருள். ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும்.

திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இடங்களில் இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன. இவை

உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைக் சுட்டிக்காட்டுகின்றன. மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடுமணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.



புலிமான் கோம்பை
கி.மு (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டு

**நடுகற்கள்**

இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும் தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும். திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.

## மீள்பார்வை

- ஆரியர்கள் ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு) 1500ல் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தனர். இக்காலகட்டத்திற்கு வேத நூல்கள் முக்கியச் சான்றுகளாகும்.
- வேதகால அரசியல் இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டது.
- ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்தபோது அங்கிருந்த தொடக்ககாலக் குடியேற்றங்கள் பிரதேச அரசுகளாக மாறின.
- இரும்புக் கலப்பையும் இரும்புக் கோடரியும் அதிக அளவிலான நிலங்களை வேளாண்மையின் கீழ் கொண்டுவர உதவின.
- புதிய கைவினைத் தொழில்களும் கலைகளும் வளர்ந்தன. கங்கைச் சமவெளிப் பகுதிகளில் நகரங்கள் தோன்றுவதற்கு இவைகள் வழி வகுத்தன.
- வடஇந்தியாவின் பிற்கால வேத சமூகமும் தென்னிந்தியாவின் இரும்புக்காலச் சமூகமும் ஒரே காலத்தைச் சேர்ந்தவையாகும்.

## அருஞ்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நிலையான | – | Eternal |
| இரத்த உறவு | – | Kinship |
| தந்தை வழிச் சமூகம் | – | Patriarchal |
| தெய்வம் | – | Deity |
| சமகாலத்தில் | – | Contemporary |
| உலோகவியல் | – | Metallurgy |

QB365 - Question Bank Software

## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. ஆரியர்கள் முதலில் ___________ பகுதியில் குடியமர்ந்தனர்.

   அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி

   இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு

2. ஆரியர்கள் ___________ லிருந்து வந்தனர்.

   அ) சீனா ஆ) வடக்கு ஆசியா இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா

3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ___________லிருந்து எடுக்கப்பட்டது.

   அ) பிராமணம் ஆ) ஆரண்யகம் இ) வேதம் ஈ) உபநிடதம்

4. வேதகாலத்தில் எந்த விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது?

   அ) 1/3 ஆ) 1/6 இ) 1/8 ஈ) 1/9

**II. கூற்றைக் காரணத்துடன் ஒப்பிடுக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. **கூற்று:** வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

   **காரணம்:** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

   அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

   ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

   இ) கூற்று சரி; காரணம் தவறு

   ஈ) கூற்று தவறு; காரணம் சரி

2. **கூற்று 1:** தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அதன் மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்ளஸ் குறிப்பிடுகிறார்.

   **கூற்று 2:** இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

   அ) கூற்று 1 தவறானது

   ஆ) கூற்று 2 தவறானது

   இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

   ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

3. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது.

   அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்.

   ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.

   இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.

   ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 118 16-07-2019 2.29.53 PM

QB365 - Question Bank Software

4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது?

அ) கிராமா < குலா < விஷ் < ராஷ்டிரம் < ஜனா

ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஷ்டிரம்

இ) ராஷ்டிரம் < ஜனா < கிராமா < குலா < விஷ்

ஈ) ஜனா < கிராம < குலா < விஷ் < ராஷ்டிரம்

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வேதப்பண்பாடு ___________ இயல்பைக் கொண்டிருந்தது.
2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து ___________ என்ற வரி வசூலிக்கப்பட்டது.
3. ___________ முறையானது பண்டைய கால கல்விகற்கும் முறையாகும்.
4. ஆதிச்சநல்லூர் ___________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## IV. சரியா? தவறா?

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியக் தொல் பொருட்கள் இந்திய–ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன.
2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.
3. படைத்தளபதி 'கிராமணி' என அழைக்கப்பட்டார்.
4. கருப்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும்.
5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

## V. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) கீழடி | – | 1. பகடை |
| ஆ) பொருந்தல் | – | 2. கொழு முனைகள் |
| இ) கொடுமணல் | – | 3. சுழல் அச்சுக்கள் |
| ஈ) ஆதிச்சநல்லூர் | – | 4. தங்க ஆபரணங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 3 | 4 | 2 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி.

1. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. வேதகால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?
3. 'பெருங்கற்காலம்' பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
4. 'கற்திட்டைகள்' என்பது என்ன?



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

5. முதுமக்கள் தாழிகள் என்றால் என்ன?
6. வேதகாலத்தில் வணிகப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக.
7. தமிழ்நாட்டில் காணப்படும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாய் எழுதுக.
2. வேதகாலப் பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.

**VIII. உயர் சிந்தனை வினா.**

1. குருகுலக் கல்வி முறைக்கும் நவீன கல்விமுறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**IX. பெருமிதமும் மகிழ்ச்சியும்–உண்மைகளை நாம் கண்டறிவோம்.**

| தொல் பொருள் ஆய்விடங்கள் | தொல்லியல் கண்டுபிடிப்புகள் | உண்மைகள் |
|---|---|---|
| ஆதிச்சநல்லூர் | தமிழ்–பிராமி எழுத்துக்கள் | வரலாற்றுக்கு முந்திய பண்பாடு இருந்துள்ளது |
| கீழடி | ரோமானிய தொல் பொருட்கள் | |
| பையம்பள்ளி | இரும்புக் கருவிகள் | |
| பொருந்தல் | அரிசி நிரப்பப்பட்ட பானை | |
| கொடுமணல் | சுழல் அச்சுக்கள் | |

**X. மாணவர் செயல்பாடு**

1. புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குதல்.

சுருதி, கிராமணி, ராஷ்டிரம், இரும்புக்காலம், நாடோடிகள், பண்டமாற்று



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 120 16-07-2019 2.29.53 PM

QB365 - Question Bank Software

**2.** வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | மி | ச | ரி | சு | பௌ | த | இ | ஸ |
| ச | இ | த | ம | ம் | க் | ஸ் | ரு | பா |
| அ | டை | ட் | தி | ற் | க | க | ம் | ங் |
| ந | பு | ள் | ம | ண | ம் | மா | பு | ச |
| ஸ் | ம | கை | ப | ர் | ங் | மெ | க் | த் |
| க | மி | ர | ணி | ஸ் | வி | ரா | கா | ம |
| ல் | கா | ரு | யா | சே | த | ர் | ல | னா |
| ய | கௌ | ர் | தி | ஷ் | வெ | னா | ம் | ளி |
| ஸு | க | ணா | டி | தி | பு | ப் | ரு | நெ |

1. ஒரு கணவாய்
2. மத போதனையைக் கொண்ட நூல்
3. கிராமங்களின் தொகுதி
4. இனக்குழு மன்றம்
5. மக்கள் மன்றம்
6. அக்னி
7. தங்க நாணயம்
8. வேதகாலம்
9. இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் உள்ள நினைவுச் சின்னம்.

## XI. வாழ்க்கைத் திறன்

ஆசிரியரின் உதவியோடு செய்தித் தாள்களிலிருந்து தொல்லியல் கண்டுபிடிப்புகள் குறித்த செய்திகளைச் சேகரிக்கவும்.

**கல்விச் சுற்றுலா**

நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகேயுள்ள தொல்லியல் சார்ந்த ஓர் இடத்திற்குச் சென்று வரவும்.

## XII. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| இரண்டு இதிகாசங்களைக் குறிப்பிடவும்.<br><br>விடை: | இறந்தவரின் நினைவாக நடப்படும் ஒற்றைக் கல்தூணின் பெயர்<br><br>விடை: | சிவகங்கை மாவட்டத்திலுள்ள சங்க காலத்தைச் சேர்ந்த நகரத்தின் பெயர்<br><br>விடை: |
| தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது இரண்டு இரும்புக்கால வாழ்விடங்களின் பெயர்களைக் கூறுக.<br><br>விடை: | தொடக்ககால ஆரியர்கள் பின்பற்றிய வேளாண் முறை என்ன?<br><br>விடை: | வேதகாலத்தில் உருவான இரண்டு பெரிய நகரங்களின் பெயரென்ன?<br><br>விடை: |



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_1.indd 121 16-07-2019 2.29.53 PM

QB365 - Question Bank Software

அலகு **2**

# மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும்





9I39Q2

## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் புதிய நம்பிக்கைகள் தோன்றியதற்கான காரணங்களை அறிந்து கொள்ளல்.
- மகாவீரர் மற்றும் புத்தரின் போதனைகள் குறித்த அறிவைப் பெறுதல்.
- சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கண்டறிதல்.
- ஹீனயான மகாயான பிரிவுகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளல்.
- தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் பெற்றிருந்த செல்வாக்கை அறிந்து கொள்ளல்.

## அறிவுமலர்ச்சிக் காலம்

கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு பண்டைய இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டம் ஆகும். இந்தியாவின் அறிவு மற்றும் ஆன்மீக வளர்ச்சியின் அடையாளச் சின்னமாக அக்காலம் விளங்குகிறது. வரலாற்று அறிஞர் வில் டூராண்ட் இக்காலத்தை 'நட்சத்திரங்களின் மழை' என்று பொருத்தமாக வர்ணிக்கிறார்.

## சான்றுகள்

**இலக்கியச் சான்றுகள்**

- அங்கங்கள் – சமண நூல்கள்
- திரிபீடகங்கள் மற்றும் ஜாதகங்கள் – பௌத்த நூல்கள்

**அறிவு மலர்ச்சிக்கும் சமணம் பௌத்தம் ஆகியவை தோன்றியதற்குமான காரணங்கள்**

புதிய அறிவு மலர்ச்சி ஏற்பட்டதற்கு பல காரணங்கள் உள்ளன. ஏற்கனவே இருந்த சமயத்தின் பெயரால் செயல்படுத்தப்பட்ட சுரண்டல் நடைமுறைகள் புதிய நம்பிக்கைகள் தோன்றுவதற்கு வழியமைத்துக் கொடுத்தன.

அவையாவன:

- பின்வேத காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட சிக்கலான சடங்குகளும் வேள்விகளும்.
- அதிக அளவில் செலவு செய்ய வேண்டி இருந்த வேள்விச் சடங்குகள்.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 122 11-07-2019 12.41.09 PM

- மூடநம்பிக்கைகளும், நடைமுறைகளும் சாதாரண மக்களைக் குழப்பம் அடையச் செய்தன.
- வேள்விச் சடங்குகளுக்கு மாற்றாகக் கற்பிக்கப்பட்ட உபநிடதத் தத்துவங்களைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.
- அடிமைமுறை, சாதிமுறை மற்றும் பாலியல் பாகுபாடுகளும் புதிய விழிப்புணர்வு தோன்றுவதற்குக் காரணமாயின.

### சமண மதத்தின் தோற்றம்

உலகத்தின் மிகப்பழமையான, தற்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும்மதங்களில்சமணமும் ஒன்றாகும். சமணம் 24 தீர்த்தங்கரர்களை மையமாகக் கொண்டது. தீர்த்தங்கரர்கள் பல்வேறு காலங்களில் மதம் தொடர்பான உண்மைகளைப் போதித்தோர் ஆவர். முதல் தீர்த்தங்கரர் ரிஷபர். கடைசித் தீர்த்தங்கரர் மகாவீரர் ஆவார். கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் மகாவீரரின் வழிகாட்டுதலில் சமணம் முக்கியத்துவம் பெற்றது.



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | வர்த்தமானர் |
| பிறப்பு | – | வைசாலிக்கு அருகேயுள்ள குந்தகிராமம், பீகார் |
| பெற்றோர் | – | சித்தார்த்தர், திரிசலா |
| இறப்பு | – | பவபுரி–பீகார் |

> உங்களுக்குத் தெரியுமா?
>
> சமணம் (Jain) என்னும் சொல் ஜினா (Jina) என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

### மகாவீரர் (தலைசிறந்த வீரர்)

வர்த்தமானர் (செழிப்பு என்று பொருள்) ஒரு சத்திரிய இளவரசர். இருந்தபோதிலும் அவர் தன்னுடைய 30வது வயதில் இளவரசர் என்னும் தகுதியைக் கைவிட்டுவிட்டு துறவறம் மேற்கொண்டார். தீவிரமான தியானத்தை மேற்கொண்டார்.

பன்னிரண்டரை ஆண்டுகால கடுமையான தவத்திற்குப் பின்னர் அவர் எல்லையற்ற அறிவை அடைந்தார். இந்நிலைக்கு 'கைவல்ய' என்று பெயர்.

அதன் பின்னர் அவர் ஜினா (Jina) ஆனார். இவரைப் பின்பற்றியவர்கள் சமணர் (Jains) என்று அழைக்கப்பட்டனர். மகாவீரர் பண்டைய சிரமானிய (Sramanic) மரபுகளை மறு ஆய்வு செய்தார். அவற்றின் அடிப்படையில் புதிய கோட்பாடுகளை உருவாக்கினார். ஆகவே இவர்தான் உண்மையிலேயே சமணத்தை உருவாக்கியவர் என நம்பப்படுகிறது.

### சமணத்தின் தனித்தன்மை வாய்ந்த போதனைகள்

- இப்பிரபஞ்சத்தை உருவாக்கியவர் கடவுள் என்பதை சமணம் மறுக்கிறது.
- அகிம்சை அல்லது அறவழியே சமணத்தின் அடிப்படைத் தத்துவம்.
- முக்தி அடைவது அல்லது பிறப்பு–இறப்பு–மறுபிறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபடுவதே சமணத்தின் இறுதி லட்சியமாகும்.

- இறுதித் தீர்ப்பு என்ற நம்பிக்கையை சமணம் மறுக்கிறது (இறுதித் தீர்ப்பு என்பது யார் சொர்க்கத்திற்கு செல்வது? யார் நரகத்திற்கு செல்வது? என்பதைக் கடவுள் தீர்மானிப்பார் என்ற நம்பிக்கை)
- ஒருவருடைய வாழ்வின் நலன் அல்லது தரம் என்பது அவருடைய கர்மவினையால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை சமணம் ஆதரிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**கர்மா அல்லது கர்மவினை என்றால் என்ன?**

இப்பிறவியில் ஒருவர் செய்யும் செயல்களே அவருடைய/ அவளுடைய இப்பிறவியின் பிற்பகுதி வாழ்க்கையையும், அடுத்த பிறவியில் அவர் வாழப்போகும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்ற நம்பிக்கை ஆகும்.

**திரிரத்தினங்கள் அல்லது மூன்று ரத்தினங்கள்**

கர்மாவிலிருந்து விடுதலை பெறுவதற்கும் மோட்ச நிலையை அடைவதற்கும் மகாவீரர் மூன்று வழிகளை அறிவுறுத்தினார்.

அவை

- நன்னம்பிக்கை
- நல்லறிவு
- நற்செயல்

மோட்சம் என்பது பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுதல் ஆகும்.

**சமணத்தின் நடத்தை விதிகள்**

மகாவீரர் தன்னைப் பின்பற்றுவோரை ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையை மேற்கொள்ளக் கூறினார். அப்படிப்பட்ட வாழ்வை மேற்கொள்ள ஐந்து கொள்கைகளைப் போதித்தார்.

அவை

- அகிம்சை – எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது
- சத்யம் – உண்மையை மட்டுமே பேசுதல்
- அஸ்தேயம் – திருடாமை
- அபரிக்கிரகம்– பணம், பொருள், சொத்துக்கள் மீது ஆசை கொள்ளாமை
- பிரம்மச்சரியம் – திருமணம் செய்து கொள்ளாமை

உங்களுக்குத் தெரியுமா?

மகாவீரரின் தலைமைச் சீடரான கௌதமசுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். அதன் பெயர் ஆகம சித்தாந்தம் எனப்படும்.

**திகம்பரரும் சுவேதாம்பரரும்**

சமணம் திகம்பரர், சுவேதாம்பரர் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

**திகம்பரர்**

- திகம்பரர் வைதீக பழமைவாதப் போக்குடைய சீடர்கள்.
- திகம்பரர் பிரிவைச் சேர்ந்த சமணத் துறவிகள் ஆடைகள் அணிவதில்லை. நிர்வாணமாக வாழ்ந்தனர். அவர்கள் எந்த விதமான உடைமையும் வைத்துக் கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது.
- பெண்கள் நேரடியாக விடுதலை பெறவோ நிர்வாண நிலையை அடையவோ முடியாது என திகம்பரர் நம்பினர்.



#### சுவேதாம்பரர்

- சுவேதாம்பரர்கள் முற்போக்கானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.
- சுவேதாம்பர பிரிவைச் சேர்ந்த துறவிகள் வெள்ளை நிற ஆடைகளை அணிகின்றனர். ரஜோகரனா (கம்பளி நூல்களைக் கொண்ட சிறிய துடைப்பம்) பிச்சைப் பாத்திரம், புத்தகம் ஆகியவை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.
- ஆண்களைப் போலவே பெண்களும் விடுதலை பெற சமமான தகுதிகளைக் கொண்டுள்ளனர் என சுவேதாம்பரர்கள் நம்புகின்றனர்.

#### சமணம் பரவியதற்கான காரணங்கள்

இந்தியாவில் சமணம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான காரணங்கள்.

- மக்கள் பேசிய மொழியிலேயே சமணக் கருத்துக்கள் சொல்லப்பட்டன.
- புரிந்து கொள்ளும்படியான போதனைகள்.
- அரசர்கள் மற்றும் வணிகர்களின் ஆதரவு.
- சமணத் துறவிகளின் விடாமுயற்சி.

#### தமிழகத்தில் சமணத்தின் செல்வாக்கு

- பண்டைய தமிழ் இலக்கியங்கள் ஜைனம் என்பதை சமணம் என்று குறிப்பிடுகின்றன.
- மதுரை நகரிலிருந்து 15 கி.மீ தொலைவில் கீழக்குயில்குடி கிராமத்தில் சமணர் மலை என்ற பெயரில் ஒரு குன்று உள்ளது. சமணத் துறவிகளால் உருவாக்கப்பட்ட தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. இது இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்படும் நினைவு சின்னமாக உள்ளது.
- மதுரையிலிருந்து 25 கி.மீ தொலைவிலுள்ள அரிட்டாபட்டி என்ற கிராமத்தில் கலிஞ்சமலை உள்ளது. இதன் ஒரு பகுதியில் பாண்டவர் படுக்கை என்று அழைக்கப்படும் சமணர் குகைகள் உள்ளன. சமணத் துறவிகளுக்கான கற்படுக்கைகளே பாண்டவர் படுக்கை என அழைக்கப்படுகிறது.
- அறவோர் பள்ளி என்பது சமணத் துறவிகள் வாழ்ந்த இடங்கள் என மணிமேகலையில் குறிப்பு உள்ளது.
- கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் சமண பெண் துறவியான கவுந்தியடிகள் அவர்களை ஆசீர்வதித்து அவர்களுடன் சென்றதாக தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.


திருப்பருத்திக்குன்றம்


சித்தன்னவாசல்


சிதாறல் மலைக்கோவில்

- புகார், உறையூர், மதுரை, வஞ்சி (கருவூர்) காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சமண மடாலயங்கள் இருந்துள்ளன.
- ஜைனக் காஞ்சி – காஞ்சிபுரத்திலுள்ள திருப்பருத்திக் குன்றம் என்ற கிராமத்தில் இரண்டு பழமையான சமணக் கோவில்கள் உள்ளன. இக்கிராமம் முன்னர் ஜைனக் காஞ்சி என்று அழைக்கப்பட்டுள்ளது.
- திருப்பருத்திக்குன்றம் சித்தன்னவாசல் சிதாறல் மலைக்கோவில்

## பௌத்தம்

9IC5RP

### கௌதம புத்தர்

பௌத்த மதத்தை நிறுவியவர் கௌதம புத்தர் ஆவார். அவரின் இயற்பெயர் சித்தார்த்தர். மகாவீரரைப் போலவே இவரும் ஒரு சத்திரிய இளவரசர். அரசாட்சி செய்து கொண்டிருந்த சாக்கிய அரசவம்சத்தில் பிறந்தவர். சித்தார்த்தர் ஏழு நாள் குழந்தையாக இருந்தபோது அவருடைய தாயார் இயற்கை எய்தினார். எனவே அவருடைய சிற்றன்னை கௌதமி அவரை வளர்த்தார்.



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | – | சித்தார்த்தா |
| பிறப்பு | – | லும்பினி தோட்டம் நேபாளம் |
| பெற்றோர் | – | சுத்தோதனா, மாயாதேவி |
| இறப்பு | – | குசி நகரம், உ. பி. |

### நான்கு பெரும் காட்சிகள்

சித்தார்த்தா தனது 29வது வயதில் நான்கு துயரம் மிகுந்த காட்சிகளைக் கண்டார். அவை

- கூன் விழுந்த முதுகுடனும், கந்தல் ஆடைகளுடனும் கவனிப்பாரற்ற ஒரு முதியவர்.
- குணப்படுத்த முடியாத வியாதியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நோயாளி.
- இறந்துவிட்ட ஒரு மனிதனின் சடலம் அழுது கொண்டிருக்கும் அவனின் உறவினர்களால் இடுகாட்டிற்குக் கொண்டு செல்லப்படுதல்.
- ஒரு துறவி



### ஞானமடைதல்

புத்தர் (ஞானம் பெற்ற ஒருவர் என்று பொருள்) மனித வாழ்க்கை முழுவதும் துன்பங்களும் துயரங்களும் நிறைந்தது என உணர்ந்தார். அதனால் 29ஆம் வயதில் அரண்மனையை விட்டு வெளியேறி துறவறம் மேற்கொண்டார். ஆறுஆண்டுகள்தவமிருந்தார்.தன்னைத்தானே வருத்திக் கொள்வது விமோச்சினத்திற்கான பாதை அல்ல என்பதை உணர்ந்தார். அதனால் கயாவுக்கு அருகே ஒரு அரசமரத்தடியில் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தை மேற்கொண்டார்.



அவ்வாறு தியானத்தில் இருந்தபோது 49ஆம் நாள் அவர் ஞானம் பெற்றார். அப்போதிலிருந்து அவர் புத்தர் (ஞானம் பெற்றவர்) என அழைக்கப்பட்டார். சாக்கிய அரச குடும்பத்தைச் சேர்ந்த துறவி என்பதால் சாக்கிய முனி என்றும் அழைக்கப்பட்டார்.

வாரணாசிக்கு அருகேயுள்ள, சாரநாத் என்னும் இடத்தில் உள்ள மான்கள் பூங்கா என்ற இடத்தில் புத்தர் தனது முதல் போதனைச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இது 'தர்ம சக்ர பிரவர்த்தனா' அல்லது 'தர்ம சக்கரத்தின் பயணம்' என்று அழைக்கப்படுகின்றது.

### புத்தரின் நான்கு பேருண்மைகள்

- வாழ்க்கை துன்பங்கள், துயரங்கள் நிறைந்தது.
- ஆசையே துன்பங்களுக்கான காரணம்.
- ஆசையைத் துறந்துவிட்டால் துன்ப துயரங்களைப் போக்கி விடலாம்.
- சரியான பாதையைப் பின்பற்றினால் (எண்வகை வழிகள்) ஆசைகளை வென்று விடலாம்.

### புத்தரின் எண்வகை வழிகள்

- நல்ல நம்பிக்கை
- நல்ல எண்ணம்
- நல்ல பேச்சு
- நல்ல செயல்
- நல்ல வாழ்க்கை
- நல்ல முயற்சி
- நல்ல அறிவு
- நல்ல தியானம்

புத்தரின் போதனைகள் எளிமையாக இருந்தன. மக்கள் பயன்படுத்திய மொழியிலேயே போதிக்கப்பட்டன. மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றியதாக போதனைகள் இருந்ததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையோடு பொருத்திப் பார்த்தனர். புத்தர் சடங்குகளையும் வேள்விகளையும் எதிர்த்தார்.

### புத்தரின் போதனைகள்

- புத்தரின் போதனைகள் 'தம்மா' என்று குறிப்பிடப்படுகின்றன.
- கர்மா கோட்பாட்டை பௌத்தம் ஏற்றுக் கொண்டது. (ஒருவனுடைய செயல்களே அவனது வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிக்கிறது என்பதாகும்).
- புத்தர் கடவுளின் இருப்பை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. மறுக்கவும் இல்லை. ஆனால் பிரபஞ்ச விதிகளை நம்பினார்.
- நிர்வாண நிலை அடைவதே வாழ்க்கையின் இறுதி நோக்கம் என்று புத்தர் வலியுறுத்தினார்.
- புத்தர் அகிம்சையை வலியுறுத்தினார்.
- சாதிபடிநிலையினை புத்தர் நிராகரித்தார்.
- வாழ்க்கைச் சக்கரம் – உலகைப் பற்றிய புத்தரின் பார்வையை பிரதிபலிக்கிறது.

### பௌத்த சங்கம்

புத்தர் தனது கருத்துக்களைப் பரப்புவதற்காக சங்கம் ஒன்றை நிறுவினார். அதில் உறுப்பினர்களாக இருந்த துறவிகள் 'பிட்சுக்கள்'





6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 127 11-07-2019 12.41.10 PM

QB365 - Question Bank Software

என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

சைத்தியம் – ஒரு பௌத்தக் கோவில் அல்லது தியானக் கூடம்.

விகாரைகள் – மடாலயங்கள் / துறவிகள் வாழும் இடங்கள்.

ஸ்தூபி – புத்தருடைய உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடம். இவை கலைத்திறமை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் ஆகும்.

### பௌத்தப் பிரிவுகள்:

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| புத்தரின் சிலைகளையோ உருவப் படங்களையோ வணங்க மாட்டார்கள். | புத்தரின் உருவங்களை வணங்கினர். |
| மிக எளிமையாக இருப்பர். | விரிவான சடங்குகளைப் பின்பற்றினர். |
| தனிமனிதர்கள் முக்தி அடைவதே தங்களின் நோக்கம் என்று நம்பினர். | அனைத்து உயிரினங்களும் முக்தி பெறுவதே தங்களது நோக்கம் என நம்பினர். |
| பிராகிருத மொழியைப் பயன்படுத்தினர். | சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர். |
| ஹீனயானம் தேரவாதம் என்றும் அழைக்கப்படுகிறது. இப்பிரிவு இலங்கை, மியான்மர் (பர்மா) மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியது. | இப்பிரிவு மத்திய ஆசியா, திபெத், சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் பரவியது. இந்நாடுகளில் மத்திம வழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. |

### பௌத்தம் பரவியதற்கான காரணங்கள்

- புத்தரின் போதனைகள் மிக எளிமையாக. உள்ளூர் மக்கள் பேசிய மொழிகளில் இருந்தன.
- விரிவான மதச் சடங்குகளை பௌத்தம் நிராகரித்தது. மாறாக பண்டைய வேதமதம் செலவு மிக்க சடங்குகளையும் வேள்விகளையும் நடத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தியது.
- மக்கள் தம்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தியது
- புத்தரின் கருத்துக்களைப் பரப்பியதில் பௌத்த சங்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.
- அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் போன்ற அரசர்கள் பௌத்தம் பரவுவதற்கு ஆதரவு அளித்தனர்.
- பௌத்த விகாரைகள் அல்லது மடாலயங்கள் சிறந்த கல்வி மையங்களாகச் செயல்பட்டன. அவற்றில் ஒன்று நாளந்தா. அங்கு சீனப் பயணி யுவான்–சுவாங் பல ஆண்டுகள் தங்கி கல்வி பயின்றார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**சுவரோவியங்கள்**
மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள அஜந்தா குகைகளின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதக கதைகளை சித்தரிக்கின்றன.



இடை வழி (நடுவு நிலை வழி): உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 128 11-07-2019 12.41.10 PM

| சமணமும் – பௌத்தமும் – ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் | | |
|---|---|---|
| ஒற்றுமைகள் | வேற்றுமைகள் | |
| | சமண மதம் | பௌத்த மதம் |
| ■ மகாவீரர், புத்தர் இருவருமே அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்கள் அரச குடும்ப உரிமைகளை நிராகரித்து, துறவு வாழ்க்கையைத் தேர்வு செய்தனர்.<br>■ வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தனர்.<br>■ மக்கள் பேசிய மொழிகளில் போதித்தனர்.<br>■ அனைத்து சாதியினரையும், பெண்களையும், சீடர்களாக ஏற்றுக் கொண்டனர்.<br>■ இரத்த பலிகளை எதிர்த்தனர்.<br>■ 'கர்மா' என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.<br>■ மதச் சடங்குகளை நடத்துவதன் மூலம் முக்தி அடையமுடியும் என்பதற்கு மாறாக சரியான நடத்தையும் சரியான அறிவுமே முக்திக்கான வழி எனக் கூறினர். | ■ சமணம் தீவிரமான துறவறத்தைப் பின்பற்றியது.<br>■ இந்தியாவில் மட்டுமே இருந்தது.<br>■ கடவுள் இருப்பதாக சமணம் நம்பவில்லை. ஆனால் ஒவ்வொரு யிரிலும் ஜீவன் இருப்பதை நம்பியது | ■ பௌத்தம் இடைப்பட்ட வழியைப் பின்பற்றியது.<br>■ உலகத்தின் பல பகுதிகளிலும் பரவியது.<br>■ அனாத்மா (எல்லையற்ற ஆன்மா) அனித்யா (நிலையாமை) ஆகிய கருத்துகளுக்கு அழுத்தம் வழங்கியது. |

**பௌத்த மாநாடுகள் – இடம்**

| | | |
|---|---|---|
| முதலாவது | – | இராஜகிருகம் |
| இரண்டாவது | – | வைசாலி |
| மூன்றாவது | – | பாடலிபுத்திரம் |
| நான்காவது | – | காஷ்மீர் |

### தமிழ்நாட்டில் பௌத்தத்தின் செல்வாக்கு

- சமணத்திற்கு மிகவும் பிற்பட்டே தமிழகத்தில் பௌத்தம் பரவியது.
- சங்க காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பௌத்த இலக்கியமாகும்.
- மணிமேகலையில் காஞ்சிபுரம் விரிவாகச் விவரிக்கப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் புகழ் பெற்ற ஒரு பௌத்த மையமாகும். பௌத்த தர்க்கவியல் அறிஞரான தின்னகர் மற்றும் நாளந்தா பல்கலைக் கழகத்தின் மிகப்பெரும் அறிஞர் தர்மபாலர் இவ்வூரைச் சேர்ந்தவர் ஆவார்.
- கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் காஞ்சிபுரத்திற்கு வருகை தந்தார். அங்கு அசோகரால் கட்டப்பட்ட 100 அடி உயரமுள்ள ஸ்தூபியை அவர் பார்த்தாய்க் குறிப்பிட்டுள்ளார்.



புத்தர் சிலை–நாகப்பட்டினம்



காஞ்சிபுரம் அருகே பல்லூரில் காணப்பட்ட புத்தர் சிலை

QB365 - Question Bank Software

## ஜாதகக் கதைகள்

ஜாதகக் கதைகள் புகழ் பெற்றவை. புத்தர் முந்தைய பிறவிகளில் மனிதராகவும். விலங்காகவும் இருந்ததைக் குறித்த கதைகளாகும். இவை அறநெறிகளைக் கூறுவன ஆகும்.

## மரங்கொத்திப் பறவையும் சிங்கமும் (ஜாதகக் கதை)





முன்னொரு காலத்தில் ஒரு மரங்கொத்திப் பறவையும் ஒரு சிங்கமும் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் சிங்கம் ஒரு காட்டு எருமையை வேட்டையாடி உண்ணத் தொடங்கியது. அவ்வாறு உண்ணும்போது ஒரு பெரிய எலும்பு சிங்கத்தின் தொண்டையில் சிக்கிக் கொண்டது. சிங்கத்தால் அந்த எலும்பை எடுக்க முடியவில்லை. சிங்கத்திற்குக் கடுமையாக வலித்தது.



இரக்க மனம் கொண்ட மரங்கொத்திப் பறவை சிங்கத்திற்கு எலும்பை எடுக்க உதவி செய்வதாகக் கூறியது. இருந்தபோதிலும் எலும்பை எடுக்கும்போது தன்னை சிங்கம் விழுங்கிவிட மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் மட்டுமே எலும்பை எடுக்க முடியும் என்று மரங்கொத்தி கூறியது. சிங்கமும் மகிழ்ச்சியாக ஒத்துக்கொண்டு மரங்கொத்தியின் முன்னால் தனது வாயைத் திறந்தது. சிங்கத்தின் வாய்க்குள் நுழைந்த மரங்கொத்தி எளிதாக அந்த எலும்பை வெளியே எடுத்துவிட்டது. சிங்கமும் தனது வாக்குறுதியைக் காப்பாற்றியது மரங்கொத்திப் பறவை பறந்து சென்றது.





பிறிதொருநாள் அதே சிங்கம் மற்றொரு காட்டெருமையைக் கொன்றது. சிங்கத்தோடு சேர்ந்து உண்ணலாம் என்று நினைப்பில் மரங்கொத்தி தனக்கும் சிறிது மாமிசம் தருமாறு சிங்கத்தைக் கேட்டது. மரங்கொத்தி ஏமாற்றம் அடையும் வகையில் சிங்கம் தனது உணவில் மரங்கொத்திக்குப் பங்குதர அப்பட்டமாக மறுத்ததோடு, எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்னிடம் மறுபடியும் சகாயம் செய்யும்படி கேட்பாய்? உனக்கு நான் ஏற்கனவே நிறையச் செய்தாயிற்று என்றது.



சிங்கம் எதைப்பற்றிப் பேசுகின்றது என்று மரங்கொத்திக்குப் புரியவில்லை. பின்னர் சிங்கம் தெளிவு படுத்தியது. "நீ எனது தொண்டையிலிருந்து எலும்பை எடுக்கிறபோது, உன்னை விழுங்காமல் விட்டுவிட்டேன். அதற்காக நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டும். இப்போது என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதே போய்விடு" என்றது. "நன்றியில்லாத இந்த ஜென்மத்திற்கு உதவி செய்தது என்னுடைய தவறு" என மரங்கொத்தி தனக்குத்தானே சொல்லிக்கொண்டது. மேலும் இதைப்போலத் தகுதியற்ற ஒருவரின்மேல் கோபம் கொள்வதில் அல்லது வருத்தம் அடைவதில் எப்பயனுமில்லை என்று கூறிப்பறந்தது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 130 11-07-2019 12.41.11 PM

## உலகம் அந்நாளில் கி.மு. (பொ.ஆ.மு) 6ம் நூற்றாண்டு

கன்பூசியஸ் (குங் பு த்சே)



சீனாவில் கன்பூசியனிசம்

ஜொராஸ்டர்



பாரசீகத்தில் ஜொராஸ்டிரியனிசம்

### மீள்பார்வை

- இந்தியாவில் கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு அறிவு மலர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் ஏற்பட்ட காலமாகும்.
- சமணம் 24 தீர்த்தங்கர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கோட்பாடு ஆகும்.
- மகாவீரர் மூன்று நெறிகளை வற்புறுத்திக் கூறுகிறார். அவை நன்னம்பிக்கை, நல்லறிவு மற்றும் நற்செயல்.
- பௌத்தத்தை நிறுவியவர் கௌதம புத்தர்.
- புத்தரின் போதனைகள் தம்மா (தர்மம்) என்று குறிப்பிடப்படுகின்றன.
- பௌத்தம் இந்திய எல்லைகளைத் தாண்டியது. ஆனால் சமணம் இந்தியாவுக்குள்ளாகவே இருந்தது.
- சமணம் மற்றும் பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கை அகிம்சை ஆகும்.

### அருஞ்சொல் விளக்கம்

| | |
|---|---|
| மூடநம்பிக்கைகள் | – Superstitious beliefs |
| ஆசான் | – Preceptor |
| கோட்பாடு | – Doctrine |
| நல்லொழுக்கம் | – Virtuous |
| புனித நூல் | – Sacred book |
| ஈரமான சுவரின்மேல் வண்ணக்கலவைகள் கொண்டு வரையப்படும் ஓவியங்கள் | – Frescoes |
| சடலம் | – Corpse |
| துன்பம் மற்றும் பிறப்பிலிருந்து விடுதலை (நிர்வாண நிலை) | – Nirvana |

## பயிற்சிகள்

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.**

1. பௌத்த நூல்களின் பெயர் என்ன?

அ) அங்கங்கள் ஆ) திரிபீடகங்கள் இ) திருக்குறள் ஈ) நாலடியார்

2. சமணத்தின் முதல் தீர்த்தங்கரர் யார்?

அ) ரிஷபர் ஆ) பார்சவநாதர் இ) வர்தமானர் ஈ) புத்தர்

3. சமணத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?

அ) 23 ஆ) 24 இ) 25 ஈ) 26

4. மூன்றாம் பௌத்தசபை எங்குக் கூட்டப்பட்டது?

அ) ராஜகிரகம் ஆ) வைசாலி இ) பாடலிபுத்திரம் ஈ) காஷ்மீர்

5. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?

அ) லும்பினி ஆ) சாரநாத் இ) தட்சசீலம் ஈ) புத்தகயா

**II. கூற்றோடு காரணத்தைப் பொருத்துக / பொருத்தமான விடையை தேர்ந்தெடு.**

1. **கூற்று:** ஒரு சாதாரண மனிதரால் உபநிடதங்களைப் புரிந்து கொள்ள இயலாது.

**காரணம்:** உபநிடதங்கள் மிகவும் தத்துவம் சார்ந்தவை.

அ) கூற்றும் அதன் காரணமும் சரியானவை.
ஆ) கூற்று தவறானது.
இ) கூற்று சரியானது; ஆனால் அதற்கான காரணம் தவறானது.
ஈ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

2. **கூற்று:** ஜாதகங்கள் புகழ் பெற்ற கதைகளாகும்

**காரணம்:** அஜந்தா குகையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கின்றன.

அ) கூற்றும் அதற்கான காரணமும் சரி.
ஆ) கூற்று தவறு.
இ) கூற்று சரி; ஆனால் அதற்கான காரணம் தவறு.
ஈ) கூற்றும் அதற்கான காரணம் ஆகிய இரண்டும் தவறு.

9IL1TC

3. சரியான விடையைக் கண்டறியவும்.

விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?

1. கல்விக் கூடமாக
2. பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்
3. புனிதப் பயணிகள் தங்குவதற்காக
4. வழிபாட்டுக் கூடம்

அ) 2 சரி ஆ) 1 மற்றும் 3 சரி இ) 1, 2, 4 ஆகியவை சரி ஈ) 1 மற்றும் 4 சரி





6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 132 11-07-2019 12.41.11 PM

4. சமணமும் பௌத்தமும் உருவாவதற்கு கீழ்க்கண்டக் கூற்றுகளைக் காரணமாகக் கருதலாமா?

1. வேள்விச்சடங்குகள் பெருஞ்செலவு மிக்கதாக இருந்தன.
2. மூடநம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சாதாரண மனிதர்களைக் குழப்பமுறச் செய்தன.

மேற்சொல்லப்பட்ட கூற்றில்/கூற்றுகளில், எது/எவை சரியானது/சரியானவை.

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) 1 மற்றும் 2 ஈ) 1 மற்றும் 2 ம் இல்லை

5. சமணம் குறித்த கீழ்க் கண்டவற்றுள் எது சரியானது?

அ) உலகைக் கடவுள் தோற்றுவித்தார் என்பதைச் சமணம் மறுக்கிறது.

ஆ) உலகைத் தோற்றுவித்தவர் கடவுள் என்பதை சமணம் ஒத்துக் கொள்கிறது.

இ) சமணத்தின் அடிப்படைத் தத்துவம் சிலைவழிபாடாகும்

ஈ) இறுதித்தீர்ப்பு எனும் நம்பிக்கையைச் சமணம் ஒத்துக் கொள்கிறது.

6. பொருந்தாததை வட்டமிடு.

பார்சவா, மகாவீரர், புத்தர், ரிஷபர்

7. தவறான இணையைக் கண்டுபிடி

அ) அகிம்சை – காயப்படுத்தாமல் இருத்தல்

ஆ) சத்யம் – உண்மைபேசுதல்

இ) அஸ்தேயம் – திருடாமை

ஈ) பிரம்மச்சரியம் – திருமண நிலை

8. சித்தார்த்த கௌதமர் குறித்து கீழே காண்பனவற்றுள் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் சரி.

அ) இந்து மதத்தை நிறுவியவர் அவரே.

ஆ) அவர் நேபாளத்தில் பிறந்தார்.

இ) அவர் நிர்வாணம் அடைந்தார்.

ஈ) அவர் சாக்கியமுனி என்று அறியப்பட்டார்.

## III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மகாவீரரின் கோட்பாடு _____________ என்று அழைக்கப்படுகிறது.
2. _____________ என்பது துன்பங்களிலிருந்தும் மறுபிறவியிலிருந்தும் விடுதலை பெற்ற ஒரு நிலை.
3. பௌத்தத்தை நிறுவியவர் _____________ ஆவார்.
4. காஞ்சிபுரத்திலுள்ள, திருப்பருத்திக்குன்றம் என்னும் கிராமம் ஒரு காலத்தில் _____________ என்று அழைக்கப்பட்டது.
5. _____________ என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.

QB365 - Question Bank Software

**IV. சரியா? தவறா?**

1. புத்தர் கர்மாவை நம்பினார்.
2. புத்தருக்குச் சாதி முறை மேல் நம்பிக்கை இருந்தது.
3. கௌதம சுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார்.
4. விகாரைகள் என்பன கோவில்களாகும்.
5. அசோகர் பௌத்த மதத்தைப் பின்பற்றினார்.

**V. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. அங்கங்கள் | – | வர்தமானர் |
| 2. மகாவீரர் | – | துறவிகள் |
| 3. புத்தர் | – | பௌத்தக் கோவில்கள் |
| 4. சைத்தியம் | – | சாக்கியமுனி |
| 5. பிட்சுக்கள் | – | சமண நூல் |

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
2. பௌத்தத்தின் இரு பிரிவுகள் எவை?
3. 'ஜினா' என்பதின் பொருள் என்ன?
4. பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் உள்ள இரண்டு பொதுவான கூறுகளை எழுதுக.
5. பௌத்த சங்கத்தைப் பற்றி குறிப்பெழுதுக.
6. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தற்கு வருகை தந்த சீனப் பயணியின் பெயரைக் குறிப்பிடுக.
7. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெண் ஜைனத் துறவியின் பெயர் என்ன?

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. சமணத்தின் முக்கியமான ஐந்து நடத்தை விதிகள் எவை?
3. பௌத்தத்தின் நான்கு பேருண்மைகளை எடுத்துரைக்கவும்.
4. பௌத்தத்தின் பிரிவுகளான ஹீனயான, மகாயான பிரிவுகளிடையே உள்ள ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுதவும்.
5. சங்ககாலத்தில் பௌத்தமும் சமணமும் செழித்தோங்கின. ஒவ்வொன்றுக்கும் ஏதாவது இரண்டு சான்றுகளைத் தருக.

**VIII. உயர் சிந்தனை வினா**

1. கர்மா – ஒரு மனிதனின் செயல்கள். ஏதாவது 10 நல்ல செயல்களைக் குறிப்பிடுக.

**IX. மாணவர் செயல்பாடு.**

1. ஜாதகக் கதைகளில் ஒன்றை வாசிக்கவும். அதை நீயே சொந்தமாக எழுதவும்.



QB365 - Question Bank Software

**2.** கீழ்க்கண்ட தலைப்புகளில் ஓர் அட்டவணை தயார் செய்யவும்.

| மதம் | நிறுவியவர் பெயர், (படத்துடன்) | அவர்களின் பெற்றோர் பெயர் | முக்கியக் கொள்கைகளில் ஏதாவது ஒன்று | பிரிவுகள் | சின்னம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

**3.** கீழ்க்காணும் வார்த்தைகளைப் பொருத்தமான கட்டத்திற்குள் இடவும்.

வார்த்தைகள்: ஜினா, மகாயானா, தீர்த்தங்கரர்கள். ஸ்தூபிகள், நிர்வாணா, திகம்பரர், திரிபீடகங்கள் ஆகமசித்தாந்தம்.

| சமணம் | பௌத்தம் |
|---|---|
| | |

**4.** தகவல் அட்டை தயாரித்தல் – செயல்பாடு

கீழ்க்காணும் மதங்கள் குறித்த செய்திகளைக் கொண்ட அட்டைகள் தயார் செய்யவும்.

இந்துமதம், கிறித்துவம், இஸ்லாம், சமணம், பௌத்தம்

**5.** 'வென்' வரைபடம் மூலம் சமணத்துக்கும் பௌத்தத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளைச் சுட்டிக்காட்டுக



**6.** குறுக்கெழுத்து புதிர்




**இடமிருந்து வலம்**

1. மூன்று ரத்தினங்களுள் ஒன்று
2. புத்தரின் போதனைகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன
3. ஒரு சிறந்த கல்வி மையம்
4. புத்தர் ஞானம் பெற்ற இடம்
5. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமல் இருப்பது

**வலமிருந்து இடம்**

6. சித்தார்த்தரின் தாயார்
7. மனித வாழ்க்கையை அவரின் செயலே தீர்மானிக்கிறது

**மேலிருந்து கீழ்**

8. லும்பினி __________இல் உள்ளது
9. புத்த வழிபாட்டுக் கூடம்
10. பிறப்பு இறப்பு ஆகியவற்றில் இருந்து விடுதலை
11. கௌதம சுவாமியால் தொகுக்கப்பட்ட சமணநூல்

QB365 - Question Bank Software

## X. வாழ்க்கைத் திறன்கள்.

பௌத்தம், சமணம் குறித்த கதை அட்டைகளைத் தயாரிக்கவும் (மாதிரி)

| | | |
|---|---|---|
| இளமைப் பருவம்  | நான்கு பேருண்மைகள் | சக்கரம் – எட்டு நெறிகள்  |
| புத்தரின் போதனைகள்  | பௌத்த சங்கம் | பௌத்தப் பிரிவுகள் |

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| வெள்ளைநிற ஆடை அணிந்த சமணத் துறவிகள் __________ என அழைக்கப்பட்டனர். விடை: | புத்தர் என்பதன் பொருள் என்ன? விடை: | சமணத்தின் 24வது தீர்த்தங்கரர் யார்? விடை: |
| 'தர்ம சக்கர பிரவர்தனா' உரை நிகழ்த்தியவர் யார்? விடை: | பௌத்தத்தில் எத்தனை பேருண்மைகள் உள்ளன? விடை: | எந்த மதத்தின் போதனைகள் நான்கு பேருண்மைகளையும் எட்டு நெறிகளையும் கொண்டுள்ளன? விடை: |
| புத்தரின் பல்வேறு பிறவிகள் பற்றிக் கூறுகிற மிகப் பழமையான பௌத்த நூல் எது? விடை: | தமிழ்நாட்டில் சமண மடாலயங்கள் இருந்த ஏதேனும் 4 இடங்களைக் கூறுக. விடை: | இரட்டைக் காப்பியங்களில் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக விடை: |



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 136 11-07-2019 12.41.11 PM

QB365 - Question Bank Software

# இணையச் செயல்பாடு

**நிகர்நிலை சுற்றுலா – சித்தன்னவாசல்**

இச்செயல்பாட்டின் மூலம் தமிழ்நாட்டின் குகை ஓவியங்களைக் காண நிகர்நிலை சுற்றுலா செல்வோமா!




*படி –1:* கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப்பக்கத்திற்குச் செல்க.

*படி – 2:* நிகர்நிலை சுற்றுலா பக்கத்தைப் பார்க்கலாம். திரையில் தோன்றும் "Adobe Flash Player" என்பதை அனுமதிக்க.

*படி – 3:* "Slide View" என்பதைத் திறந்து, இயக்கவும்.

*படி – 4:* சிவப்பு நிற அம்புக் குறியீட்டைச் சொடுக்கிக் குகை ஓவியங்களைக் காண்க..



படி–1




படி–2



படி–3




படி–4

*உரலி:*

http://view360.in/virtualtour/sithannavasal/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_2.indd 137 11-07-2019 12.41.12 PM

QB365 - Question Bank Software

அலகு 3

# குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை



## கற்றல் நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்றுக் கொள்வதன் வழியாக,

- ஜனபதங்களும் மகாஜனபதங்களும் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த காரணிகளை அறிதல்.
- குடித்தலைமையில் இருந்து முடியாட்சி அரசுகளாக மாற்றம் பெற்ற இந்திய அரசின் பரிணாம வளர்ச்சியை புரிந்து கொள்ளல்.
- மௌரியப் பேரரசின் மகத்துவங்களை அறிதல்.
- இக்காலத்து நிர்வாகமுறையின் முக்கிய அம்சங்கள், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தின் இயல்புகளை அறிதல்.
- அசோகரின் கொள்கையான 'தம்மா' (தர்மம்)வைப் பற்றிய அறிவைப் பெறுதல்.
- மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை அறிதல்.

9IUHUZ

## கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டின் முக்கியத்துவம்

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் புதிய பிராந்திய அரசுகள் உருவாயின. இதன் விளைவாக கங்கைச் சமவெளியில் வாழ்ந்த மக்களின் அரசியல் சமூகப் பொருளாதார வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வட இந்தியாவில் புதிய அறிவு மலர்ச்சி தோன்றி வளரத் தொடங்கியது. மகாவீரரும் கௌதம புத்தரும் இந்த புது எழுச்சிக்கு வித்திட்டனர்.

## சமூகத்தை மாற்றியதில் இரும்பின் பங்கு

சமூக மாற்றத்தில் இரும்பு குறிப்பிடத்தக்கப் பங்கினை வகித்தது. கங்கைச் சமவெளியின் வளமான மண், இரும்பினாலான கொழுமுனையின் பயன்பாடு ஆகியவற்றால் வேளாண் உற்பத்தி அதிகரித்தது. இத்துடன் இரும்பு, கைவினைப் பொருட்களின் உற்பத்தியை எளிதாக்கியதோடு அதிகரிக்கவும் உதவியது. வேளாண் உபரியும், அதிக அளவிலான கைவினைப் பொருட்களின் உற்பத்தியும் வணிக மற்றும் பரிமாற்ற மையங்களைத் தோற்றுவித்தன. இவ்வளர்ச்சி நகரங்களும் பெருநகரங்களும் உருவாவதற்கு வழி வகுத்தது. இரும்பைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட நிபுணத்துவம் மற்றைய மகாஜனபதங்களைவிட மகதம் எழுச்சி பெற முக்கிய காரணமாயிற்று. இவ்வாறாக மகதம் தனக்கான ஒரு பேரரசை உருவாக்கியது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 138 16-07-2019 2.35.16 PM

| | |
|---|---|
| 'கணா' என்னும் சொல் 'சரிசமமான சமூக அந்தஸ்தைக் கொண்ட மக்களைக் குறிக்கும். 'சங்கா' என்றால் 'மன்றம்' என்று பொருள். கண சங்கங்கள் சிறிய நிலப்பகுதியில் மேட்டுக்குடி மக்களைக் கொண்ட குழுவால் ஆளப்பட்டது. கண சங்கங்கள் சமத்துவ மரபுகளைப் பின்பற்றின. | 'முடியாட்சி' அரசு என்பது ஒரு நிலப்பகுதியை அரசனோ அல்லது அரசியோ ஆள்வதாகும். முடியாட்சி முறை அரசில் ஒரு குடும்பம் நீண்ட காலம் ஆட்சி செய்யும்போது அது அரச வம்சமாக மாறுகிறது. இந்த அரசுகள் வைதீக வேத மரபுகளைப் பின்பற்றின. |

## கணசங்கங்களும் அரசுகளும்

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் இருவகைப்பட்ட அரசுகள் செயல்பட்டன.

- கணசங்கங்கள் – முடியாட்சிமுறைக்கு முன்னால் மேட்டுக்குடி மக்கள் அடங்கிய குழுவின் ஆட்சி.
- முடியாட்சி அரசுகள் – மன்னராட்சி முறையில் அமைந்தவை

## ஜனபதங்களும் மகாஜனபதங்களும்

மக்கள் குழுவாக குடியேறிய தொடக்ககால இடங்களே ஜனபதங்கள் ஆகும். பின்னர் ஜனபதங்கள் குடியரசுகளாகவோ, சிற்றரசுகளாகவோ ஆனது. கங்கைச் சமவெளியில் இரும்பின் பரவலான பயன்பாட்டால் பரந்து விரிந்த மக்கள் வாழும் பகுதிகள் தோன்றின. இதனால் ஜனபதங்கள் மகாஜனபதங்களாக மாற்றம் பெற்றன.

## பதினாறு மகாஜனபதங்கள் ("பெரும் அரசுகள்")

கி.மு. (பொ.ஆ.மு.) ஆறாம் நூற்றாண்டில் சிந்து கங்கைச் சமவெளியில் பதினாறு மகாஜனபதங்கள் இருந்தன. இது நாடோடி வாழ்க்கை முறையையும், இரத்த உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்த ஒரு சமூகம், வேளாண் சமூகமாக மாறத் தொடங்கிய காலம் ஆகும். அத்துடன் வணிகம் செய்யவும், பரிமாற்றம் செய்யவும் தொடங்கியது. எனவே நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் வலுவான ஆட்சி அவசியமாயிற்று. அதற்கு மையப்படுத்தப்பட்ட அரசு தேவைப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

**16 மகாஜனபதங்கள்**

குரு, பாஞ்சாலம், அங்கம், மகதம், வஜ்ஜி, காசி, மல்லம், கோசலம், அவந்தி, சேதி, வத்சம், மத்சயம், சூரசேனம், அஸ்மகம், காந்தாரம் மற்றும் காம்போஜம்.

இக்காலத்தில் நான்கு முக்கிய மகாஜனபதங்கள் இருந்தன.

அவைகள்:–

- மகதம் – பீகார்
- அவந்தி – உஜ்ஜைனி
- கோசலம் – கிழக்கு உத்திரப்பிரதேசம்
- வத்சம் – கோசாம்பி, அலகாபாத்

இந்த நான்கு மகாஜனபதங்களில் மகதம் ஒரு பேரரசாக உருவானது.

## மகதத்தின் எழுச்சிக்கான காரணங்கள்

- மகதம் கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியில் அமைந்து இருந்தது. வளம் மிகுந்த இந்தச் சமவெளி வேளாண் விளைச்சலை அதிகரித்தது. இது அரசுக்கு நிலையான, கணிசமான வருமானத்தை அளித்தது.
- அடர்ந்த காடுகள் கட்டுமானங்களுக்குத் தேவையான மரங்களையும் படைகளுக்குத் தேவையான யானைகளையும் வழங்கியது.
- அதிக அளவிலான இயற்கை வளங்கள் குறிப்பாக இரும்பு ஆயுதங்கள் செய்யவும் மேம்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியது.

QB365 - Question Bank Software




மகதப் பேரரசு

- வணிக, வர்த்தக வளர்ச்சி மக்களை இடம்விட்டு இடம் சென்று கலை மற்றும் தொழில் மையங்களில் குடியேறச் செய்தது.
- இவற்றின் விளைவாக நகரமயமாதல் ஏற்பட்டு மகதம் பேரரசாக எழுச்சி பெற்றது.

## பண்டைய மகதத்தின் அரச வம்சங்கள்

நான்கு அரச வம்சங்கள் மகதத்தை ஆண்டன.

- ஹரியங்கா வம்சம்
- சிசுநாக வம்சம்
- நந்த வம்சம்
- மௌரிய வம்சம்

## ஹரியங்கா வம்சம்

மகதத்தின் படிப்படியான அரசியல் மேலாதிக்க வளர்ச்சி ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த பிம்பிசாரர் காலத்தில் தொடங்கியது. படையெடுப்பு, திருமண உறவு ஆகிய வழிகளில் பிம்பிசாரர் லிச்சாவி, மதுரா மற்றும் கோசல ஆகிய பகுதிகளில் தமது அரசை விரிவு படுத்தினார். அவருடைய மகன் அஜாதசத்ரு (புத்தரின் சமகாலத்தவர்) ராஜகிரகத்தில் முதல் பௌத்த சபை மாநாட்டைக் கூட்டினார். அவருடைய வாரிசான உதயன் பாடலிபுத்திரத்தில் புதிய தலைநகருக்கான அடித்தளமிட்டார்.

## சிசுநாக வம்சம்

ஹர்யங்கா அரச வம்சத்தைத் தொடர்ந்து சிசுநாக அரச வம்சத்தினர் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இவ்வம்சத்தைச் சேர்ந்த அரசர் காலசோகா தலைநகரை ராஜகிரகத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றினார். இவர் இரண்டாம் பௌத்த மாநாட்டை வைசாலியில் கூட்டினார்.

## நந்த வம்சம்

நந்தர்களே இந்தியாவில் முதன்முதலாகப் பேரரசை உருவாக்கியவர்கள் ஆவர். முதல் நந்தவம்ச அரசர் மகாபத்ம நந்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து அவருடைய எட்டு மகன்களும் ஆட்சி செய்தனர். அவர்கள் நவநந்தர்கள் (ஒன்பது நந்தர்கள்) என்றழைக்கப்பட்டனர். கடைசி அரசரான தனநந்தர் சந்திரகுப்த மௌரியரால் வெற்றி கொள்ளப்பட்டார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

### நாளந்தா–யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னம்

நாளந்தா பண்டைய மகத நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஆகும். குப்தர்களின் காலத்தில் அது மிகப் புகழ் பெற்ற கல்வி மையமாகத் திகழ்ந்தது. நாளந்தா என்னும் சமஸ்கிருதச் சொல் நா+அலம்+தா என்ற மூன்று சமஸ்கிருத சொற்களின் இணைப்பில் உருவானது. இதன் பொருள் 'வற்றாத அறிவை அளிப்பவர்' என்பதாகும்.

## மௌரியப் பேரரசு

**சான்றுகள்**

| | |
|---|---|
| தொல்லியல் சான்றுகள் | முத்திரை பதிக்கப்பட்ட நாணயங்கள் |
| கல்வெட்டுகள் | அசோகரின் கல்வெட்டுப் பேராணைகள், ஜுனாகத் கல்வெட்டு ஆகியவை. |
| மதச்சார்பற்ற இலக்கியங்கள் | கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்<br>விசாகதத்தரின் முத்ராராட்சஷம்<br>மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் |
| மதம் சார்ந்த இலக்கியங்கள் | சமண, பௌத்த நூல்கள், புராணங்கள் |
| வெளிநாட்டுச் சான்றுகள் | தீபவம்சம், மகாவம்சம், இண்டிகா. |



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 140 16-07-2019 2.35.16 PM

QB365 - Question Bank Software

உங்களுக்குத் தெரியுமா?

**மெகஸ்தனிஸ்**

கிரேக்க ஆட்சியாளர் செலுக்கஸ் நிகேட்டரின் தூதுவராக, சந்திரகுப்த மௌரிய அரசவையில் இருந்தவர். பதினான்கு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார். அவர் எழுதிய நூலின் பெயர் இண்டிகா. இந்நூல் மௌரியப் பேரரசைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள ஒரு முக்கியச் சான்றாகும்.

## மௌரியப் பேரரசு – இந்தியாவின் முதல் பேரரசு

| | |
|---|---|
| **தலைநகர்** | பாடலிபுத்திரம் (தற்போதைய பாட்னா) |
| **அரசு** | முடியாட்சி |
| **வரலாற்றுக் காலம்** | ஏறத்தாழ கி.மு. (பொ.ஆ.மு.) 322 முதல் 187 வரை |
| **முக்கிய அரசர்கள்** | சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர். |

உங்களுக்குத் தெரியுமா?

**பாடலிபுத்திரத்தின் பிரம்மாண்டம்**

மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரான பாடலிபுத்திர நகருக்கு 64 நுழைவு வாயில்களும் 570 கண்காணிப்பு கோபுரங்களும் இருந்தன.

## சந்திரகுப்த மௌரியர்

மௌரியப் பேரரசே இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும். சந்திரகுப்த மௌரியர் இப்பேரரசை மகதத்தில் நிறுவினார். பத்ரபாகு எனும் சமணத்துறவி சந்திரகுப்தரை தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்றார். சந்திரகுப்தர் சரவணபெலகொலாவில் (கர்நாடகா) சமணச் சடங்கான சல்லேகனா செய்து உயிர் துறந்தார். (சல்லேகனா என்பது உண்ணா நோன்பிருந்து உயிர் துறத்தல் ஆகும். இது ஒரு சமணச் சடங்கு முறையாகும்.)

## பிந்துசாரார்

பிந்துசாரரின் இயற்பெயர் சிம்ஹசேனா. இவர் சந்திரகுப்த மௌரியரின் மகன் ஆவார். கிரேக்கர்கள் பிந்துசாரரை அமிர்தகதா என்று அழைத்தனர். அதன் பொருள் 'எதிரிகளை அழிப்பவன்' என்பதாகும். பிந்துசாரரின் ஆட்சியின்போது மௌரியரின் ஆட்சி இந்தியாவின் பெரும்பகுதியில் பரவியது. அவர் தனது மகன் அசோகரை உஜ்ஜைனியின் ஆளுநராக நியமித்தார். அவருக்குப்பின் அசோகர் மகதத்தின் அரசரானார்.

## அசோகர்

மௌரிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர் ஆவார். அவர் 'தேவனாம்பிரியர்' என்றழைக்கப்பட்டார். 'கடவுளுக்குப் பிரியமானவன்' என்பது இதன் பொருள் ஆகும்.

அசோகர் கி.மு. (பொ.ஆ.மு.) 261ல் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தார். அப்போரில் வென்று கலிங்கத்தைக் கைப்பற்றினார். அப்போரின் பயங்கரத்தை அசோகரே தன்னுடைய 13வது பாறைக் கல்வெட்டில் விவரித்துள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா?

"அசோகர் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல இன்று வரை ஒளிர்கிறார்"

**H.G. வெல்ஸ் – வரலாற்றறிஞர்**

**சந்த அசோகர் (கொடிய அசோகர்) தம்ம அசோகராக (நீதிமான் அசோகர்) மாற்றம்:**

கலிங்கப் போருக்குப் பின்னர் அசோகர் ஒரு பௌத்தர் ஆனார். தர்மத்தின் கொள்கையை மக்களுக்குப் பரப்புவதற்காக அவர் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சுற்றுப் பயணங்கள் (தர்மயாத்திரைகள் – Dharmayatras) மேற்கொண்டார். அசோகரின் இரண்டாம் தூண் கல்வெட்டில் தர்மத்தின் பொருள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. அது அனைத்து மதங்களின் சாரமாகவுள்ள மிக



QB365 - Question Bank Software




உயர்ந்த கருத்தான மனிதாபிமானத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

கீழ்க்கண்டவைகளுக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவை:

- இரக்க உணர்வு
- அறக் கொடை
- தூய்மை
- புனிதத்தன்மை
- சுய–கட்டுபாடு
- உண்மையுடைமை
- மூத்தோர், ஆசிரியர், பெற்றோர் ஆகியோரிடத்தில் மரியாதையுடனும், பணிவுடனும் நடந்து கொள்ளல்.

உங்களுக்குத் தெரியுமா?

### சிங்கமுகத் தூண்

சாரநாத்திலுள்ள அசோகருடைய தூணின் சிகரப் பகுதியில் அமைந்துள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், வட்ட வடிவ அடிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சக்கரம் இந்தியாவின் தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.





QB365 - Question Bank Software

அவர் தன்னுடைய மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்ராவையும் பௌத்தத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பி வைத்தார். தம்மத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்காக மேற்கு ஆசியா, எகிப்து, கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு சமயப்பரப்பாளர்களை அனுப்பி வைத்தார். அசோகர் தர்ம –மகாமாத்திரர்கள் என்னும் புதிய அதிகாரிகளை நியமித்தார். பேரரசு முழுவதிலும் பௌத்தமத்தைப் பரப்புவதே அவர்களுடைய பணியாகும். அசோகர் தனது தலைநகரான பாடலிபுத்திரத்தில் மூன்றாம் பௌத்த மத மாநாட்டைக் கூட்டினார்.

## அசோகரின் பேராணைகள்

பேரரசர் அசோகருடைய ஆணைகள் மொத்தம் முப்பத்திமூன்று. அவைகள் அசோகரால் தூண்களிலும், பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றின் மீது அசோகர் கொண்டிருந்த நம்பிக்கையையும், மக்களின் நலன்மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் விவரிக்கின்றன.

9J4SHH

உங்களுக்குத் தெரியுமா?

**பேராணை** – அரசரால் அல்லது உயர் பதவியில் இருப்பவரால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது பிரகடனம் ஆகும்.



உங்களுக்குத் தெரியுமா?

### அசோகர் கல்வெட்டுகளில் எழுத்துமுறை

சாஞ்சி – பிராமி

காந்தகார் – கிரேக்கம் மற்றும் அராமிக்

வடமேற்குப் பகுதிகள் – கரோஸ்தி

அசோகருடைய இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டுகள் மூவேந்தர்களான பாண்டியர், சோழர், கேரளபுத்திரர் ஆகியோரையும் சத்யபுத்திரர்களையும் குறிப்பிடுகின்றன.

## மௌரியரின் நிர்வாகம்

### மையப்படுத்தப்பட்ட நிர்வாகம்

**அரசர்**

- அரசரே மௌரியப் பேரரசின் மேலான இறையாண்மை மற்றும் அதிகாரம் உடையவர் ஆவார்.
- 'மந்திரிபரிஷத்' எனும் அமைச்சரவை அரசருக்கு உதவியது. இந்த அமைச்சரவை ஒரு புரோகிதர், ஒரு சேனாபதி, ஒரு மகாமந்திரி மற்றும் இளவரசனைக் கொண்டதாகும்.
- அரசர் ஒருமிகச்சிறந்த உளவுத்துறையைக் கொண்டிருந்தார்.

### வருவாய் முறை

- நிலங்களே அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தந்தது. லும்பினியிலுள்ள அசோகரது கல்வெட்டு பாலி மற்றும் பாகா என்னும் இரண்டு வரிகளைக் குறிப்பிடுகின்றது.
- மொத்த விளைச்சலில் 1/6 பங்கு (பாகா) நிலவரியாக வசூல் செய்யப்பட்டது.
- காடுகள், சுரங்கங்கள், உப்பு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வரிகள் அரசுக்கு கூடுதல் வருவாயாக அமைந்தன.

- அரசு வருவாயில் பெரும்பகுதி இராணுவத்திற்கான ஊதியம், அரசு அதிகாரிகளுக்கான ஊதியம், அறக் கட்டளைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள், சாலைகள் அமைத்தல் போன்ற பொதுப்பணிகள் ஆகியவைகளுக்காகச் செலவழிக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ருத்ரதாமனின் ஜுனாகத்/கிர்னார் கல்வெட்டு சுதர்சனா ஏரி எனும் நீர்நிலை உருவாக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் தொடங்கப்பட்டது. அசோகரின் காலத்தில் பணிகள் நிறைவு பெற்றன.

### நீதி நிர்வாகம்

- அரசரே நீதித்துறையின் தலைவராவார். அவரே மேல்முறையீட்டு நீதிமன்றமும் ஆவார்.
- அரசர் தனக்குக் கீழாக பல துணை நீதிபதிகளை நியமித்தார். தண்டனைகள் கடுமையாக இருந்தன.

### இராணுவ நிர்வாகம்

அரசரே படைகளின் தலைமைத் தளபதியாவார்.

முப்பது நபர்களைக் கொண்ட குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறுகுழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குழுவும் கீழ்க்கண்டவற்றை நிர்வாகம் செய்தது.

- கடற்படை
- ஆயுதங்கள் (போக்குவரத்து மற்றும் விநியோகம்)
- காலாட்படை
- குதிரைப்படை
- தேர்ப்படை
- யானைப்படை

### நகராட்சி நிர்வாகம் (நகரம் மற்றும் மாநகரம்)

- நகரத்தை நிர்வாகம் செய்வதற்காக 30 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானது 5 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- நகரம் நிர்வாகம் 'நகரிகா' என்னும் அதிகாரியின் கீழிருந்தது. அவருக்கு ஸ்தானிகா, கோபா எனும் அதிகாரிகள் உதவி செய்தனர்.

### நாணயம்

பணம் வணிகத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அரசாங்கம் பணியாளர்களுக்கு ஊதியத்தைப் பணமாகவே வழங்கியது.

மயில், மலை மற்றும் பிறைச் சந்திர வடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் (பணம்), 'மாஸாகாஸ்' என்று அழைக்கப்பட்ட செப்பு நாணயங்கள் ஆகியன அரசினுடைய நாணயங்களாக இருந்தன.

### வணிகமும் நகரமயமாதலும்

வணிகம் செழிப்புற்றது. குறிப்பாக கிரேக்கம் (ஹெலனிக்) மலேயா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளுடன் பெருமளவு வணிகம் நடைபெற்றது. காசி (பனாரஸ்) வங்கா (வங்காளம்) காமரூபம் (அஸ்ஸாம்) மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மதுரை ஆகிய இடங்களில் சிறப்பு மிக்க துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன என்று அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது.

| முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் | முக்கிய இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| நறுமணப் பொருள்கள் | குதிரைகள் |
| முத்துக்கள் | தங்கம் |
| வைரங்கள் | கண்ணாடிப் பொருட்கள் |
| பருத்தி இழை துணி | பட்டு (லினன்) |
| தந்தத்தினாலான பொருட்கள், | |
| சங்குகள், சிப்பிகள் | |





6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 144 16-07-2019 2.35.17 PM



மௌரியர்கால நாணயங்கள்

## மௌரியர் கலையும் கட்டடக்கலையும்

மௌரியர் கால கலையை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

9JDNYA

- உள்ளூர் கலை – யக்ஷன், யக்ஷி உருவச் சிலைகள்.
- அரச கலைகள் – அரண்மனைகள் மற்றும் பொது கட்டடங்கள், ஒற்றைக்கல் தூண்கள், பாறை குடைவரைக் கட்டடக்கலை, ஸ்தூபிகள்.

உங்களுக்குத் தெரியுமா?

**யக்ஷன்** என்பது நீர், வளம், மரங்கள், காடுகள், காட்டுச் சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் ஆவார். **யக்ஷி** என்பது யக்ஷாவின் பெண்வடிவமாகும்.



யக்ஷா, யக்ஷி சிலைகள்

## ஸ்தூபி

ஸ்தூபியானது செங்கல் அல்லது கற்களால் கட்டப்பட்டுள்ள அரைக்கோள வடிவமுடைய குவிமாடம் போன்ற அமைப்பாகும். புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டிருக்கும்.



மத்தியப்பிரதேச மாநிலத் தலைநகர் போபாலுக்கு அருகேயுள்ள சாஞ்சி.

## சாரநாத்திலுள்ள ஒற்றைக்கல் தூண்

இத்தூணின் சிகரப்பகுதியில் தர்மச்சக்கரம் இடம் பெற்றுள்ளது.



ஒற்றைக்கல் தூண் – சாரநாத்

### பாறைக் குடைவரை கலையின் தொடக்கம்

நாகார்ஜுனா பராபர் குன்றுகளிலுள்ள பாறை குடைவரைக் குகைக் கோவில்கள்

புத்தகயாவுக்கு வடபுறம் பல குகைகள் உள்ளன. பராபர் குன்றிலுள்ள மூன்று குகைகளில் அசோகருடைய அர்ப்பணிப்புக் கல்வெட்டுகள் உள்ளன. (இக்குகைகள் யாருக்காக அமைத்துத் தரப்பட்டன என்ற விபரங்கள் அடங்கிய கல்வெட்டுகள்)

QB365 - Question Bank Software



லோமாஸ் ரிஷி குகை – பராபர்

நாகார்ஜுன கொண்டாவிலுள்ள மூன்று குகைகளில் தசரத மௌரியரின் (அசோகரின் பேரன்) கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.

### மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

- அசோகருக்குப் பின்வந்த அரசர்கள் மிகவும் வலிமை குன்றியவர்களாக இருந்தனர்.
- பேரரசின் பல பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்ற கலகங்கள்.
- பாக்டீரிய நாட்டைச் சேர்ந்த கிரேக்கர்களின் படையெடுப்பு பேரரசை மேலும் வலிமை குன்றச் செய்தது.
- மௌரியப் பேரரசின் கடைசி அரசர் பிருகத்ரதா அவருடைய படைத் தளபதியான புஷ்யமித்ர சுங்கரால் கொல்லப்பட்டார். அவரே சுங்க அரசவம்சத்தை நிறுவினார்.

| பண்டைய பெயர் | தற்போதைய பெயர் |
|---|---|
| ராஜகிரகம் | ராஜ்கிர் |
| பாடலிபுத்திரம் | பாட்னா |
| கலிங்கா | ஒடிசா |

## உலகம் அந்நாளில்



**சீனப்பெருஞ்சுவர்**

இது பழங்காலத்தில் கட்டப்பட்ட தொடர்ச்சியான பல கோட்டைச் சுவராகும் குன்–சி–ஹங் என்னும் பேரரசர் தனது பேரரசின் வட எல்லையை பாதுகாப்பதற்காக கி.மு.(பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சுவர்களை இணைத்தார்.



**ஒலிம்பியாவின் ஜியஸ் (zeus) கோயில்**

கிரிஸ்நாட்டில்உள்ளஒலிம்பியாவில்கி.மு(பொ.ஆ.மு) ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் ஜியஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 146 16-07-2019 2.35.18 PM

QB365 - Question Bank Software

## மீள்பார்வை

- கி.மு. (பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டு ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். பதினாறு மகாஜனபதங்களின் எழுச்சிக்கு அது சாட்சியாய் இருந்தது.
- பதினாறு மகாஜனபதங்களில் மகதம் ஒரு பேரரசாய் எழுச்சி பெற்றது.
- மகதமானது ஹரியங்கா, சிசுநாக, நந்த, மௌரிய அரச வம்சங்களால் ஆளப்பட்டது.
- மௌரியப் பேரரசை சந்திரகுப்த மௌரியர் நிறுவினார்.
- மௌரிய அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் அசோகர் ஆவார்.
- அசோகரின் தூண் கல்வெட்டுகளும் மற்றும் பாறைக் கல்வெட்டுகளும், தம்மா பற்றிய அவரது கொள்கைகளை நமக்கு உணர்த்துகின்றன.

### அருஞ்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| சமத்துவம் | – | Egalitarian |
| மடாலயம் | – | Monastery |
| ஆய்வுக்கட்டுரை | – | Treatise |
| பேரச்சமும் நடுக்கமும் | – | Horror |

9JHJZX

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?

   அ) அங்கம் ஆ) மகதம் இ) கோசலம் ஈ) வஜ்ஜி

2. கீழ்க்கண்டவர்களில் கௌதம புத்தரின் சமகாலத்தைச் சேர்ந்தவர் யார்?

   அ) அஜாதசத்ரு ஆ) பிந்துசாரர் இ) பத்மநாப நந்தா ஈ) பிருகத்ரதா

3. கீழ்க்காண்பனவற்றில் எது மௌரியர் காலத்திற்கான சான்றுகளாகும்?

   அ) அர்த்த சாஸ்திரம் ஆ) இண்டிகா
   இ) முத்ராராட்சஷம் ஈ) இவை அனைத்தும்

4. சந்திரகுப்த மௌரியர் அறியணையைத் துறந்து _____________ என்னும் சமணத் துறவியோடு சரவணபெலகோலாவுக்குச் சென்றார்.

   அ) பத்ரபாகு ஆ) ஸ்துலபாகு இ) பார்ஸவநாதா ஈ) ரிஷபநாதா

5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் _____________.

   அ) டாலமி ஆ) கௌடில்யர் இ) செர்சக்ஸ் ஈ) மெகஸ்தனிஸ்

6. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார்?

   அ) சந்திரகுப்த மௌரியர் ஆ) அசோகர் இ) பிருகத்ரதா ஈ) பிந்துசாரர்



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 147 16-07-2019 2.35.18 PM

QB365 - Question Bank Software

**II. கூற்றைக் காரணத்துடன் பொருத்துக / சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. **கூற்று:** அசோகர் இந்தியாவின் மாபெரும் பேரரசர் என கருதப்படுகிறார்.
   **காரணம்:** தர்மத்தின் கொள்கையின்படி அவர் ஆட்சி புரிந்தார்

   அ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

   ஆ) கூற்றும் காரணமும் உண்மையானவை, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

   இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவை சரி.
   **கூற்று 1.** ஒட்டுமொத்த இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் இணைந்த முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர் ஆவார்.
   **கூற்று 2.** மௌரியரின் நிர்வாகம் பற்றிய செய்திகளை அர்த்தசாஸ்திரம் வழங்குகிறது.

   அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

   இ) 1, 2 ஆகிய இரண்டும் ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைக் கவனமாக கவனி. அக்கூற்றுகளில் சரியானது எது/எவை எனக் கண்டுபிடி.
   1. மகதத்தின் முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர்
   2. ராஜகிரிகம் மகதத்தின் தலைநகராய் இருந்தது.

   அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும்

   இ) 1 மற்றும் 2 ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

4. கீழ்க்காண்பனவற்றைக் காலக்கோட்டின்படி வரிசைப்படுத்தவும்

   அ) நந்தா சிசுநாகா ஹரியங்கா மௌரியா

   ஆ) நந்தா சிசுநாகா மௌரியா ஹரியங்கா

   இ) ஹரியங்கா சிசுநாகா நந்தா மௌரியா

   ஈ) சிசுநாகா மௌரியா நந்தா ஹரியங்கா

5. கீழ்க்கண்டவைகளில் எது மகதப் பேரரசின் எழுச்சிக்குக் காரணமாயிற்று
   1. முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம்
   2. அடர்ந்த காடுகள் மரங்களையும், யானைகளையும் வழங்கின
   3. கடலின் மீதான ஆதிக்கம்
   4. வளமான இரும்புத் தாது கிடைத்தமையால்

   அ) 1, 2 மற்றும் 3 மட்டும்

   ஆ) 3 மற்றும் 4 மட்டும்

   இ) 1, 2 மற்றும் 4 மட்டும்

   ஈ) இவையனைத்தும்



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 148 16-07-2019 2.35.18 PM

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. _____________ மகதத்தின் தொடக்ககாலத் தலைநகராக இருந்தது.
2. முத்ரராட்சசத்தை எழுதியவர் _____________.
3. _____________ பிந்துசாரரின் மகனாவார்.
4. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் _____________.
5. நாடு முழுவதிலும் தர்மத்தைப் பரப்புவதற்காக _____________ பணியமர்த்தப்பட்டனர்.

**IV. சரியா? தவறா?**

1. தேவனாம்பியா எனும் பட்டம் சந்திரகுப்த மௌரியருக்கு வழங்கப்பட்டது.
2. அசோகர் கலிங்கப்போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார்.
3. அசோகருடைய தம்மா பௌத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை.
4. நமது காகிதப் பணத்தில் இடம் பெற்றுள்ள சிங்கங்கள் ராம்பூர்வா தூண்களின் காளை சிகரப் பகுதியிலிருந்து பெறப்பட்டவையாகும்.
5. புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூயின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**V. கீழ்க்கண்டவற்றை பொருத்துக.**

| | |
|---|---|
| அ) கணா | 1) அர்த்தசாஸ்திரம் |
| ஆ) மெகஸ்தனிஸ் | 2) மதச் சுற்றுப்பயணம் |
| இ) சாணக்கியா | 3) மக்கள் |
| ஈ) தர்மயாத்திரை | 4) இண்டிகா |

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 2 | 4 | 3 | 1 |
| இ) | 3 | 1 | 2 | 4 |
| ஈ) | 2 | 1 | 4 | 3 |

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

1. மௌரியர் காலத்திற்கான இரண்டு இலக்கியச் சான்றுகளைக் குறிப்பிடவும்.
2. ஸ்தூபி என்றால் என்ன?
3. மகத அரச வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மௌரியர் காலத்தில் அரசு வருவாய் எவற்றிலிருந்து பெறப்பட்டது?
5. நகரங்களின் நிர்வாகத்தில் 'நகரிகா'வுக்கு உதவியவர் யார்?
6. அசோகரின் இரண்டு மற்றும் பதிமூன்றாம் பாறைப் பேராணைகளிலிருந்து நீங்கள் அறிவதென்ன?
7. மௌரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு தமிழ் நூல் கூறுக?

QB365 - Question Bank Software

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி**

1. பௌத்தத்தைப் பரப்புவதற்கு அசோகர் என்ன செய்தார்? (ஏதேனும் மூன்று)
2. மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்றினை எழுதுக.

**VIII. உயர் சிந்தனை வினாக்கள்**

1. கலிங்கப்போர் அசோகரது வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. எவ்வாறு?
2. நீ அசோகரைப் போன்ற ஒரு அரசராக இருந்தால் மேற்கொள்ளும் ஏதேனும் ஐந்து நலத் திட்டங்களை எழுதுக.



**IX. படங்களைப் படிப்போம்.**

இது அசோகருடைய பேராணைகள் பற்றிய படம்

அ) பேராணைகள் என்றால் என்ன?

ஆ) எவ்வகைகளில் அசோகரது பேராணைகள் பயன்படுகின்றன?

இ) இப்பேராணைகள் எங்கெல்லாம் பொறிக்கப்பட்டுள்ளன?

ஈ) சாஞ்சி கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து முறையின் பெயரென்ன?

உ) பாறைப் பேராணைகள் மொத்தம் எத்தனை உள்ளன?

**X. நான் யார்.**

1. நான் ஹரியங்கா அரச வம்சத்தைச் சேர்ந்தவன். திருமண உறவுகளின் மூலம் எனது பிரதேசங்களை விரிவு படுத்தினேன். அஜாதசத்ரு எனது மகன். நான் யார்?
2. சமூகத்தை மாற்றியமைத்ததில் நான் முக்கியப்பங்கு வகித்தேன். கலப்பைக் கொழுமுனை செய்வதற்கு நான் பயன்படுகிறேன். நான் யார்?
3. நான் தேவனாம்பிய என அறியப்பட்டேன். நான் அமைதி வழியை தழுவிக் கொண்டேன். நான் யார்?
4. நான் இந்தியாவின் முதல் பேரரசை நிறுவினேன். நான் 'சல்லேகனா' நோன்பிருந்தேன். நான் யார்?
5. அசோகரின் சிங்கத் தலைப்பகுதி தூணில் நான் காணப்படுகிறேன். நம்முடைய தேசியக் கொடியின் மையத்தில் உள்ளேன். நான் யார்?



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 150 16-07-2019 2.35.19 PM

QB365 - Question Bank Software

## XI. பொருள்படுத்தி விடையைக் கண்டுபிடி

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ<br>1 | உ<br>2 | க்<br>3 | க<br>4 | கா<br>5 | ங்<br>6 | ச்<br>7 | ச<br>8 | ட்<br>9 | டு<br>10 | ண<br>11 | த்<br>12 | த<br>13 | |
| தா<br>14 | தி<br>15 | ந்<br>16 | ந<br>17 | நா<br>18 | ப்<br>19 | ப<br>20 | பா<br>21 | பொ<br>22 | ம்<br>23 | ம<br>24 | மி<br>25 | மௌ<br>26 | |
| ய<br>27 | ர்<br>28 | ர<br>29 | ரி<br>30 | ரு<br>31 | ல்<br>32 | வெ<br>33 | ள்<br>34 | ள<br>35 | று<br>36 | றை<br>37 | ன்<br>38 | ஹ<br>39 | ஷ<br>40 |

1. மகதத்தை ஆண்ட முதல் அரச வம்சம் ___________(39, 30, 27, 6, 5)
2. ___________ பேரரசு இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகும். (26, 30, 27)
3. ___________ புதிய தலை நகரான பாடலிபுத்திரத்திற்கு அடித்தளமிட்டார் (2, 13, 27, 38)
4. ___________ ஒரு முக்கியமான ஏற்று மதிப்பொருள் (17, 36, 24,11, 19, 22, 31, 34)
5. பண்டைய மகத நாட்டில் இருந்த மடாலயம் பின்னர் புகழ்பெற்ற கல்வி நிலையமாக திகழ்ந்தது (18, 35, 16, 14)
6. நிலவரி ___________ (20, 5)
7. கலிங்கப் போரின் பயங்கரம் ___________ பொறிக்கப்பட்டுள்ளது (21, 37, 3, 4, 32, 33, 9, 10)
8. கிரேக்கர்கள் பிந்துசாரரை ___________ என்று அழைத்தனர் (1, 25, 28, 13, 4, 14)
9. சாரநாத் தூணின் சிகரப்பகுதியில் அமைந்துள்ளது ___________ (13, 28, 24, 7, 8, 3, 4, 29, 23)
10. அமைச்சரவை ___________ என அழைக்கப்பட்டது (24, 16, 15, 30, 20, 30, 40, 12)

## XII. செயல்பாடுகள்

1. களப் பயணமாக அருங்காட்சியகம் செல்லுதல்.
2. அசோகர் சந்திரகுப்தர் ஆகியவர்களோடு தொடர்புடைய திரைப்படங்களைக் காணுதல்.

## XIII. வரைபடப்பணி

1. வரைபடத்தில் அசோகர் பேரரசின் எல்லைகளைக் குறிப்பிடவும்.
2. இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

   அ) தட்சசீலம் ஆ) பாடலிபுத்திரம் இ) உஜ்ஜைனி

   ஈ) சாஞ்சி உ) இந்திரபிரஸ்தம்

## XIV. வாழ்க்கைத் திறன்

1. அசோகச் சக்கரத்தின் மாதிரி ஒன்றைச் செய்யவும்.
2. சாஞ்சி ஸ்தூபியின் மாதிரி ஒன்றைச் செய்யவும்.
3. நமது தேசியக் கொடியின் படம் வரைந்து வர்ணம் தீட்டவும்.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 151 16-07-2019 2.35.19 PM

QB365 - Question Bank Software

**XV.** விடைக்கட்டகம்

| | | |
|---|---|---|
| கி.மு.(பொ.ஆ.மு) ஆறாம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளிப் பகுதிகளில் இருந்த இருவகைப்பட்ட அரசுகளின் பெயர்கள் என்ன?<br><br>விடை: | இரண்டாம் பௌத்த சபையை வைசாலியில் கூட்டியது யார்?<br><br>விடை: | கலிங்கத்தின் தற்போதைய பெயர் என்ன?<br><br>விடை: |
| நகரத்தை நிர்வகித்தவர் ________<br><br>விடை: | மூன்றாம் பௌத்த சபை அசோகரால் எங்கு கூட்டப்பட்டது?<br><br>விடை: | ஏதேனும் இரண்டு மகாஜனபதங்களின் பெயர்களை கூறு?<br><br>விடை: |
| சுதர்சனா ஏரி வெட்டப்பட்டதைக் குறிப்பிடும் கல்வெட்டு எது?<br><br>விடை: | நந்த வம்சத்தின் கடைசி அரசர் யார்?<br><br>விடை: | மௌரியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வெள்ளி நாணயங்களின் பெயர் என்ன?<br><br>விடை: |

## மூலநூல்கள்


1. ரொமிலா தாப்பர், *முற்கால இந்தியா, தொடக்கக் காலத்திலிருந்து கி.பி. 1300 வரை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2017
2. ஆர்.எஸ் சர்மா, *பண்டைக் கால இந்தியா*, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், 2011
3. Upinder Singh, *A History of Ancient and Early Medieval India* pearson, 2008




QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 152 16-07-2019 2.35.19 PM

QB365 - Question Bank Software

## இணையச் செயல்பாடு

### குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

ஊடாடும் வரைபடத்தைப் பயன்படுத்தி உலக வரலாறு ஒப்பீடு, அரசியல், ராணுவம், கலை, அறிவியல், இலக்கியம், மதம் மற்றும் தத்துவம் ஆகியவற்றை அறிக.



படி – 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி – 2: உலக வரைபடப்பக்கம் தோன்றும்.

படி – 3: பேரரசின் காலத்தையோ அரசியல் காலத்தையோ உள்ளீடு செய்க. (எ.கா. மகதப்பேரரசு)

படி – 4: உள்ளீடு செய்யப்பட்டதற்கு ஏற்ற வரைபடம் தோன்றும்.




உரலி:

http://geacron.com/home-en/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 153 16-07-2019 2.35.19 PM

QB365 - Question Bank Software

ஆறாம் வகுப்பு – வரலாறு
ஆக்கம்

பாட வல்லுநர்கள்

முனைவர். மணிகுமார் K.A
பேராசிரியர் (ஓய்வு), வரலாற்று துறைத் தலைவர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி .

மேலாய்வாளர்கள்

இரவிசந்திரன் S.L,
உதவிப்பேராசிரியர் (ஓய்வு)
இராஜுஸ் கல்லூரி
இராஜபாளையம்.

அப்பண்ணசாமி M.
ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியல் பணிகள் கழகம்,
TNTB & ESC, நுங்கம்பாக்கம், சென்னை.

சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்கள்

சுஜாதா .M
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

ஜாய் கிறிஸ்டி .N
பட்டதாரி ஆசிரியர்
தே.கல்லுப்பட்டி ஒன்றியம், மதுரை.

கணினித் தொழில் நுட்பம்

நாகராஜ் D
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, ராபூசல்
புதுக்கோட்டை.

பாட நூலாசிரியர்கள்

கோமதி .S
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி
பழைய பெருங்களத்தூர்
சென்னை.

சீனிவாசன் .B
பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
கிருஷ்ணகிரி.

நான்சி நீதிமா
ஆராய்ச்சியாளர்
லயோலா கல்லூரி, நுங்கம்பாக்கம்
சென்னை.

இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்

நாகராஜ் D.
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு மேல்நிலைப் பள்ளி
ராப்பூசல், புதுக்கோட்டை.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வரைபடம்

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.

கா. தனஸ் தீபக் ராஜன்

கா. நளன் நன்சி ராஜன்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

வடிவமைப்பு

ஆரோக்கியம் பெலிக்ஸ்,
சென்னை

In-House - QC
மனோகர் இராதாகிருஷ்ணன்

ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

தட்டச்சு
கௌரி



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_History_TM_Unit_3.indd 154 16-07-2019 2.35.19 PM

QB365 - Question Bank Software

# புவியியல்



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 155 11-07-2019 12.44.45 PM

QB365 - Question Bank Software

# அலகு 1

## வளங்கள்



### கற்றல் நோக்கங்கள்

- "வளங்கள்" என்பதன் பொருளை அறிமுகப்படுத்துதல்
- வளங்களின் வகைகள் பற்றி விளக்கமாக அறிதல்
- வளங்கள் பாதுகாத்தலின் தேவையைப் புரிந்து கொள்ளுதல்
- பொருளாதாரச் செயல்பாடுகள் பற்றிப் புரிந்து கொள்ளுதல்

9JHG2K

### நுழையுமுன்

இப்பாடம், வளம் என்றால் என்ன? என்பது பற்றியும் அதன் வகைகள் மற்றும் நிலையான வாழ்விற்கு அதனைப் பாதுகாத்தலைப் பற்றியும் விளக்குகிறது. மேலும் பொருளாதாரச் செயல்பாடுகள் என்றால் என்ன? என்பது பற்றியும், இயற்கைக்கும் மனித செயல்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினையும் விளக்குகிறது.

*கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா*
*நாடென்ப நாட்டின் தலை* – *குறள் 736*

எந்த வகையிலும் கெடுதலை அறியாமல், ஒருவேளை கெடுதல் ஏற்படினும், அதனை சீர்செய்யுமளவிற்கு வளங்குன்றா நிலையில் உள்ள நாடுதான் நாடுகளிலே தலை சிறந்த நாடாகும்.

அப்பா தனது அறைக்குள் எப்பொழுது வருவார் என்று எதிர்பார்த்துத் தன் படுக்கையில் படுத்திருந்தாள் குழலி. பள்ளியில் கொடுத்த தேர்ச்சி அட்டையில் அப்பாவிடம் கையொப்பம் பெறவேண்டியிருந்தது. ஆனால் அப்பா வருவதற்கான அறிகுறி ஏதும் தென்படவில்லை. அவள் உடனே தன் படுக்கையைவிட்டு எழுந்து சமையலறையில் இருக்கும் தன் தாயிடம் ஓடினாள்.

*குழலி* : அம்மா, அப்பா எங்கே மா?

*அம்மா* : இன்றைக்கு அப்பாவுக்கு அதிகநேரம் வேலையிருப்பதினால் சீக்கிரமாகவே கிளம்பிட்டாங்க.

*குழலி* : அதிகநேர வேலைன்னா என்னம்மா?

*அம்மா* : வேலை நேரத்தைவிட கூடுதலான நேரம் வேலை செய்வதுதான் "அதிகநேர வேலை". அப்பா



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 156 11-07-2019 12.44.45 PM

வேலைபார்க்கும்தொழிற்சாலையில் "சூரிய ஒளித்தகடுகள்" நிறைய தயாரிக்க வேண்டுமாம். அதனால் அப்பாவின் முதலாளி சீக்கிரமா வரச்சொல்லிவிட்டார்.

*குழலி* : நேற்று இரவே என்னிடம் சொல்லியிருக்கலாமே? என் தேர்ச்சி அட்டையில் அப்பாவோட கையெழுத்து போடாமலே இருக்கு.

*அம்மா* : போதும் போதும் போய் முதல்ல குளி நான் கையெழுத்துப் போடுறேன்.

*குழலி* : அம்மா ரொம்ப நன்றிம்மா, ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டுக்குறேன் "சூரிய ஒளித்தகடு"ன்னு சொல்றீங்களே அதை எதுல தயாரிக்கிறாங்க?

*அம்மா* : நான் சொன்னா உனக்கு புரியுமான்னு தெரியல... ஆனாலும் சொல்றேன் கேளு, மணல் என்ற இயற்கை வளத்திலிருந்து சிலிக்கான் என்ற தனிமத்தை பிரித்து அதிலிருந்து PV (Photo Voltaic) செல்களைப் பயன்படுத்தி ஒளி மின்னழுத்தக் கலம் தயாரிக்கிறாங்க. இவை சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்றுகின்றன.

*குழலி* : இயற்கை வளமா! அப்படின்னா என்னம்மா?

*அம்மா* : மனிதனுக்குப் பயன்படும் எல்லாமே வளம்தான். அது இயற்கையிலிருந்து கிடைத்தால் அது இயற்கை வளம்.

*குழலி* : அப்பா எந்த மாதிரியான வேலை செய்யிறாங்கம்மா?

*அம்மா* : அவர் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியவர். அதனை உற்பத்தி செய்ய இயற்கை வளங்களைப் பயன் படுத்துகிறார்.

*குழலி* : உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களை வளங்கள் என்று அழைக்கலாமா?

*அம்மா* : ஆமாம். அவற்றை மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் என்று அழைக்கலாம்.

*குழலி* : சரிம்மா நேரமாயிடுச்சு. நான் பள்ளிக்குப் போகத் தயாராகுறேன்.

### செயல்பாடு: 1

தோட்ட வேலைக்குத் தொடர்பில்லாத பொருட்களை வட்டமிடுக.

மண், விதைகள், நிலம், கணினி, நாற்று, பூந்தொட்டிகள், உரம், பாடநூல்கள்.

மனிதனின் தேவையை நிறைவு செய்யும் எந்தவொரு பொருளும் ***வளமாகும்***. பொருளின் பயன்பாட்டைப் பொறுத்துதான் அதன் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. எல்லா வளங்களுக்கும் மதிப்பு உண்டு. மதிப்பு என்பது பண மதிப்புள்ளதாகவோ, பணமதிப்பற்றதாகவோ இருக்கலாம். பொருளாதாரத்தில் பணமதிப்புள்ள வளங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. (எ.கா) பெட்ரோலியம். பணமதிப்பற்ற வளங்கள் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருக்கும். (எ.கா) காற்று.

### சிந்தனை வினா

வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவதற்கு நீங்கள் தயார் செய்யும் பட்டியலில் இடம் பெறுகின்ற பொருட்கள், பணமதிப்பு உள்ளவையா?

QB365 - Question Bank Software

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒரு பொருளின் பயன்பாட்டினைக் கண்டறிந்த பின்புதான் அப்பொருள் வளமாக மாறுகிறது. மனிதனின் தேவைகள் நாளுக்கு நாள் மாறுபடக்கூடியவை. தேவையானது மாறுபடும்பொழுது அதை நிறைவு செய்கின்ற வளங்களும் மாறுகிறது. ஒரு பொருளை வளமாக மாற்றுவதற்கான காரணிகள் *காலமும் தொழில் நுட்பமும்* ஆகும். உதாரணமாக நிலக்கரியும், பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வரும் இக்காலகட்டத்தில், புதிய கண்டுபிடிப்பான சூரியத்தகடுகள், சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்ற உதவுகிறது எனவே தற்போது இது ஒரு சிறந்த வளமாகவே நீடிக்கிறது.




**சிந்தனை வினா**

சூரியத் தகடுகளின் சாய்வுக் கோணம் புவியின் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமா?

வளங்கள் மூன்று வகைப்படும். அவைகள் ***இயற்கை வளங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் மற்றும் மனித வளங்கள்*** ஆகும்.

## 1. இயற்கை வளங்கள் (Natural Resources)

இயற்கையிலிருந்து நேரடியாகப் பெறப்படும் அனைத்து வளங்களும் ***இயற்கை வளங்கள்*** எனப்படும். காற்று, நீர், மண், கனிமங்கள், நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் அனைத்தும் இயற்கை வளங்களாகும். இயற்கை வளங்களின் பயன்பாடானது அவைகள் காணப்படும் இடம், காணப்படும் நிலை மற்றும் அதை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் தொழில்நுட்பத்தினைச் சார்ந்திருக்கும்.


சூரியன்

### இயற்கை வளங்களின் வகைப்பாடு (Classification of Natural Resources)

இயற்கை வளங்களை அதன் தோற்றம், வளர்ச்சிநிலை, புதுப்பித்தல், பரவல் மற்றும் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

### அ) தோற்றத்தின் அடிப்படையில் வளங்கள் (On the basis of origin)

தோற்றத்தின் அடிப்படையில், வளங்களை ***உயிரியல் வளங்கள்*** (Biotic Resources) மற்றும் ***உயிரற்ற வளங்கள்*** (Abiotic Resources) என வகைப்படுத்தப்படுகிறது.

(i) உயிருள்ள அனைத்தும் ***உயிரியல் வளங்கள்*** எனப்படும். உதாரணமாக தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள்.



(ii) உயிரில்லாத அனைத்து வளங்களும் ***உயிரற்ற வளங்கள்*** எனப்படும். உதாரணமாக நிலம், நீர், காற்று மற்றும் கனிமங்கள்.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 158 11-07-2019 12.44.46 PM

QB365 - Question Bank Software






QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 159 11-07-2019 12.45.02 PM

QB365 - Question Bank Software

உலகில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் மனிதனால் அடையாளம் காணப்பட்ட பிறகுதான் உயிரியல் வளங்களாக அறியப்பட்டன. பழங்கால மனிதர்கள் தங்களின் தேவைக்கேற்ப பொருட்களைச் சேகரித்து, எதிர்காலப் பயன்பாட்டிற்காகப் பாதுகாத்தனர். அக்கால மனிதனுக்கு மூன்று அடிப்படைத் தேவைகள் மட்டுமே இருந்தன. அவை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இத்தேவைகளை நிறைவேற்ற அவன் முதல்நிலை செயல்பாடுகளான வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மீன்பிடித்தல் மற்றும் காட்டு வளங்களை சேகரித்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டான். அதன் பின்னர் வளங்களில் பற்றாக்குறை ஏற்பட்டதால் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பின் மூலமாக தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டான்.



பழங்கால மனிதன் உயிரற்ற வளங்களையும் தேடிச் சென்றான். விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பிற்காக நீர்வளம் மிக்க நல்ல நிலப்பகுதிகளைத் தேடிச் சென்றான். வேட்டையாடுதல் முதல் விவசாயம் செய்தல் வரை அவனுக்குக் கருவிகள் தேவைப்பட்டன. முதன் முதலில் அவன் கற்களைக் கொண்டு கருவிகள் செய்தான். பின்பு இக்கருவிகளைச் செய்ய வேறு மாற்று வளங்களைத் தேடி புவியைத் தோண்டினான். அவ்வாறு தோண்டும்போது முதலில் தாமிரத்தையும் பின்பு இரும்பையும் கண்டுபிடித்தான். இவற்றைத் தேடும் முயற்சியின்போதுதான் வேறு சில விலைமதிப்புள்ள உலோகங்களையும் கண்டறிந்து அவற்றினால் அணிகலன்கள் செய்தான். இவ்வாறு சுரங்கத்தொழில் உருவானது. இன்றைய நிலையிலும் சுரங்கத் தொழில்தான் அனைத்து பொருளாதாரச் செயல்பாடுகளிலும் முன்னிலை வகிக்கிறது.

### ஆ) வளர்ச்சியின் அடிப்படையில் வளங்கள் (On the Basis of Development)

9K6C48

வளர்ச்சி நிலையின் அடிப்படையில் வளங்களை, ***கண்டறியப்பட்ட வளங்கள்*** (Actual Resources) மற்றும் ***மறைந்திருக்கும் வளங்கள்*** (Potential Resources) என்று வகைப்படுத்தப்படுகிறது.

*i.* ***கண்டறியப்பட்ட வளங்கள்*** தற்போது பயன்படுத்தப்படுவதும் அதன் இருப்பின் அளவும் அறியப்பட்டிருக்கிறது. (எ.கா) நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

*ii.* ***மறைந்திருக்கும் வளங்கள்*** என்பது தற்பொழுது அதிக பயன்பாட்டில் இல்லாததும், அதன் அளவு மற்றும் இருப்பிடம் அறியப்படாமல் இருப்பதாகும். இவ்வளத்தினை எடுத்து பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை. (எ.கா) வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடலில் காணப்படும் கடல் ஈஸ்ட் (Marine Yeast).

உங்களுக்குத் தெரியுமா?

கடல் ஈஸ்ட்டானது (Marine Yeast) நிலப்பரப்பிலுள்ள ஈஸ்டைவிட (Terrestrial Yeast) மிகுந்த ஆற்றல் உடையது. இச்சத்தை ரொட்டி தயாரித்தல், மது வடித்தல், திராட்சை ரசம் தயாரித்தல், உயிரி எத்தினால் தயாரித்தல் மற்றும் மருத்துவப்புரதம் தயாரித்தலுக்குப் பயன்படுகிறது.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 160 11-07-2019 12.45.03 PM

QB365 - Question Bank Software

இ) புதுப்பித்தலின் அடிப்படையில் வளங்கள் (On the Basis of Renewability)

வளத்தினை புதுப்பித்தலின் அடிப்படையில் ***புதுப்பிக்கக்கூடிய வளங்கள்*** (Renewable Resources) மற்றும் ***புதுப்பிக்க இயலா வளங்கள்*** (Non Renewable Resources) என வகைப்படுத்தப்படுகிறது.

i. ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள், ***புதுப்பிக்கக்கூடிய வளங்கள்*** என்று அழைக்கப்படுகின்றன. உதாரணமாக காற்று, நீர், சூரிய ஒளி ஆகும். இப்புதுப்பிக்கக்கூடிய வளங்களையும் தவறாகப் பயன்படுத்தும்போது குறைவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆகவே, நாம் அறிவுப்பூர்வமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

**சிந்தனை வினா**

தன்னைத்தானே புதுப்பிக்கக்கூடிய மற்ற வளங்கள் யாவை?

ii. குறிப்பிட்ட அளவில் உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். இவ்வளங்கள் பயன்பாட்டிற்குப் பின்பு தீர்ந்து போகக்கூடியவையாகும். இவை உருவாக நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும். இதனால் மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு இதன் சுழற்சி ஈடுகொடுக்காது. (எ.கா) நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கைவாயு மற்றும் கனிமங்கள் ஆகும்.



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்

**சிந்தனை வினா**

நிலக்கரி எவ்வாறு உருவாயிற்று?

புதுப்பிக்க இயலா வளங்கள் அனைத்தும் ஒருநாள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இல்லாமல் போய்விடும். ஆகையினால் மனிதன் இதற்காக புதிய பொருள்களை, வளமா அல்லது வளமற்றதா என்று பல ஆய்வுகள் செய்து அறிந்த பின்பு, அவற்றைப் பிரித்தெடுக்க புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அப்பொருளின் பரவலைக் கண்டறிய முயல்கிறான். எனவே இவ்வகை வளங்கள் பயன்பாட்டிற்கு வராத வளங்கள் அல்லது மறைந்திருக்கும் வளங்கள் (Potential Resources) ஆகும். காற்றின் ஆற்றல் இவற்றில் ஒன்றாகும். இவ்வாற்றலை இன்றும் நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. காரணம் காற்று வேகமாக வீசக்கூடிய இடங்கள் இன்னமும் முழுமையாக அடையாளம் காணப்படாமல் உள்ளன.



காற்றாற்றல்

ஈ) பரவலின் அடிப்படையில் வளங்கள் (On the Basis of Distribution)

வளங்கள் அதன் பரவலின் அடிப்படையில், ***உள்ளூர் வளங்கள்*** மற்றும் ***உலகளாவிய வளங்கள்*** என்று வகைப்படுத்தப்படுகின்றன.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 161 11-07-2019 12.45.03 PM

i. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும் வளங்கள் ***உள்ளூர் வளங்கள்*** (Localized Resources) என்கிறோம். (எ.கா) கனிமங்கள்.

ii. சில வளங்கள் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் வளங்கள் ***உலகளாவிய வளங்கள்*** (Universal Resources) என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) சூரிய ஒளி மற்றும் காற்று.

### செயல்பாடு: 2

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள விலங்குகள் எந்தப் பகுதி அல்லது கண்டத்தைச் சேர்ந்தவை?



### (உ) உரிமையின் அடிப்படையில் வளங்கள் (On the Basis of Ownership)

உரிமையின் அடிப்படையில் வளங்களைத் ***தனிநபர் வளங்கள்*** (Individual Resources), ***சமூக வளங்கள்*** (Community–owned Resources), ***நாட்டு வளங்கள்*** (National Resources) மற்றும் ***பன்னாட்டு வளங்கள்*** (International Resources) என்று வகைப்படுத்தப்படுகின்றன.



அடுக்கு மாடிக் கட்டடங்கள்

i. ***தனிநபர் வளங்கள்*** என்பது, ஒரு தனி நபருக்கு மட்டுமே சொந்தமானவையாகும் (எ.கா) அடுக்குமாடிக் கட்டடங்கள்.

ii. ***சமூக வளங்கள்*** என்பது ஒரு பகுதியில் வாழும் மக்கள் தங்கள், பகுதியில் உள்ள வளத்தினைப் பயன்படுத்திக்கொள்வர். இதுவே சமூக வளம் என்று அழைக்கப்படுகிறது. (எ.கா) பூங்கா.

iii. ***நாட்டு வளங்கள்*** என்பது ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குட்பட்ட நிலப்பகுதிகள் மற்றும் பெருங்கடல் பகுதிகளுக்கு உட்பட்ட வளங்கள் ஆகும். (எ.கா) இந்தியாவின் வெப்பமண்டல மழைக்காடுகள்.



வெப்ப மண்டல மழைக்காடுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

வெப்ப மண்டல மழைக்காடுகள் ***"உலகின் பெரும் மருந்தகம்"*** (world's largest pharmacy) என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் தாவரங்களில் 25% தாவரங்கள் மருத்துவ குணம் கொண்ட தாவரங்களாகும். (எ.கா) சின்கோனா.

iv எந்த ஒரு நாட்டின் எல்லைக்கும் உட்படாத மிகப்பரந்த திறந்த வெளி பெருங்கடல் பகுதியில் காணப்படும் வளங்கள் ***பன்னாட்டு வளங்கள்*** (International Resources) என்று அழைக்கப்படுகின்றன. இப்பகுதிக்குட்பட்ட வளங்களை உலக நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களின் மூலமாகவே பயன்படுத்த இயலும். (எ.கா) திமிங்கலப் புனுகு.

QB365 - Question Bank Software



திமிங்கலப் புனுகு

உங்களுக்குத் தெரியுமா?

ஸ்பெர்ம் திமிங்கலத்தில் இருந்து பெறப்படும் ஒரு வகை திடப்பொருளே திமிங்கலப் புனுகு ஆகும். ஒரு பவுண்டு (0.454 கி.கி) திமிங்கலப் புனுகின் விலை 63,000 அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும். இது வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

### 2. மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் (Man – Made Resources)

இயற்கை வளங்கள் தொழில்நுட்பத்தினால் மாற்றுருவாக்கம் செய்யப்பட்டு, புதிய பொருள்களாகக் கிடைக்கின்றன. அவ்வாறு பெறப்பட்ட வளங்களை *மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்* என்று அழைக்கிறோம். (எ.கா): கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, மனிதனால் உருவாக்கப்படும் எல்லாக் கட்டுமானங்களும் மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களாகும். (எ.கா) பாலங்கள், வீடுகள், சாலைகள்.

**செயல்பாடு: 3**

சாலைகள் அமைக்கத் தேவைப்படும் இயற்கை வளங்கள் யாவை?

மூலப்பொருள்களிலிருந்து வேறு பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றும் இச்செயல்பாடு *இரண்டாம் நிலை செயல்பாடுகள்* (Secondary Activities)எனப்படும். இச்செயல்பாட்டிற்கு மனிதத் திறனும் அவனது சிந்தனைகளும் அடிப்படைத் தேவையாகும்.



மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள்

### 3. மனித வளம் (Human Resources)

9KBKGY

இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் *மனித வளம்* என அழைக்கப்படுகிறது. மனிதன் ஒரு இயற்கை வளம். ஆனாலும் மனிதனை நாம் தனி ஒரு வளமாக பார்க்கின்றோம். மனிதனை ஒரு மதிப்புமிகு வளமாக பார்ப்பதற்குக் காரணம் அவனிடம் உள்ள கல்வி, உடல்நலம், அறிவு மற்றும் திறனாகும். (எ.கா) மருத்துவர், ஆசிரியர், அறிவியலாளர்.

முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையில் கிடைக்கப்படும் பொருள்களைப் பகிர்வதற்கான போக்குவரத்து மற்றும் வணிக அமைப்பே மூன்றாம் நிலை செயல்பாடுகள் (Tertiary Activities) எனப்படும். (எ.கா) வங்கி, வணிகம் மற்றும் தகவல் தொடர்புத்துறை. இச்செயல்பாடுகளில் மனித வளம் பல்வேறு நிலைகளில் பயன்படுகிறது. ஒரு நாட்டின் மனித வளம் அந்நாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தைச் சார்ந்துள்ளது.



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

### செயல்பாடு: 4

கீழ்காணும் படங்களில் சிறப்பு வாய்ந்த மனிதர்களையும் தொழில்சார்ந்த மனிதர்களையும் அடையாளம் காண்க.



### வளங்களைப்பற்றி காந்தியடிகளின் சிந்தனை (Gandhian Thought on Resources)


காந்தியடிகள்

"*வளங்கள் மனிதனின் பேராசைக்கு அன்று, அவனது தேவைக்கு மட்டுமே*" என்று மகாத்மா காந்தி அவர்கள் கூறுகிறார். உலகில் வளங்கள் குறைவதற்கு மனித இனமே காரணம் எனவும் கூறுகிறார். ஏனென்றால்,

i. வளங்கள் மிகுதியாக எடுக்கப்படுகின்றன.

ii. மனிதத் தேவைகளும் எல்லையை மீறுகின்றன.

ஆகவே, மனிதன் நினைத்தால் மட்டுமே வளங்கள் பாதுகாக்கப்படும்.

### வளத்திட்டமிடுதல் / வளமேலாண்மை (Resources planning / Management)

*வளத்திட்டமிடுதல்* என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும். வளத்தினைத் திட்டமிடுதல் என்பது அவசியமான ஒன்றாகும். ஏனெனில்,

i. வளங்கள் மிகவும் குறைவாக உள்ளன. வளத்திட்டமிடுதல் தற்போது வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், வருங்காலத் தலைமுறைகளுக்குச் சேமித்து வைக்கவும் உதவிபுரிகிறது.

ii. வளங்கள் மிகக்குறைவாக இருப்பன மட்டுமன்றுஅவைபுவியின்மீதுஒழுங்கற்றப் பரவலுடன் காணப்படுகின்றன.

iii. வளங்களை அதிகச் சுரண்டலில் இருந்து தடுத்துப் பாதுகாக்க வளத்திட்டமிடுதல் அவசியமாகும்.

### வளங்களைப் பாதுகாத்தல் (Conservation of resources)

வளத்தினைக் கவனமாகக் கையாளுதல் என்பது *வளங்களைப் பாதுகாத்தல்* எனப்படுகிறது. மக்கள் தொகையின் திடீர்ப் பெருக்கத்தினால் வளங்களின் பயன்பாடு அதிகரிக்கிறது. இதனால் வளங்கள் குறைந்து வரும் நிலையும் அதிகரிக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த அறிவுப்பூர்வமாக வளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

வருங்காலத் தலைமுறையினரின் தேவைகளைப் பாதிக்காத வண்ணம் வளர்ச்சி இருத்தல் வேண்டும். நிகழ்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே *நிலையான வளர்ச்சி* (Sustainable Development) எனப்படும்.

*நிலையான வளர்ச்சி* நடைபெற கீழ்க்கண்டவைகளைச் செய்தல் அவசியமாகும்.

i. வளங்கள் குறைந்துகொண்டு வருவதற்கான காரணங்களை அறிதல்.

ii. வீணாக்குதலையும், அதிகப்படியான பயன்பாட்டினையும் தடுத்தல்.

iii. மறுபயன்பாடுள்ள வளங்களை மறுசுழற்சி செய்தல்.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 164 11-07-2019 12.45.06 PM

iv. மாசைக் கட்டுப்படுத்துதல்.

v. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.

vi. இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குளைப் பாதுகாத்தல்.

vii. மாற்று வளங்களைப் பயன்படுத்துதல்.

வளங்களைப் பாதுகாக்க வேண்டுமெனில் மூன்று வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் (3RS). அவைகள், ***குறைத்தல்*** (Reduce), ***மறுபயன்பாடு*** (Reuse), ***மறுசுழற்சி செய்தல்*** (Recycle) ஆகும்.




***நினைவில் நிறுத்துக.***

- மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்பவைகள் வளம் ஆகும்.
- இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து வளங்களும் இயற்கை வளங்கள் ஆகும்.
- உயிருள்ள அனைத்து வளங்களும் உயிரியல் வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- உயிரற்ற அனைத்து வளங்களும் உயிரற்ற வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இயற்கை வளங்களைச் சேகரித்தல் முதல்நிலைச் செயல்பாடு எனப்படுகிறது.
- தற்போது பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் கண்டுபிடிக்கப்பட்ட வளங்கள் எனப்படுகின்றன.
- தற்போது பயன்பாட்டிற்கு வராத வளங்கள் மறைந்திருக்கும் வளங்கள் எனப்படும்.
- வளத்தினைப் பயன்படுத்திய பிறகு, குறிப்பிட்டக் காலத்திற்குள் இயற்கைச் செயல் முறைகளால் புதுப்பித்துக் கொள்ளக் கூடிய அனைத்து வளங்களும் புதுப்பிக்கக்கூடிய வளங்கள் எனப்படுகின்றன.
- குறைவான இருப்பு உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும்.
- அனைத்து இடங்களிலும் பரவலாகக் காணப்படும் வளங்கள் உலகளாவிய வளங்கள் எனப்படும்.
- குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் உள்ளூர் வளங்கள் எனப்படும்.
- மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயற்கை வளங்களைச் செயல்முறைகளினால் மாற்றுருவாக்கம் செய்வது மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் எனப்படும்.
- மனிதர்களும் வளங்களே.
- உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தேவைப்படும் அனைத்துச் சேவைகளும் மூன்றாம் நிலை செயல்பாடுகள் எனப்படும்.
- வளங்களை மிகக் கவனமாகக் கையாளுதலே வளங்களைப் பாதுகாத்தல் ஆகும்.
- நிகழ்காலத்தில் உள்ள மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினரையும் கவனத்தில் கொண்டு சுற்றுச்சூழல் பாதிக்கா வண்ணம் ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி ஆகும்.

கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. | உற்பத்தி | தயாரித்தல் |
| 2. | சூரிய ஒளித்தகடு | சூரிய ஆற்றலை உறிஞ்சும் தகடு |
| 3. | PV செல்கள் | ஒளி மின்னழுத்தக் கலம் |
| 4. | உள்ளூர் வளங்கள் | பரவலாகக் காணப்படாத வளங்கள் |
| 5. | உலகளாவிய வளங்கள் | பரவலாகக் காணப்படும் வளங்கள் |
| 6. | திறந்தவெளிப் பெருங்கடல் | எந்த நாட்டிற்கும் சொந்தமில்லாதப் பெருங்கடற்பகுதி |
| 7. | நிலையான | பேணத்தகுந்த |

## பயிற்சிகள்

9KF85V

### அ) பொருத்துக

| அ | ஆ |
|---|---|
| இயற்கை வளம் | கனிமங்கள் |
| பன்னாட்டு வளம் | நிலையான வளர்ச்சி |
| குறைத்தல், மறு பயன்பாடு, மறுசுழற்சி | காற்று |
| புதுப்பிக்க இயலாதது | உற்பத்தி செய்தல் |
| உலகளாவிய வளம் | திமிங்கலப் புனுகு |
| இரண்டாம் நிலை செயல்பாடுகள் | காடு |

### ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக

1. கரும்பிலிருந்து ____________ தயாரிக்கப்படுகிறது.
2. வளங்களை ______________ கையாளுதல் வளங்களின் பாதுகாப்பு எனப்படுகிறது.
3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் ______________ எனப்படுகிறது.
4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ______________ வளங்கள் என்று அழைக்கப்படுகிறது.
5. ______________ வளம் மிகவும் மதிப்பு மிக்க வளமாகும்.
6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ______________ எனப்படுகிறது.

### இ) சிறு குறிப்பு வரைக.

1. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்
2. மனித வளம்
3. தனிநபர் வளம்
4. மூன்றாம் நிலை செயல்பாடுகள்

### ஈ) மிகச் சுருக்கமாக விடையளி

1. வளங்கள் என்றால் என்ன?
2. கண்டறியப்பட்ட வளங்கள் என்றால் என்ன?
3. உயிரற்ற வளங்களை வரையறு.
4. நிலையான வளர்ச்சி என்றால் என்ன?

### உ) சுருக்கமாக விடையளி

1. உலகளாவிய வளங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை வேறுபடுத்துக?
2. மனிதன் ஒரு இயற்கை வளம், ஆனால் மனிதன் மட்டுமே ஒரு தனி வளமாக கருதப்படுவது ஏன்?
3. நாட்டு வளம் மற்றும் பன்னாட்டு வளம் – ஒப்பிடுக.
4. மனிதன் உருவாக்கிய வளத்திற்கும், மனித வளத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

QB365 - Question Bank Software

5. வளப்பாதுகாப்பைப் பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?

### ஊ) விரிவாக விடையளி (100–120 வார்த்தைகள் வரை)

1. இயற்கை வளங்களை வகைப்படுத்துக. ஏதேனும் மூன்றினை விவரித்து உதாரணத்துடன் விளக்குக.
2. வளங்களைப் பாதுகாப்பது எப்படி?
3. வளத்திட்டமிடல் என்றால் என்ன? அதன் அவசியம் என்ன?
4. முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைச் செயல்பாடுகளை விவரி.

### எ) வாக்கியமும் புரிதலும்

1. *வாக்கியம்:* வெப்பமண்டலப் பகுதிகளில் அனல் மின்னாற்றலுக்குப் பதிலாக சூரிய ஒளி ஆற்றல் ஒரு சிறந்த மாற்று ஆகும்.

   *புரிதல் 1:* நிலக்கரியும் பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வருகிறது.

   *புரிதல் 2:* சூரிய ஆற்றல் என்றும் குறையாது.

   *சரியான விடையைத் தேர்ந்தெடு*

   அ. புரிதல் 1 மட்டும் சரி.

   ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

   இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

   ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

2. *வாக்கியம்:* வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.

   *புரிதல் 1 :* வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்.

   *புரிதல் 2 :* வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

   *சரியான விடையைத் தேர்ந்தெடு*

   அ. புரிதல் 1 மட்டும் சரி.

   ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

   இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

   ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

3. *வாக்கியம் :* மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

   *புரிதல் 1 :* உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

   *புரிதல் 2 :* மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை.

   *சரியான விடையைத் தேர்ந்தெடு*

   அ. புரிதல் 1 மட்டும் சரி.

   ஆ. புரிதல் 2 மட்டும் சரி.

   இ. புரிதல் 1 மற்றும் 2 தவறு.

   ஈ. புரிதல் 1 மற்றும் 2 சரி.

### ஏ) வளங்களைப் பாதுகாக்க மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. *குறைத்தல், மறுபயன்பாடு* மற்றும் *மறுசுழற்சி* என்ற சொற்களைச் சரியான இடத்தில் எழுதுக.

1. நீ இளம் வயதில் பயன்படுத்திய மிதிவண்டியை உனது பக்கத்து வீட்டு குழந்தைக்குக் கொடுத்தல் ________________.
2. கழிப்பறையில் குறைவான நீரைப் பயன்படுத்துதல் ________________.
3. பயன்படுத்திய நெகிழிப் பொருள்களை உருக்கிச் சாலை அமைத்தல் ________________.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 167 11-07-2019 12.45.07 PM

QB365 - Question Bank Software

### ஐ) குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | 2 |
| 3 | | | | | | | | | |
| | | | | | | | | 1 | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | 4 | | | | | | | | |
| | | 5 | | | | | | | |
| 6 | | | | | | | | | |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. எங்கும் காணப்படும் வளங்கள் | 1. வளங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளில் ஒன்று |
| 2. காலத்தைச் சமநிலையில் வைக்கும் வளர்ச்சி | 2. இது ஒரு பன்னாட்டு வளம் |
| 3. சூரியனிடமிருந்து பெறப்படும் ஆற்றல் | |
| 4. இயற்கையினால் அளிக்கப்படும் வளம் | |
| 5. ஒரு நாட்டிற்குச் சொந்தமான வளங்கள் | |
| 6. குறிப்பிட்ட இடங்களில் காணப்படும் வளம் | |

### ஒ) இந்தியப் புறவரி நிலவரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்

1. நெய்வேலி
2. வங்காள விரிகுடா
3. அரபிக்கடல்
4. தமிழகக் காடுகள்
5. இந்தியப் பெருங்கடல்
6. சேலத்தில் உள்ள கஞ்சமலை இரும்புச் சுரங்கம்.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 168 11-07-2019 12.45.07 PM

QB365 - Question Bank Software

ஓ) கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருளாதாரச் செயல்பாடுகள் தொடர்பான படங்களை உற்று நோக்கி அட்டவணையை நிரப்புக.

| வ. எண். | படம் | முதல்நிலை/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை | செயல்பாட்டின் பெயர் | காணப்படும் பகுதி |
|---|---|---|---|---|
| 1. |  | | | |
| 2. |  | | | |
| 3. |  | | | |
| 4. |  | | | |

## ஔ) ஆசிரியர் செயல்பாடுகள்

1. பள்ளி அல்லது வகுப்பளவில் மாதத்திற்கு ஒருநாள் "மின்சாரம் சேமித்தல் நாள்" கொண்டாடுதல்.
2. பயன்பாடற்ற பொருள்களைக் கொண்டு பள்ளியின் நடைக்கூடச் சுவர்ப் பகுதியை அலங்கரிக்கவும்.
3. பள்ளியின் அருகில் உள்ள ஏதேனும் ஒரு தொழிற்சாலைக்குக் களப்பயணம் மேற்கொள்ளவும்.
4. கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில்கள் தொடர்பான படங்கள் சேகரிக்கச் செய்தல்.
   (i) மீன்பிடித்தல்
   (ii) வேட்டையாடுதல்
   (iii) உணவு சேகரித்தல்
   (iv) காட்டு வளங்களைச் சேகரித்தல்
   (v) சுரங்கத் தொழில்
   (vi) விவசாயம்
   (vii) கால்நடை வளர்த்தல்
   (viii) மரங்களை வெட்டுதல்

## ஆதாரம்

1. Human and economic geography – Goh Cheng Leong

## இணையத்தள இணைப்பு

1. https://www.acciona.com/sustainable development



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

# இணையச் செயல்பாடு

## வளங்கள்

இச்செயல்பாட்டின் மூலம் புதிப்பிக்கக் கூடிய ஆற்றல் மூலங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம்.




படி – 1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி இணையப் பக்கத்திற்குச் செல்க. திரையில் தோன்றும் தெரிவுகளில் Events, Activities and Games என்பதைத் தேர்வு செய்க.

படி – 2: எண்ணற்ற விளையாட்டுகள் தோன்றும். அவற்றில் Power up என்பதைத் தேர்வு செய்து, Adobe flash player என்பதை அனுமதிக்க.

படி – 3: காற்று மற்றும் சூரியனால் கிடைக்கப்பெறும் ஆற்றலைப் பல்வேறு படிநிலைகளில் விளையாடிப் புரிந்து கொள்க.

படி – 4: மேலும் வெவ்வேறு ஆற்றல் மூலங்கள் குறித்த வினாடி வினாக்களுக்கு விடையளிக்க.



படி – 1



படி – 2




படி – 3




படி – 4

உரலி:

https://energy.techno-science.ca/en/index.php

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



QB365 - Question Bank Software

6th Std Term-II Geography_Tamil.indd 170 11-07-2019 12.45.08 PM

QB365 - Question Bank Software

ஆறாம் வகுப்பு – புவியியல்
ஆக்கம்

**பாடவல்லுநர் குழு**

முனைவர். இரா. ஜெகன்குமார்,
உதவி பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
புவியியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

**மேலாய்வாளர்கள்**

திரு. அ. செந்தில்வேலன்
உதவிப்பேராசிரியர் (புவியியல் துறை)
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்.

திரு. யசோதரன் சுரேஷ்
உதவிப்பேராசிரியர் (புவியியல் துறை)
சென்னை கிறித்துவ கல்லூரி,
தாம்பரம் (கி), சென்னை

**சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்**

மோ. சுஜாதா
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

**கணினித் தொழில்நுட்பம்**

மெல்வின் .A
இடைநிலை ஆசிரியர்
டி.டி.வி. தொடக்கப்பள்ளி, இராமநாதபுரம்.

**பாடநூலாசிரியர்கள்**

ந. ராஜேஸ்வரி
தலைமை ஆசிரியை,
அரசு உயர்நிலைப்பள்ளி
குன்னத்தூர், மங்களவாடி, வேலூர் மாவட்டம்.

ஜே. ஹெலன்
பட்டதாரி ஆசிரியர் (ஓய்வு)
பெ.கா.அ.ம. மேல்நிலைப்பள்ளி,
அம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

மோ. கிரேனா ஜேனட்,
பட்டதாரி ஆசிரியர்
இரா.செ.அ.ம.மேல்நிலைப்பள்ளி,
ஒண்டிப்புதூர், கோவை மாவட்டம்.

அ. அஞ்சுகம்
பட்டதாரி ஆசிரியர்
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
துறையூர், திருச்சி மாவட்டம்.

இரா. முத்து
பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி,
கன்னிகைப்பேர், திருவள்ளூர் மாவட்டம்.

ந. இராஜபாரதி,
ஆசிரியர் பயிற்றுநர்,
வட்டார வளமையம், உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்கள்**

சியாமளா S.
பட்டதாரி ஆசிரியர்
அரசு நலத்துறை உயர்நிலைப் பள்ளி
புளியந்தோப்பு, சென்னை.

மெல்வின் A.
இடைநிலை ஆசிரியர்
DDV ஆரம்பப் பள்ளி, ராமநாதபுரம்.

## கலை மற்றும் வடிவமைப்புக் குழு

**வரைபடம்**

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.
மாணவர்கள்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்.

**வரைகலை & வடிவமைப்பு**

வே. சா. ஜான்ஸ்மித், தியாகராய நகர், சென்னை

**In-House** - QC
மனோகர் இராதாகிருஷ்ணன்

**ஒருங்கிணைப்பு**

ரமேஷ் முனிசாமி

**தட்டச்சு**

மா. கல்பனா

**விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு**

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

# குடிமையியல்



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 172 16-07-2019 2.36.48 PM

QB365 - Question Bank Software

அலகு 1

# தேசியச் சின்னங்கள்



## கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்களை அறிதல்.
- இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளல்.
- இந்தியாவின் பிற தேசிய சின்னங்களை அறிந்து அவற்றைப் போற்றுதல்.
- இந்திய தேசிய விழாக்களை அறிந்து கொண்டாடுவதில் மகிழ்ச்சி கொள்ளல்.

9KKGIL

### நுழையுமுன்

இப்பாடம் இந்தியாவின் இயற்கை தேசியச் சின்னங்கள் மற்றும் பிற தேசியச் சின்னங்களைப் பற்றிய தகவல்களை வழங்குகிறது. பல்வேறு தேசிய விழாக்களை விவரிக்கிறது.

வேலனும் பொன்னியும் புலிவனம் என்ற காட்டுக்குக் காணுலா சென்றிருந்தார்கள். காட்டுக்குப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் அவர்களுடைய மனது உற்சாகத்திலும் சாகச உணர்விலும் வானத்தில் பறக்க ஆரம்பித்தது. அவர்களுக்கு வழிகாட்டியாக காட்டுயிர் ஆராய்ச்சியாளர் வீணா வந்திருந்தார். அந்தக் காட்டின் ஊடாக பழம்பெருமை வாய்ந்த ஆறு ஒன்று பாய்ந்து கொண்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 2,000 மீட்டர் உயரம் கொண்ட மலைப்பகுதிகளும் அந்தக் காட்டில் இருந்தன.

திட்டமிட்டபடி காட்டின் எல்லைவரை அவர்கள் வாகனத்தில் சென்றடைந்துவிட்டார்கள். "உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்" என்றபடியே, அந்தக் காட்டைப் பார்க்க ஆவலுடன் வந்திருக்கும் 'குட்டி ஆராய்ச்சி'யாளர்களை வனத்துறை அலுவலர் மணிமாறன் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவரிடம் வேலனையும் பொன்னியையும் வீணா அறிமுகப்படுத்தி வைத்தார். இனிமேல் காட்டுப் பாதைக்குள் வழக்கமான வாகனங்கள் செல்ல முடியாது. மின்கலன்களால் இயங்கும்



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 173 16-07-2019 2.36.49 PM

QB365 - Question Bank Software

புகை வெளியிடாத, கண்ணாடியால் மூடப்பட்ட வாகனத்தில்தான் செல்லமுடியும். வனத்துறை அலுவலர் மணிமாறனுடன் வீணா குழுவினர் காட்டின் எல்லையில் நின்றிருந்த அந்த வாகனத்தில் ஏறிக்கொண்டார்கள்.

"நாம் இப்போது காட்டுக்குச் செல்கிறோம். புலியைப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கும். அதிர்ஷ்டமிருந்தால் புலியைப் பார்க்கலாம். ஒரு காட்டின் மையஅச்சு புலிதான் என்றாலும், எண்ணற்ற பறவைகள், பூச்சிகள், ஊர்வன, நீர் – நிலம் இரண்டிலும் வாழும் இருவாழ்விகள் எனப் பலவும் சேர்ந்ததுதான் ஒரு காடு. புலியைப் பற்றி மட்டுமே யோசிக்காமல் காட்டில் தென்படும் உயிரினங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் நேரில் பார்த்து ரசிக்கலாம். அதேநேரம் காட்டுக்குள் சத்தமாக பேசக் கூடாது" என்றார் மணிமாறன்.

இன்னும் சிறிது நேரத்தில் ஒரு அழகான தாமரைத் தடாகத்தை பார்க்க இருந்தார்கள். அந்த வாகனம் மெதுவாகவே சென்றது. தாமரைத் தடாகத்தில் தாமரை மலர்கள் அழகுற மலர்ந்து சிரித்தன. "தாமரையில் பல வகைகள் உண்டு. இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள தாமரையை செந்தாமரை என்கிறோம். தனித்தன்மை மிகுந்த வடிவமைப்பைக் கொண்டது தாமரை மலர்" என்று வீணா கூறினார்.

அந்தத் தடாகத்துக்கு அருகிலிருந்த ஒரு பெருமரத்துக்குப் பின்னால், மயில் ஒன்று தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. மரத்தின் இந்தப் பக்கம் இருந்து சத்தம் போடாமல் வேலனும் பொன்னியும் அதை ரசித்தார்கள். "மணிமாறன் மாமா, மழை வந்தா மயில் தோகை விரித்து ஆடும் என்று சொல்வார்கள். அப்போ இப்போது மழை வருமா" என்று பொன்னி கேட்டாள்.

"வரலாம் .மழை வந்தால் மயில் தோகை விரித்து ஆடும் என்பது உண்மைதான். மயில் தோகை விரித்து ஆடுவதைக் கண்ட குறுநில மன்னன் ஒருவர் மயில் குளிருக்கு நடுங்குகிறதோ எனக் கருதி தன் போர்வையைக் கொடையாக அளித்தாராம். இவர் பெருமை வாய்ந்த சங்ககால தமிழகத்தைச் சேர்ந்தவரும், கடையெழு வள்ளல்களுள் மதிப்பிற்குரிய ஒருவருமான பேகன் என்னும் குறுநில மன்னன் ஆவார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாட்டில் புதுக்கோட்டைமாவட்டத்தில் உள்ள விராலிமலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

"மயில் நம் தேசியப் பறவைன்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். நம் பாரம்பரியத்திலும் கலைகளிலும் மயிலுக்கு நீண்டகாலமாக இடம் இருந்திருக்கு. அழகும் கம்பீரமும் நிறைந்த அந்தப் பறவை நாடு முழுவதும் காணப்படுவதே, அது தேசியப் பறவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முக்கியக் காரணம்." என்றார் மணிமாறன்.

அந்த வனத்திற்குள் சிறு இயந்திர ஒலிகூட எழாமல் வாகனம் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது. இரு புறங்களிலும் காணப்பட்ட வனத்தின் காட்சிகளைக் கண்கொட்டாமல் ரசித்தபடி வந்தனர்.



QB365 - Question Bank Software

"இப்ப நாம் ஆற்றின் கரையை நெருங்கிட்டோம். இனிமே சிறிது தொலைவுக்கு ஆற்றின் கரையோரமாகத்தான் போகணும். இந்த ஆற்றில் நீங்கள் எதிர்பார்க்காத ஒரு புதிய விலங்கை உங்களுக்குக் காட்டப் போகிறேன். சத்தமில்லாமல் காத்திருந்தால், நிச்சயமாக அதைப் பார்க்கலாம். எல்லோரும் உங்கள் பைனாகுலரை (Binocular) எடுத்துக்குங்க" என்றார் மணிமாறன்.

காட்டுக்குப் போவதென்றால் பைனாகுலருடன்தான் வரவேண்டுமென்று வீணா முன்னதாகவே சொல்லியிருந்தார். வேலனும் பொன்னியும் தெரிந்தவர்களிடம் அதைக் கேட்டு வாங்கி வந்திருந்தார்கள். பைனாகுலரைக் கண்ணில் பொருத்தி, ஆற்றை நோக்கிச் சாய்ந்தவாறு புதர் போல மண்டியிருந்த ஒரு மரத்தின் இடைவெளி வழியாகப் பார்த்தார்கள். "ஏதோ கரியால் முதலை மாதிரி ஓர் உயிரினம் நீந்திப் போகுது போலிருக்கிறதே" என்று வீணா கூறினார். காலை சூரியன் எதிர்ப்புறத்தில் இருந்து அடித்ததால், தெளிவாகப் பார்க்க முடியவில்லை. "சூரியன் கண்ணில் படாத மாதிரி நின்றுகொண்டு கவனமாகப் பாருங்கள், அது கரியால் இல்லை." என்றார் மணிமாறன்.

"ஆமா, அது ஏதோ மீன் போலல்லவா இருக்கிறது" என்றார் வீணா. "அது மீன் இல்லை, நீர்வாழ் பாலூட்டியான ஓங்கில் (டால்பின்)"

"என்னது டால்பினா? கடலில் தாவித் தாவி விளையாட்டு காட்டுமே, அது எப்படி ஆற்றுக்கு வரும்? " என்று வேலனும் பொன்னியும் ஒரே நேரத்தில் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"நம் நாட்டில் ஆற்று ஓங்கில்களும் வாழ்கின்றன. தொலைவிலிருந்து பார்க்கும்போது, நீருக்கு வெளியே நீண்டிருக்கும் அதன் நீண்ட வாயும் கரியால் முதலையின் வாயும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும். ஆனால், இரண்டும் வேறுவேறு. வௌவால்களைப் போலவே இந்த ஓங்கில்களும் மீயொலி அலைகளைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கின்றன, இவற்றின் பார்வைத்திறன் குறைவு"

" ரொம்ப சுவாரசியமான தகவலா இருக்கே" என்றான் வேலன்.

"அது சரி, நாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த ஆற்றின் பெயர் என்ன தெரியுமா?"

"கங்கை நதிப்புரத்து கோதுமைப் பண்டம்" என்று பாரதியார் புகழ்ந்து பாடினாரே, அந்த கங்கை ஆறுதானே? இங்கே வர்றதுக்கு முன்னாடியே இந்தக் காட்டைப் பற்றி சில விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டுப் போ என்று அப்பா சொல்லியிருந்தார். அதனால படிச்சு தெரிஞ்சுக்கிட்டேன். நான் சொன்னது சரியா?" என்று கேட்டாள் பொன்னி.

"சந்தேகமே இல்லாமல் சரி."

"2,525 கி.மீ. தொலைவுக்குப் பாயும் இந்தியாவின் நீளமான நதியும் இதுதான் தெரியுமா?" என்று ஆச்சரியப்படுத்தினான் வேலன்.

"பிரம்மபுத்திரா 3,848 கி.மீ நீளமுடையது என்றாலும் அது இந்தியாவில் பாயும் தொலைவு குறைவுதான். அதனால், வேலன் சொன்னதும் சரிதான்" என்றார் வீணா.

"நிறைய விஷயங்களைப் பார்த்துட்டோம். இப்போதைக்கு இந்த மாம்பழங்களைச் சாப்பிட்டுப் பசியாறுங்கள்" என்று மாம்பழத் துண்டுகளை எல்லோருக்கும் கொடுத்தார் மணிமாறன்.

"இந்த மாம்பழம் ரொம்ப சுவையாக இருக்கே. இது என்ன வகை?" என்று கேட்டார் வீணா.

"இமாம்பசந்த். முகலாயர்கள் காலத்தில் ராஜாவுக்காக உருவாக்கப்பட்ட சிறப்பு வகை மாம்பழங்கள். இந்தக் காட்டின்



எல்லையில் உள்ள தோப்பில் விளைஞ்சது" என்றார் மணிமாறன். மாம்பழங்களைச் சுவைத்துக்கொண்டே மீண்டும் வண்டியில் ஏறி அவர்கள் புறப்படத் தயாரானார்கள்.

"அடுத்து இன்னொரு ஆச்சரியமான விஷயத்தைப் பார்க்கப் போறோம்" என்றபடியே வாகனத்தைக் காட்டின் ஒரு பகுதியையே ஆக்கிரமித்திருந்த ஆலமர விழுதுகளைச் சுற்றி ஓட்டினார் மணிமாறன். அடுத்தடுத்து விழுதுகள் வந்துகொண்டே இருந்தன. எல்லா விழுதுகளையும் சுற்றி முடித்து, புறப்பட்ட இடத்துக்கே அவர்கள் வந்தபோது "இவ்வளவு பெரிய ஆலமரமா?" என்று வேலனும் பொன்னியும் வியந்துபோனார்கள்.

"ஆமாம், இந்த ஆலமரம் ரொம்பப் பெரிசு. இந்தக் காட்டின் மூதாய் மரம் என்றுகூட இதைச் சொல்லலாம். இந்த மரத்தில் ஆயிரக்கணக்கான பறவைகள் தஞ்சமடைகின்றன. கொல்கத்தாவின் அவுரா பகுதியில் அமைந்துள்ள இந்தியத் தாவரவியல் பூங்காவில் உள்ள உலக சாதனை படைத்த ஆலமரத்தைப் போன்றதொரு ஆலமரம் இது." என்றார் மணிமாறன்.

"அடையாறு தியசாபிகல் சொசைட்டியிலும் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அதை நான் நேரில் பார்த்து வியந்திருக்கிறேன்." என்றாள் பொன்னி.

"கொஞ்சம் பொறுமையா போவோம், ஆலமரத்தின் பின்பக்கமா பாருங்க ஒரு சின்ன யானை மந்தை மலை மேல ஏறிக்கிட்டிருக்கு." என்றார் மணிமாறன்.

" காட்டு யானைகள் ஆக்ரோஷமா இருக்கும்னு சொல்வாங்களே. நமக்கு ஆபத்தில்லையா?" என்று பயத்தை வெளிப்படுத்தினான் வேலன்.

"முதல் விஷயம், காட்டில் எந்த உயிரினத்துக்கும் நாம் தொந்தரவு கொடுக்கக் கூடாது. காடு உயிரினங்களின் வீடு. அதுக்கப்புறம், நம்மை பாதுகாப்பா வைச்சுக்கிட்டு உயிரினங்களை ரசிக்கலாம். அவசர காலத்தில் அறிவுபூர்வமாகவும் சாதுர்யமாகவும் நம்மை எப்படிப் பாதுகாத்துக்கணும்னு தெரிஞ்சிருக்கணும். அதுக்காகத்தான் காட்டுக்குள் போகும்போது காடுகளிலேயே காலம்காலமா வாழ்ந்துவரும் பழங்குடி வழிகாட்டிகளைப் பயன்படுத்துறோம்" என்றார் மணிமாறன்.

"எவ்வளவு பெரிய உயிரினம் என்றாலும், அவற்றை மதிக்கிறவரை, நம்மை அவை எதுவும் பண்ணாதுன்னு சொல்ல வர்றீங்களா மாமா?"

"நிச்சயமா, இப்போ அந்த யானைகளைப் போல நாமும் மலை மேல ஏறலாம். மலை மேல இன்னுமொரு ஆச்சரியம் உங்களுக்குக் காத்திருக்கு" என்று மணிமாறன் கூறினார்.

காட்டுக்குள் இருந்த மலைப்பகுதியில் குறிப்பிட்ட தொலைவு அவர்கள் மேல ஏறிய பிறகு, ஒரு சமவெளி போன்ற சிறு பரப்பு வந்தது. அங்கே வண்டியை நிறுத்திவிட்டு, பைனாகுலர் வழியாக ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினார் மணிமாறன், "அங்கே பாருங்க".

அங்கே தரையில் காய்ந்த இலைகள், சருகுகளைக் கொண்டு கூம்பு வடிவத்தில் கட்டப்பட்ட கூடு போலிருந்தது. "இது எந்த உயிரினத்தோட கூடாக இருக்கும்னு நினைக்கிறீங்க" என்று மணிமாறன் கேட்டார்.

"தரையில் பறவைகளும் கூடு கட்டும். ஆனா, இது வித்தியாசமா இருக்கே?" என்றார் வீணா.

"அது ஒரு பாம்போட கூடு, கருநாகத்தின் (King Cobra) கூடு"

"என்னது பாம்பு கூடு கட்டுமா, நாங்க கேள்விப்பட்டதேயில்லையே?" என்றான் வேலன்.

"உலகிலேயே கூடு கட்டி, அதில் முட்டை வைத்து இனப்பெருக்கம் செய்யும் பாம்பு வகை இது. அதேபோல ரொம்ப சாதாரணமா 18 அடி நீளம் வளரும். நஞ்சு கொண்ட பாம்புகளில் உலகிலேயே நீளமானது இது" என்று அவர்களை மேலும் ஆச்சரியப்படுத்தினார் மணிமாறன்.

"அடர்ந்த காட்டுக்குள்ளும் பார்த்துட்டோம், மலை மேலயும் ஏறிட்டோம். ஆனா, புலி மட்டும் இன்னும் தென்படவே இல்லையே" என்று சோர்வுடன் கூறினாள் பொன்னி.

"கவலைப்படாதே பொன்னி, எத்தனையோ ஆச்சரியமான விஷயங்களை இந்தக் காட்டில் நாம பார்த்துட்டோம். புலி ரொம்ப கூச்ச சுபாவம் கொண்ட உயிரினம். அவ்வளவு எளிதா வெளியே வராது. இந்த மலைச்சரிவில் பாறைகள் நிறைந்த ஓர் இடம் இருக்கு. கீழே இறங்கும்போது அங்கே புலி இருக்கான்னு பார்ப்போம்" என்றார் மணிமாறன்.

அவர் சொன்ன இடத்திலும் புலி இல்லை. குழந்தைகள் இருவரும் பல்வேறு ஆச்சரியங்களை அன்றைக்குப் பார்த்திருந்தாலும், புலியைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை மட்டும் அவர்களுக்குத் தீரவில்லை.

"நான் போகும் ஒவ்வொரு காடும் புதுசு புதுசாகத்தான் இருக்கு. ஆராய்ச்சியாளரான எனக்கே தெரியாத பல விஷயங்களை இன்றைக்கு மணிமாறன் சாரும், நிறைய பழங்குடிகளும் எனக்குக் கத்துத்தந்திருக்காங்க. ஆராய்ச்சிக்காகப் பல முறை காட்டுக்கு வந்து போயிருந்தாலும் என்னால் புலியைப் பார்க்க முடிந்ததில்லை. இன்னொரு முறை புலியைப் பார்ப்போம், கவலைப்படாதீங்க" என்று அவர்களைச் சமாதானப்படுத்தினார் வீணா.

அவர்கள் திரும்பி வந்த வழியில் ஓங்கிலைப் பார்த்த அதே இடத்துக்கு வந்தவுடன் ஓய்வெடுப்பதற்காக வண்டியை சற்று நிறுத்தினார்கள். பொன்னி கீழே இறங்கி கண்களில் பைனாகுலரை பொருத்தி புதரில் இருந்த இடைவெளிகள் வழியாக ஆற்றைப் பார்த்தாள். அவளால் ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "மாமா, மாமா, அங்க பாருங்க, அங்க பாருங்க" என்று கிசுகிசுக்கும் குரலில் கூறினாள். எல்லோரும் கண்களில் பைனாகுலரைப் பொருத்தி புதருக்குப் பின்னால் இருந்து பார்த்தார்கள். புலி ஒன்று தன் மூன்று குட்டிகளுடன் ஆற்றில் நீர் அருந்திக்கொண்டிருந்தது. அழகு நிறைந்த அந்தக் காட்சியைத் தன் கேமராவில் பதிவு செய்துகொண்டார் வீணா. அந்தப் புலிகள் நீர்

QB365 - Question Bank Software

## இயற்கை தேசியச் சின்னங்கள்



**தாமரை–1950**

சேற்று நீரில் வளர்ந்தாலும் மிக அழகான மலர்கள் மலர்கின்றன.



**ஆலமரம்–1950**

இது பெருமையின் சின்னமாகும். மருத்துவ குணம் கொண்டது.



**புலி–1973**

பூனை இனத்தில் மிகப்பெரியது. உலகின் மொத்த புலிகள் எண்ணிக்கையில் இந்தியா 70 % கொண்டுள்ளது.



**மயில்–1963**

இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது தோகையைக் கொண்ட பறவை மயில்.



**யானை–2010**

ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. தான் வாழும் காட்டுப் பிரதேசங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**கங்கை ஆறு–2008**

இது வற்றாத ஆறு. வரலாற்றுப் புகழ் பெற்ற தலைநகரங்கள் இவ்வாற்றங்கரையில் தோன்றி செழித்தோங்கின.



**லாக்டோ பேசில்லஸ் 2012**

இது ஒரு தோழமை பாக்டீரியா. இது லேக்டிக் மற்றும் பாக்டீரியாக்களின் குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறது.



**ஆற்று ஓங்கில்–2010**

தான் வாழும் ஆற்றின் சூழல் அமைவின் நிலையை உணர்த்தும் கருவியாக செயல்படுகிறது. அருகி வரும் உயிரினமாக உள்ளது.



**மாம்பழம் 1950**

வைட்டமின் ஏ, சி, டி யை அதிக அளவில் கொண்டது. பெரும்பாலும் சமவெளிகளில் விளைவிக்கப்படுகிறது.



**ராஜநாகம்**

(ஹோஃபிபாகஸ் ஹானா) உலகின் நீண்ட விஷம் நிறைந்த பாம்பு. இவை இந்தியாவின் மழைக்காடுகள் மற்றும் சமவெளிகளில் வாழ்கின்றன.

**இயற்கை தேசிய சின்னங்கள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன.**



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

அருந்தித் திரும்பும்வரை கண் கொட்டாமல் அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"இதுதான் இந்தியக் காடுகளின் நிஜ ராஜா" என்றார் மணிமாறன்.

"நீங்கள் சொல்றது 100 சதவீதம் உண்மை" என்று ஆமோதித்தார் வீணா.

பிறகு வண்டியில் ஏறி காட்டின் எல்லைக்குத் திரும்பும்போது வீணா ஒரு கேள்வி கேட்டார்."குழந்தைகளா இன்னைக்கு நீங்க நேரில் பார்த்த உயிரினங்கள் அனைத்துக்கும் ஒரு ஒற்றுமை உண்டு தெரியுமா?" என்று கேட்டார் வீணா.

"என்ன ஒற்றுமை, என்ன ஒற்றுமை?" என வேலன் கேட்டான்.

"சீக்கிரம் சொல்லுங்க. நாங்க ரொம்ப ஆவலா இருக்கோம்" என்றாள் பொன்னி.

"இன்றைக்கு நாம பார்த்த எல்லாமே, இந்தியாவோட இயற்கை தேசியச் சின்னங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள்**

| | | |
|---|---|---|
| விலங்கு | வரையாடு |  |
| பறவை | மரகதப் புறா |  |
| மலர் | செங்காந்தள் மலர் |  |
| மரம் | பனை மரம் |  |

என்கிற சிறப்பு அங்கீகாரம் பெற்றவை".

"ரொம்பச் சரியா சொன்னீங்க வீணா, பாருங்க நான்கூட அதை யோசிக்கலை" என்றார் மணிமாறன்.

### பிற தேசியச் சின்னங்கள்

#### தேசியக் கொடி



மூவண்ணக்கொடி நமது தேசியக் கொடியாகும். மூன்று வண்ணங்களும் சம அளவில் கிடைமட்டமாக அமைந்துள்ளன. மேல்பகுதியில் உள்ள காவி நிறம் தைரியத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. கீழ்ப்பகுதியில் உள்ள பச்சைநிறம் செழுமையையும் வளத்தையும் குறிக்கிறது. இடையில் உள்ள வெள்ளைநிறம் நேர்மை, அமைதி மற்றும் தூய்மையைக் குறிக்கிறது. நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோகச் சக்கரம் அறவழியையும் அமைதியையும் வலியுறுத்துகிறது.

தேசியக் கொடியின் நீள, அகலம் 3:2

**உங்களுக்குத் தெரியுமா?**

- இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார்.
- விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம்) நெய்யப்பட்டது.
- இக்கொடியைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் (15.08.1947) செங்கோட்டையில் ஏற்றினார்.
- இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 179 16-07-2019 2.37.01 PM

QB365 - Question Bank Software

என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. நடுவில் உள்ள அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டுள்ளது.

### உயர்சிந்தனை வினா

இந்திய தேசியக்கொடியைத் தயாரிக்கும் உரிமை யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?

**உங்களுக்குத் தெரியுமா?**

### கொடி காத்த குமரன்




திருப்பூர்க் குமரன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலையில் பிறந்தார். இளவயதிலிருந்தே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1932இல் காந்தியடிகளைக் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டங்கள் நடைபெற்றன. காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போராட்டத்தில் திருப்பூர்க் குமரன் கலந்து கொண்டார். காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்தார். போராட்டக்களத்தில் உயிர்நீத்தபோதும் மூவர்ணக்கொடியைக் கீழே விடவில்லை. இதனால் திருப்பூர்க் குமரன் 'கொடி காத்த குமரன்' என அழைக்கப்படுகிறார். அவரது தியாகத்தை நினைவு கூறும் வகையில் அவரது நூற்றாண்டில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

## தேசிய இலச்சினை

சாரநாத் அசோகத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் நான்முகச் சிங்கம் இந்தியாவின் தேசிய இலச்சினையாக ஜனவரி 26, 1950இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.



இதன் அடிப்பகுதியில் 'சத்யமேவ ஜெயதே' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. 'வாய்மையே வெல்லும்' என்பதே இதன் பொருளாகும். தேசிய இலச்சினை மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

மேல்பகுதியில் நான்கு சிங்க உருவங்கள் ஒன்றுக்கொன்று பின்பக்கமாக பொருந்தியிருக்குமாறு வட்டவடிமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நமது இலச்சினையில் மூன்று சிங்க உருவங்களை மட்டுமே காண இயலும்.

**அடிப்பகுதியில்** யானை (ஆற்றல்), குதிரை (வேகம்), காளை (கடின உழைப்பு), சிங்கம் (கம்பீரம்) ஆகிய உருவங்கள் அமைந்துள்ளன. இவ்வுருவங்களுக்கிடையே தர்ம சக்கரம் அமைந்துள்ளது. இந்த இலச்சினை இந்திய அரசின் அலுவல் முறை கடித முகப்புகளிலும் இந்திய நாணயங்களிலும் கடவுசீட்டுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

அசோகர் காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் தற்போது சாரநாத் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

## தேசியகீதம்

'ஜன கண மன……' நமது தேசிய கீதமாகும். இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைபாட்டிற்கு அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இப்பாடல் இரவீந்திரநாத் தாகூரால் வங்காள மொழியில் எழுதப்பட்டது. இதன் இந்தி மொழியாக்கம் ஜனவரி 24, 1950இல் இந்திய அரசியலமைப்புச் சபையால் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



QB365 - Question Bank Software

**உங்களுக்குத் தெரியுமா?**

1911, டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது இப்பாடல் முதன் முதலாகப் பாடப்பட்டது.

### பாடும்போது பின்பற்ற வேண்டியன

- இக்கீதத்தை சுமார் 52 வினாடிகளில் பாட/இசைக்க வேண்டும்.
- பாடும்போது அனைவரும் எவ்வித அசைவுகளும் இன்றி நேராக நிற்க வேண்டும்.
- பொருள் புரிந்து சரியாகப் பாடவேண்டும்.

### தேசியப் பாடல் – வந்தே மாதரம்

வங்க எழுத்தாளர் பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய "வந்தே மாதரம் பாடலின் முதல் பத்தி விடுதலை போராட்டத்தில் முக்கியப் பங்களித்தது. இதன் காரணமாக, தேசிய கீதத்திற்கு இணையான தேசியப் பாடல் என்ற சிறப்பு இப்பாடலுக்கு அளிக்கப்படுகிறது" என அரசியலமைப்பு சட்ட நிர்ணய மன்றத் தலைவரும் மேனாள் குடியரசுத்தலைவருமான ராஜேந்திர பிரசாத் 1950, ஜனவரி 24 ஆம் நாள் அறிவித்தார். இப்பாடல் ஆனந்த மடம் என்ற நாவலிலிருந்து எடுக்கப்பட்டது.

### தேசிய உறுதிமொழி

"இந்தியா எனது தாய்நாடு….." எனத் தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியைப் பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் தெலுங்கில் எழுதினார்.

### தேசிய நுண்ணுயிரி

நாம் அன்றாடம் சாப்பிடும் தயிர் பாலிலிருந்து உருவாகப் பயன்படுவது லாக்டோபேசில்லஸ் டெல்புருக்கி எனும் நுண்ணுயிர். 2012–ம் ஆண்டில் இது தேசிய நுண்ணுயிராக அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பாக்டீரியா



வேதிவினை புரிந்து பாலில் இருக்கும் புரதத்தை மாற்றுவதால் தயிர் கிடைக்கிறது. தயிர் செரிமானத்துக்கும், வயிற்றுக் கோளாறுகளுக்கும், குளிர்ச்சி தருவதற்கும் அறியப்பட்டது.

### இந்திய நாணயம் (INR) ₹

இந்தியாவின் அதிகாரபூர்வ பணத்தின் பெயர் ரூபாய். 16–ம் நூற்றாண்டில் மன்னர் ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்துக்கு 'ருபியா' என்று பெயர். அதுவே ரூபாய் என்று மருவியுள்ளது. ரூபாய்க்கான சின்னம் ₹. இந்தச் சின்னத்தை 2010–ல் வடிவமைத்தவர் தமிழகத்தைச் சேர்ந்த டி. உதயகுமார் ஆவார்.

### தேசிய நாட்காட்டி

பேரரசர் கனிஷ்கர் காலத்தில் கி.பி.(பொ.ஆ.) 78–ல் சக ஆண்டு முறை தொடங்கியது. இளவேனில் கால சம பகல்–இரவு நாளான மார்ச் 22 அன்று இந்த ஆண்டு தொடங்குகிறது. லீப் ஆண்டுகளில் இது மார்ச் 21 ஆக அமையும். சக ஆண்டு முறையையே நமது தேசிய நாட்காட்டி பின்பற்றுகிறது. பிரபல வான் இயற்பியலாளர் மேக்னாத் சாகா தலைமையிலான நாட்காட்டி சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின் பேரில் 1957 மார்ச் 22 முதல் தேசிய நாட்காட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட இந்திய மக்களிடையே நாட்டுப்பற்றையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தெடுப்பதில் தேசிய சின்னங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

QB365 - Question Bank Software

### தேசிய விடுமுறை நாட்கள்

#### சுதந்திர நாள்



ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 15–ம் தேதி இந்திய சுதந்திர நாள். ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் நாடு விடுதலை பெற்ற நாள் அது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு உதித்த நாளாகவும் கருதப்படுகிறது.

நாடு விடுதலை பெற்ற நாளன்று மகாகவி பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே' என்ற பாடலை அகில இந்திய வானொலியில் பாடிய பெருமையைப் பெற்றவர் மறைந்த கர்னாடக இசைப் பாடகி டி.கே. பட்டம்மாள். சுதந்திர நாள் இன்றைக்கும் நாடெங்கும் கோலாகலமாக அனைத்துத் தரப்பினராலும் கொண்டாடப்பட்டுவருகிறது. அன்றைக்கு நாட்டின் பிரதமர் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றுவது முக்கிய நிகழ்வு ஆகும்.

#### குடியரசு நாள்



1950 ஜனவரி 26–ம் தேதி இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த நாளே, குடியரசு நாள். 1947–லேயே நாடு விடுதலை பெற்றுவிட்டாலும், அதற்குப் பிறகும் பிரிட்டன் அரசியே இந்தியாவின் கௌரவத் தலைவராக இருந்துவந்தார். குடியரசு நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு, நாட்டின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் ஆவார். குடியரசு நாளில் அவரே செங்கோட்டையில் கொடியேற்றுவார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று 'பாசறைக்கு திரும்புதல்' என்ற விழா சிறப்பாக நடைபெறும். அந்நாளில் தரைப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6 மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

#### காந்தி ஜெயந்தி



'தேசத் தந்தை' மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2, தேசிய நாட்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. காந்தியின் பிறந்த நாளைச், 'சர்வதேச அகிம்சை நாள்' ஆக 2007 ல் அங்கீகரித்து ஐ.நா. சபை கொண்டாடி வருகிறது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 182 16-07-2019 2.37.03 PM

QB365 - Question Bank Software

**A-Z கலைச்சொற்கள்**

- கரியால் முதலை – கங்கை முதலை
- ஆற்று ஓங்கில் – கங்கையில் வாழும் டால்பின்
- மீயொலி – கேளா ஒலி அலைகள்

## மீள்பார்வை

- புலி, யானை, டால்பின், மயில், கருநாகம், ஆலமரம், மாம்பழம், கங்கை, தாமரை ஆகியவை இயற்கை தேசியச் சின்னங்களாகும்.
- இந்திய அரசியலமைப்புச் சபை 1947, ஜூலை 22இல் மூவண்ணக்கொடியைத் தேசியக் கொடியாக ஏற்றுக் கொண்டது.
- தேசியக்கொடி, தேசிய இலச்சினை, தேசிய கீதம், தேசியப்பாடல் போன்றவை பிற தேசியச் சின்னங்களாகும்.
- விடுதலை நாள், குடியரசு நாள், காந்திஜெயந்தி போன்றவை முக்கிய தேசிய விழாக்களாகும்.

## பயிற்சிகள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் _______________.

அ) பிங்காலி வெங்கையா

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) காந்திஜி

9KP47I

2. இந்தியாவின் தேசியக் கீதம் _______________.

அ) ஜன கண மன

ஆ) வந்தே மாதரம்

இ) அமர் சோனார் பாங்கலே

ஈ) நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்தமடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் _______________.

அ) அக்பர்

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஈ) ஜவஹர்லால் நேரு

4. _______________ பிறந்தநாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்

அ) மகாத்மா காந்தி

ஆ) சுபாஷ்சந்திர போஸ்

இ) சர்தார் வல்லபாய்பட்டேல்

ஈ) ஜவஹர்லால் நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் _______________.

அ) வெளிர்நீலம்

ஆ) கருநீலம்

இ) நீலம்

ஈ) பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி _______________ அருங்காட்சியத்தில் உள்ளது.

அ) சென்னை கோட்டை

ஆ) டெல்லி

இ) சாரநாத்

ஈ) கொல்கத்தா



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 183 16-07-2019 2.37.03 PM

7. தேசியக் கீதத்தை இயற்றியவர் _______________.

அ) தேவேந்திரநாத் தாகூர்

ஆ) பாரதியார்

இ) ரவீந்திரநாத் தாகூர்

ஈ) பாலகாங்காதர திலகர்

8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு _____________

அ) 50 வினாடிகள்

ஆ) 52 நிமிடங்கள்

இ) 52 வினாடிகள்

ஈ) 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின்போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் _______________

அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

ஆ) ரவீந்திரநாத் தாகூர்

இ) மகாத்மா காந்தி

ஈ) சரோஜினி நாயுடு

10. விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் _______________

அ) பிரதம அமைச்சர்

ஆ) குடியரசுத்தலைவர்

இ) துணைக்குடியரசுத் தலைவர்

ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய தேசிய இலச்சினை _______________ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. இந்தியாவின் தேசியக் கனி _______________.
3. இந்தியாவின் தேசியப் பறவை _______________.
4. இந்தியாவில் தேசிய மரம் _______________.
5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி _______________ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.
6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் _______________.
7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் _______________.
8. இந்தியாவின் மிக நீளமான ஆறு _______________.
9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் _______________.
10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் _______________ ஆரங்களைக் கொண்டது.

## III. சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நான்முகச் சிங்கம் தற்போது _______________ அருங்காட்சியகத்தில் உள்ளது.

   (கொல்கத்தா / சாரநாத்)

2. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு _______________.

   (1950 / 1947)

3. _______________ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

   (லாக்டோ பேசில்லஸ் / ரைசோபியம்)

## IV. நிரப்புக.

1. காவி – தைரியம்; வெள்ளை – _________
2. குதிரை – ஆற்றல்; காளை –___________
3. 1947 – விடுதலைநாள்; 1950 –_________

## V. பொருந்தியுள்ளவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்

1. ரவீந்திரநாத் தாகூர் – அ. தேசியப்பாடல்
2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – ஆ.தேசியக்கொடி
3. பிங்காலி வெங்கையா – இ. வான் இயற்பியலாளர்
4. மேக்னாத் சாகா – ஈ. தேசியகீதம்

QB365 - Question Bank Software

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ). | அ | ஈ | ஆ | இ |
| ஆ). | ஈ | அ | இ | ஆ |
| இ). | ஈ | அ | ஆ | இ |

## VI. பொருத்தியபின் பொருந்தாதது எது?

1. தேசிய ஊர்வன – புலி
2. தேசிய நீர்வாழ் விலங்கு – லாக்டோ பேசில்லஸ்
3. தேசிய பாரம்பரிய விலங்கு – ராஜநாகம்
4. தேசிய நுண்ணுயிரி – டால்பின்

## VII. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3:2 என்ற விகிதத்தில் உள்ளது.
   ஆ) அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.
   இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.
2. அ) பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.
   ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.
   இ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக்கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.

## VIII. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்.

1. அ) ஆகஸ்ட் 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.
   ஆ) நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.
   இ) அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

## IX. விடையளிக்கவும்.

1. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
2. தேசிய இலச்சினையின் பாகங்கள் எவை?
3. தேசியக் கீதத்தின் சிறப்பு அம்சங்கள் எவை?
4. இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்.
5. தேசிய இலச்சினை எங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது?
6. தேசிய உறுதி மொழியை எழுதியவர் யார்?
7. தேசிய இலச்சினையின் அடிபாகத்தில் இடம் பெற்றுள்ள விலங்குகள் எவை?
8. இயற்கை தேசியச் சின்னங்கள் எவை?
9. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது?

## X. செயல்பாடுகள்

1. இயற்கை தேசியச் சின்னங்களைக் காட்சிப்படமாக வரைக/கதை உருவாக்குக.
2. உன் வகுப்பு / பள்ளிக்கான அடையாளக் குறியீட்டை (Logo) உருவாக்குக.
3. அறுகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும். கலந்துரையாடுக.
4. பள்ளியில் நடைபெற்ற தேசிய விழா / நிகழ்வு குறித்து உள்ளூர் செய்தித்தாளுக்குச் செய்தி அறிக்கை தயாரிக்கவும்.

## XI. வாழ்வியல் திறன்

- குறிப்பிட்ட சில உயிரினங்களை மட்டும் தேசியச் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் காரணங்களை ஆய்க.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_1.indd 185 16-07-2019 2.37.03 PM



# இணையச் செயல்பாடு




## இந்தியச் சின்னங்கள் மற்றும் மாநிலங்கள்

**இந்தியா மற்றும் இந்திய மாநிலங்களின் சின்னங்களை அறிவோம்**

படி-1: கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, Play store இல் "National Symbols" என்ற செயலியைத் தரவிறக்கம் செய்து நிறுவவும்.

படி-2: செயலியைத் திறந்து, தேசியச் சின்னகளைத் தேர்வு செய்க. எடுத்துக்காட்டாக, "National Flag, National Bird" போன்ற சின்னங்களைத் தெரிவு செய்து, அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

படி-3: "Back" பொத்தானைத் தெரிவு செய்து கீழ் நோக்கி நகர்த்தி மாநிலங்கள் பற்றி அறியவும். எடுத்துக்காட்டாக, "Tamil Nadu" என்பதைத் தெரிவு செய்க.

படி-4: இப்பொழுது தமிழ்நாட்டின் சின்னங்களைக் காணலாம்.

படி–1




படி–2




படி–3




படி–4




**உரலி:**

https://play.google.com/store/apps/details?id=com.cdac.symbol

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

QB365 - Question Bank Software

அலகு 2

# இந்திய அரசமைப்புச் சட்டம்



## கற்றல் நோக்கங்கள்

- இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அறிதல்.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உருவாக்கத்தை அறிந்து வியத்தல்.
- இதன் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுதல்.
- அடிப்படை உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து அவற்றைப் பின்பற்றுதல்.

9KUCK9

## நுழையுமுன்

இப்பாடம் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவானதை விளக்குகிறது. இந்திய அரசு நிர்வாகத்திற்கு வழிகாட்டும் மற்றும் இந்திய குடிமக்களின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதிப்படுத்தியும் பாதுகாத்தும் வருகின்ற இந்திய அரசமைப்புச் சட்டதை விளக்குகிறது.

யாழினியனும் சுடரொளியும் சகோதரர்கள். யாழ் ஆறாம் வகுப்பிலும் சுடர் நான்காம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். யாழ் அடுத்தநாள் தனக்கிருக்கும் வகுப்புத் தேர்விற்காக வாசித்துக் கொண்டிருந்தான். அனைத்து வீட்டுப் பாடங்களையும் செய்து முடித்திருந்த மகிழ்ச்சியில் சுடர் தொலைக்காட்சியில் சிறுவருக்கான திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தான். தொலைக்காட்சியின் ஒலியை மிகவும் அதிக அளவில் வைத்திருந்தான் சுடர். அதுமட்டுமின்றி அந்தப் படத்தில் பெரிதும் லயித்தவனாய் சத்தமாய் சிரித்தபடியும் கைகளைத் தட்டியபடியும் ரசித்துக் கொண்டிருந்தான். அந்த இரைச்சல் யாழை அவனது படிப்பில் கவனத்தைக் குவிக்க விடாமல் தடுத்தது.

எனவே அவன் தொலைக்காட்சியின் ஒலி அளவைக் குறைக்குமாறும், சத்தமிடாமல் அமைதியாக பார்க்குமாறும் சுடரைக் கேட்டுக் கொண்டான். யாழினியனது கோரிக்கையைச் சுடரொளி காது கொடுத்து கேட்டானில்லை.



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software



திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டும் சுடர் தொலைக்காட்சியின் ஒலி அளவையோ தனது இரைச்சலையோ குறைத்துக் கொள்ளவில்லை. சுடர் மறுப்பதையும் தனக்கு அடுத்த நாள் வகுப்புத் தேர்வு இருப்பதையும் அப்பாவிடம் சென்று முறையிட்டான்.

"அண்ணன் தேர்வுக்கு படிக்கிறான்தானே. அவனைப் படிக்கவிடாமல் தொந்தரவு செய்தால் தவறுதானே" என்றார்.

"நான்தான் திரைப்படம் பார்க்கிறேன்ல. இவன் மட்டும் என்னை படம் பார்க்கவிடாமல் தொந்தரவு செய்யலாமா?" என்றான் சுடர்.

"படிப்பதும் படம் பார்ப்பதும் ஒன்றல்ல தம்பி" என்றார் தந்தை.

ஆனால் இதற்கு உடன்படவில்லை சுடர். யாழிற்கு போலவே இது தனக்கும் வீடுதான் என்றும் அவனுக்குப் படிக்க உரிமை இருக்கிறது என்றால் தனக்குப் படம் பார்ப்பதற்கு உரிமை இருப்பதாகவும் கூறினான்.

இருவருக்குமே வீட்டில் சம உரிமை இருக்கிறது என்பதை அவர்களது தந்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஒருவரது உரிமை அடுத்தவரது சுதந்தரத்தைக் காயப்படுத்தக் கூடாது என்று விளக்கினார். அப்போதும் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சுடர் அடம் பிடித்தான்.

"இங்க பாரு சுடர். இது உன் வீடு. படத்தைச் சத்தமாகப் பார்க்க உனக்கு உரிமை இருக்கிறது. அப்படித்தானே?"

"ஆமாம் அப்பா"

"அதே போல் இது யாழினியனின் வீடு. அவனுக்குப்பிடித்தபாடலைத்தொலைக்காட்சியில் சத்தமாக வைத்துக் கேட்கலாம்தானே?"

"அதெப்படிப்பா, நான்தான் படம் பார்க்கிறேனே. அவனும் சத்தமாகப் பாட்டு கேட்டால் நான் எப்படி படம் பார்க்க முடியும்?"

"இப்ப புரியுதா உன் உரிமைனு நீ சத்தமா படம் பார்க்கலாம்னா அவனும் பாட்டு கேட்கலாம் என்பதும் அவனது உரிமைதான் சுடர்"

"அப்ப எப்படி நான் படம் பார்ப்பேன்?"

"அப்ப எப்படி அவன் படிப்பான்?"

"ஆமாம்ல. சரிப்பா நான் இனிமே படம் பார்க்கல"

"அப்படி இல்ல சுடர். நீ படம் பார்க்கலாம். ஆனால் அடுத்தவர்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்"

"கோவித்துக் கொள்ளாதடா யாழ். இனி தொந்தரவு தராமல் படம் பார்க்கிறேன். நீ போய் படிடா"

சுடரது தோளைத் தட்டிக் கொடுத்தாவாறே யாழ் புன்னகை தவழ நகர்ந்தான்.

இந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களது தாய், "ஏங்க, இந்த சின்ன வீட்ட நிர்வகிப்பதற்கே இத்தனை சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் தேவைப்படுகிறதே. இத்தனை பெரிய இந்தத் தேசத்தைக் கட்டுக்கோப்பாக நிர்வகிப்பதற்கு எத்தனை சட்டங்களும் நெறிகளும் தேவைப்படும்" என்று வியப்பின் உச்சிக்கே சென்றார்.

"அது ஒரு கடல் தீபா. பல மதங்கள், பல மொழிகள், பல இனங்கள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைவரையும் சமத்துவமாக நிர்வகிப்பதற்கு



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

வலுவான, தெளிவான சட்டங்களும் வழிமுறைகளும் தேவை. அதைத்தான் அரசமைப்புச் சட்டம் என்கிறோம்" என்றார்.

அடுத்த வேலை நாளில் இருவரும் பள்ளி சென்றனர். அன்று குடியரசு நாளுமாகும்.

அங்குக் குடியரசுதினக் கொண்டாட்டங்கள் களைகட்டியிருந்தன. மாணவர்களும், ஆசிரியர்களும் கொடிமரத்தைச் சுற்றி வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். கொடியேற்றப்பட்டவுடன் சிறப்பு விருந்தினர் சமூக அறிவியலாளர் ஆறுமுகம் அவர்களுடன் உரையாடல் தொடங்கியது.




"தங்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துகள்!" என்றார் சமூக அறிவியலாளர்.

"தங்களுக்கும் குடியரசு தின வாழ்த்துகள் ஐயா!" என்றனர் மாணாக்கர்கள்.

"நாம் ஏன் குடியரசு தினம் கொண்டாடுகிறோம் என்று தெரியுமா?"

"நமது அரசமைப்புச் சட்டம் 1950–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26–ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் குடியரசு தினமாகக் கொண்டாடுகிறோம்." என்றார் வரலாற்று ஆசிரியை மலர்மதி.

"ஆம். தாங்கள் கூறியது சரிதான். ஆனால் அந்த நாளில் நம்முடைய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக 1929–ஆம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழு சுயராஜ்யத்தை (PURNA SWARAJ) அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, ஜனவரி 26 அன்று முழு சுதந்திர நாளாகக்(Purna Swaraj Day) கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது." என்றார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?" என்று கேட்டான் நத்தர்.




"அதுபற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால் நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். அதற்குப் பதில் கூறுங்கள். பிறகு நான் உங்கள் கேள்விக்குப் பதில் கூறுகிறேன்." என்றார் .

எல்லோரும் "சரி" என்றபடி அவரது கேள்விகளை எதிர்கொள்ளத் தயாராயினர்.

"நீங்கள் உங்கள் வீடுகளில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"நீங்கள் உங்கள் பள்ளியில் ஏதேனும் விதிகளைப் பின்பற்றுகிறீர்களா?"

"ஆம்." என்றனர்.

"இரண்டும் ஒன்றா வேறுவேறா?"

"பெரும்பாலும் வேறுவேறானவை."

"பொது இடத்தில் நாம் சில விதிகளைப் பின்பற்ற வேண்டியதிருப்பது அவசியமா?"



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 189 16-07-2019 2.43.48 PM

QB365 - Question Bank Software

"ஆம்."

"ஏன் அவை அவசியம்?"

"நாம் அடுத்தவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருக்க." என்றாள் தமிழ்ச்செல்வி.

"நம்மை அடுத்தவர்கள் யாரும் தொந்தரவு செய்யாமல் இருக்கவும்தான்." என்றான் செல்வா.

"ஆம். நீங்கள் கூறிய காரணங்கள் ஏற்புடையவைதான். அதே நேரம் விதிகளைப் பின்பற்றச்சொல்லி யாரேனும் உங்களைக் கட்டாயப்படுத்தினால் அப்போது எப்படி உணர்வீர்கள்?"

"கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்."

"உங்களுக்கான விதிகளை நீங்களே உருவாக்கும்போது எப்படி உணர்வீர்கள்?"

"மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கும்."

எல்லோரும் ஆமோதிப்பதைப்போல் தலையசைத்தனர்.

"அரசமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்."

"இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவையெல்லாம் இடம்பெற்றுள்ளன?" என்று கேட்டாள் தீபிகா.

"இந்திய அரசமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரச நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

"இதற்கான ஆரம்பகட்டப் பணிகள் எப்போது தொடங்கப்பட்டன?" என்று கேட்டான் கிறிஸ்டோபர்.



"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 389 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் என்ற அமைப்பு 1946–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக முனைவர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்."

"வேறு யாரெல்லாம் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தார்கள்?"

"ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆஸாத், எஸ். ராதாகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படப் பலர் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்."

"இந்த அமைப்பில் பெண்கள் எத்தனை பேர் இருந்தனர்?" என்று கேட்டான் குணசேகர்.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 190 16-07-2019 2.43.48 PM

QB365 - Question Bank Software



"15 பெண் உறுப்பினர்கள் இந்த அமைப்பில் இடம்பெற்றிருந்தனர்".

"ஏழு பேர் கொண்ட அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டு அதன் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதற்கான ஆலோசகராக பி.என்.ராவ் நியமிக்கப்பட்டார். இக்குழுவின் முதல் கூட்டம் 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் தேதி நடைபெற்றது. அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன".

**உங்களுக்குத் தெரியுமா?**

அண்ணல் அம்பேத்கர் 'இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.

"எதை அடிப்படையாகக் கொண்டு இதை எழுதினார்கள்?"

"இக்குழுவினர் இங்கிலாந்து, அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, ஃப்ரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன் மாதிரியாகக் கொண்டு நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்."

"ஒரே மூச்சில் இதை எழுதினார்களா?"

"இல்லை. அரசமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள் (amendments) அதில் மேற்கொள்ளப்பட்டன."

"எப்போதுஇச்சட்டம்எழுதிமுடிக்கப்பட்டது?"

"2 ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள் கடந்த நிலையில், 1949–ஆம் ஆண்டு நவம்பர் 26–ஆம் நாள் முழுமையான அரசமைப்புச் சட்டம் தயாரானது".



"இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசமைப்புச் சட்டத்தை அன்று தான் ஏற்றுக்கொண்டது. ஆகையினால் தான் அந்த நாளை அரசமைப்புச்சட்ட நாளாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம். இல்லையா?" என்று கேட்டான் கார்த்திகேயன்.

"ஆம்." என்றார் ஆறுமுகம்.

"அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க எவ்வளவு செலவானது?" என்று கேட்டான் நத்தர்.

"64 லட்சம் ரூபாய் இதற்கென செலவிடப்பட்டது."

"நமது அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்ன?"

"நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தன்செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது."



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 191 16-07-2019 2.43.48 PM

QB365 - Question Bank Software

"முகப்புரை என்றால் என்ன?"

"அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை இறையாண்மை, சமத்துவம், மதச் சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு என்று வரையறை செய்கிறது."


THE CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

"இறையாண்மை என்பது எதைக் குறிக்கிறது?"

"அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இப்படியாக ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்."

"மதச் சார்பின்மை என்பது..?"

"மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது."

"இந்திய அரசு சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) வழியேதான் ஆளப்படுகிறது. இல்லையா?"

"ஆம். இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் (parliamentary form of government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்."

"அடிப்படை உரிமை என்றால் என்ன?"

"ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே அடிப்படை உரிமைகள் என்று அழைக்கப்படுகின்றன."

"அவை என்னென்ன?"

"சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை

**அடிப்படை உரிமைகள்**






QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 192
16-07-2019 2.43.49 PM

QB365 - Question Bank Software

ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன."

"வழிகாட்டு நெறிமுறை என்று கூறினீர்கள். அப்படி என்றால் என்ன?"

"அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை."

"வயது வந்தோர் வாக்குரிமை என்பது?"

"பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் ஓட்டளிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்கு ஜாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது."

"உரிமைகளைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகளும் இருக்கும் இல்லையா?"

"ஆம். இருக்கின்றன. தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது, எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது, சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது, நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருப்பது, சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது, நமது பழம் பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது, காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது, அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது, வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது, குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6–14 வயதுக்குள் தருவது ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது." என்று முடித்தார் சமூக அறிவியலாளர் ஆறுமுகம்.

### தகவல் பேழை

- அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி. ஆர். அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம். முன்ஷி, சையது முகம்மது சாதுல்லா, என். மாதவ ராவ், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- அக்குழுவின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார்.
- நமது அரசியல் சட்டம் உருவானபோது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம்பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம்பெற்றுள்ளன.
- அரசமைப்புச் சட்டம் 16.9.2016–வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.

### சிந்தனை வினா

உடனடியாக செய்ய வேண்டிய கடமைகளாக நீ எவற்றைப் பட்டியலிடுவாய்?

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 193 16-07-2019 2.43.49 PM

A-Z கலைச்சொற்கள்

மக்களாட்சி – மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசுமுறை

வரைவுக்குழு – அரசமைப்புச் சட்ட வரைவை உருவாக்க அமைக்கப்பட்ட குழு

முகப்புரை – இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கான அறிமுகம்

மதச்சார்பின்மை – அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களையும் சமமாக நடத்துதல்

சமத்துவம் – அனைத்து மக்களுக்கும் சமத்துவ பொருளாதார நிலை சமத்துவ வாய்ப்பு அளித்தல்

இறையாண்மை – அரசமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரம்.

## மீள்பார்வை

- ஜனவரி 26 குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்திய அரசமைப்புச் சட்டம் அடிப்படை கருத்துகளையும் கொள்கைகளையும் சட்டத்தையும் கொண்டுள்ளது.
- இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ஆவார்.
- அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது.
- இந்தியா ஒரு இறையாண்மையுடைய சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசு நாடாகும்.
- அனைத்து குடிமக்களும் அவரவர் மதத்தைப் பின்பற்றலாம்.
- நிர்வாகத்துறை சட்டமன்றத்திற்கு முழு பொறுப்புடையதாக உள்ளது.
- அடிப்படை உரிமைகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.
- அரசு நெறிமுறை கோட்பாடுகள் மக்களுக்கு வழிகாட்டுகிறது.
- வயது வந்தோர் வாக்குரிமை 18 வயதை அடைந்தவர்கள் வாக்களிப்பதற்கான உரிமையை வழங்குகிறது.
- அனைத்து குடிமக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளும் உண்டு.

## பயிற்சிகள்

9KXZ96

### I. சரியான விடையை தேர்வு செய்க:

1. அரசமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் ________________.

   அ) ஜனவரி 26 ஆ) ஆகஸ்டு 15

   இ) நவம்பர் 26 ஈ) டிசம்பர் 9

2. அரசமைப்புச் சட்டத்தை ________________ ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டது.

   அ) 1946 ஆ) 1950

   இ) 1947 ஈ) 1949

3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை ________________ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

   அ) 101 ஆ) 100

   இ) 78 ஈ) 46





6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 194 16-07-2019 2.43.49 PM

4. இஃது அடிப்படை உரிமை அன்று________________.

அ) சுதந்திர உரிமை

ஆ) சமத்துவ உரிமை

இ) ஒட்டுரிமை

ஈ) கல்வி பெறும் உரிமை

5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ________________.

அ) 14　　ஆ) 18

இ) 16　　ஈ) 21

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ________________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் ________________.
3. நம் அடிப்படை உரிமைகளை உறுதிசெய்யவும் பாதுகாக்கவும் செய்வது ________________ ஆகும்.
4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ________________.

## III. பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுதந்திர தினம் | – | அ. நவம்பர் 26 |
| 2. | குடியரசு தினம் | – | ஆ. ஏப்ரல் 1 |
| 3. | இந்திய அரசமைப்பு தினம் | – | இ. ஆகஸ்டு 15 |
| 4. | அனைவருக்கும் கல்வி உரிமை | – | ஈ. ஜனவரி 26 |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ.) | இ | அ | ஈ | ஆ |
| ஆ.) | இ | ஈ | அ | ஆ |
| இ.) | ஈ | ஆ | அ | இ |

## IV. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி.

### அரசமைப்புச் சபை

1. அரசமைப்பு நிர்ணய சபை எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
2. வரைவுக்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் பங்கேற்றனர்?
3. அரசமைப்பு நிர்ணய சபையில் பங்கேற்ற பெண் உறுப்பினர்கள் எத்தனை பேர்?
4. அரசமைப்புச் சட்ட உருவாக்கம் எப்போது முடிவடைந்தது?

## V. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

1. ஜனவரி 26 குடியரசு தினமாக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது?
2. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?
3. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுக.
4. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
5. நீ செய்ய விரும்பும் கடமைகளைப் பட்டியலிடுக.
6. முகப்புரை என்றால் என்ன?
7. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சொற்களின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?
8. வரையறு: இறையாண்மை.

## VI. செயல்பாடுகள்:

1. மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது குழுவாகவோ தங்கள் வகுப்புக்கான விதிமுறைகளைத் தயாரித்தல். பின்பு அவற்றிலிருந்து வகுப்புக்கான விதிகளின் தொகுப்பை உருவாக்குதல்.
2. வீடு, பள்ளி, சமூக அளவில் உன் உரிமைகளையும் கடமைகளையும் பட்டியலிடுக.
3. சமத்துவம், குழந்தைத்தொழிலாளர் அனைவருக்கும் கல்வி பெறும் உரிமை – இத்தலைப்புகளைப் பற்றி கலந்துரையாடுக.

QB365 - Question Bank Software

4. அமைதிக்கான நோபல் பரிசு (2014) இந்தியாவை சேர்ந்த கைலாஷ் சத்தியார்த்திக்கும் பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யுசூப்சாய்க்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது – இவர்களின் பணிகளைக் கேட்டறிக.

### VII வாழ்வியல் திறன்

1. உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளுள் உனக்குப் பிடித்தமானது எது? ஏன்?
2. இந்திய அரசமைப்புச் சட்டம் நமக்கான உரிமைகளையும் கடமைகளையும் வழங்கியுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் குறித்து எண்ணங்களைப் பகிர்க.





QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 196 16-07-2019 2.43.50 PM

QB365 - Question Bank Software

# இணையச் செயல்பாடு

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

இந்திய அரசியலமைப்பை அறிவோமா!




படி -1 கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி The Constitution of India என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.

படி -2 திரையில் தோன்றும் GO என்பதைச் சொடுக்கி, கொடுக்கப்படும் வினாக்களைத் தேர்வு செய்து, கருப்பொருளை அறிக.

படி -3 மேலும் கூடுதல் தகவல்களை அறிந்து கொள்வதற்கு வலப்பக்கத்தின் கீழ் உள்ள Next என்பதைச் சொடுக்குக.

படி -4 அடுத்த கருத்தை அறிந்து கொள்ள வலப்பக்கம் மேற்பகுதியில் உள்ள ☒ என்பதைச் சொடுக்குக.




படி–1




படி–2




படி–3




படி–4

உரலி:

http://mocomi.com/constitution-of-india/

B441_SOC_6_T2_TM

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



QB365 - Question Bank Software

6th_ Social Science_Term 2_Civics_TM_Unit_2.indd 197 16-07-2019 2.43.50 PM

QB365 - Question Bank Software

## ஆறாம் வகுப்பு – குடிமையியல்
## ஆக்கம்


பாடவல்லுநர் குழு

முனைவர். கோட்டைராஜன்,
உதவி பேராசிரியர்
அரசியல் அறிவியல் துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி கடலூர்.

மேலாய்வாளர்

அப்பண்ணசாமி M.
ஆலோசகர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
TNTB & ESC, நுங்கம்பாக்கம், சென்னை.

சமூக அறிவியல் பாட ஒருங்கிணைப்பாளர்

சுஜாதா .M
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

பாடநூலாசிரியர்கள்

சாந்தி ந.
இடைநிலையாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
பாலவேடு, திருவள்ளூர்.

எட்வின் .R
தலைமை ஆசிரியர்
சமயபுரம்.

ஆதிவள்ளியப்பன்
எழுத்தர், சென்னை.

சரவணன் பார்த்தசாரதி
எழுத்தாளர் / மொழிப்பெயர்ப்பாளர்
ஒக்கூர், சிவகங்கை.

இணையச் செயல்பாடு ஒருங்கிணைப்பாளர்கள்

ஜெய செல்வன் D.
பட்டதாரி ஆசிரியர்
அரசு உயர்நிலைப் பள்ளி
வரகூர், தஞ்சாவூர்..

விஜய் ஆனந்த் D.
பட்டதாரி ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, அட்டயம்பாட்டையன் வட்டம்,
தாரமங்கலம், சேலம்...

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி. பள்ளி, கணேசபுரம்– போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர்,
அ.ஆ.மே.நி. பள்ளி, உத்திரமேரூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

ஜே.எப். பால் எட்வின் ராய்
பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி. பள்ளி, இராக்கிப்பட்டி, சேலம் மாவட்டம்.

### கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வரைபடம்

காந்திராஜன் K T
கலை மற்றும் பட ஒருங்கிணைப்பாளர்
தமிழ் விர்ச்சுவல் அகாடமி, சென்னை

ஓவிய ஆசிரியர்கள்,
தமிழ்நாடு அரசு.

மாணவர்கள்
அரசு கவின் கலை கல்லூரி,
சென்னை மற்றும் கும்பகோணம்

வரைகலை & வடிவமைப்பு

வே. சா. ஜாண்ஸ்மித், தியாகராய நகர், சென்னை

In-House - QC
மனோகர் இராதாகிருஷ்ணன்

ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

தட்டச்சு
கல்பனா


இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது. ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

# பொருளியல்



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 199
16-07-2019 2.51.30 PM

QB365 - Question Bank Software



அலகு 1

# பொருளியல் – ஓர் அறிமுகம்



அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் உள்ளே இருந்த சிறுவர் பூங்காவில் இருந்து சிறுவர்களின் சிரிப்புச் சத்தம் பலமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. சறுக்கு மரத்தில் சறுக்கிக்கொண்டும் சிலர் சீசாவில் மேலும் கீழுமாக ஆடிக்கொண்டும் இருந்தனர்.

இன்னும் சிலரோ அங்கிருந்த ஊஞ்சலில் வானத்தையே தொட்டுவிடும் அளவுக்கு உயரமாகவும் வேகமாகவும் ஆடிக்கொண்டிருந்தனர். அவர்கள் இறங்கியதும் இடம் பிடிக்க நினைத்த குழந்தைகள் ஓரமாக நின்றுகொண்டிருந்தனர்.

சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடாமல் தனியே தூரமாக உட்காந்திருந்தான் கவின். அவனது பார்வை எங்கேயோ இருந்தது.

மற்றவர்களோடு சேராமல் கவின் தனித்து அமர்ந்திருப்பதைத் தூரத்தில் இருந்து பார்த்த அவனது மாமா மோகன் அவனை நோக்கி வந்தார்.

"என்ன கவின்… நீ விளையாடப்போகலையா?" என்றபடியே அவனது அருகில் வந்து அமர்ந்தார்.

"இல்ல மாமா எல்லோரும் என்னைக் கிராமத்துக்காரன்னு கிண்டல் செய்யிறாங்க", என்று சொல்லும்போதே அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது. "நம்ம





QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 200 16-07-2019 2.51.31 PM

QB365 - Question Bank Software

விமலனும் சேர்ந்து சிரிக்கிறான். எவ்வளவு ஆசை ஆசையாக இந்த விடுமுறைக்கு இங்கே வந்தேன். இப்போ ஏன் வந்தோம்னு தோணுது மாமா... நான் திரும்ப எங்க ஊருக்கே போயிடுறேன்," விசும்பலோடு சொன்னான் கவின்.

"அப்படியா? அவன் எங்கே?" என்று அங்கிருந்த சிறுவர்கள் கூட்டத்தில் தம் மகன் விமலனைத் தேடினார்.

"தம்பி" என்று உரக்க அழைத்தார்.

அவர் குரலைக் கேட்டு "என்னப்பா..?" என்று அருகில் வந்தான்.

"நம்ம கவினை எல்லோரும் சேர்ந்து கிண்டல் செஞ்சீங்களா?" என்றார் மோகன்.

அமைதியாக நின்றுகொண்டிருந்தான் விமலன்.

சற்று வருத்தத்துடன் மோகன் "இன்னிக்கு இவ்வளவு பெரிய நகரத்தில் இருந்தாலும்.. நானும் அதே கிராமத்தில இருந்து வந்தவன்தான். என்னோட வேர் அந்த கிராமம்தான்" என்றவர், "சரி போய் உன்னோட நண்பர்களையும் அழைச்சுகிட்டு வா.. நான் உங்களோட பேசணும்" என்று சொல்லிவிட்டு கவின் அருகில் அமர்ந்தார்.

விமலனும் அவனது நண்பர்களும் அமர்ந்ததும் "சரி நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன். நாம சாப்பிடுற அரிசி, பருப்பு எங்கே இருந்து கிடைக்குதுன்னு தெரியுமா?" என கேட்டார் மோகன்.

"அரிசி, பருப்பு தானே, கடையில இருந்து வாங்கிக்கொண்டு வருவாங்க" என்றான் ஆனந்தன்.

"சரி.. கடைக்கு எங்கே இருந்து வருது?"

"அவங்க இன்னொரு கடையில இருந்து வாங்கிட்டு வருவாங்களாகயிருக்கும்."

இன்பா சந்தேகத்துடன் "அதைப் பயிர் செய்றவங்ககிட்ட இருந்து வாங்குவாங்கன்னு நினைக்கிறேன் மாமா," என்றாள்.

"ரொம்பச் சரி! பயிர் செய்றவங்களதான் நாம விவசாயின்னு சொல்லுறோம். கிராமங்களில் விவசாயம் தான் முக்கியத் தொழில்."

**உயர்சிந்தனை வினா:**

பணம் என்பதே உலகில் இல்லையென்றால் – கற்பனை செய்.





QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 201 16-07-2019 2.51.31 PM

QB365 - Question Bank Software



"கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை".

குழந்தைகள் ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"கிராமத்தில் இருந்து அவங்க விவசாயம் செய்து அரிசி, பருப்பு, தானியங்கள், காய்கறிகள் போன்றவற்றை நகரத்தின் கடைகளுக்கு அனுப்பி வைக்கிறாங்க. நாம அதை வாங்கிப் பயன்படுத்துகிறோம்."

"இப்போ எனக்கு ஒரு சந்தேகம் மாமா" என்றான் கவின்.

"என்ன சொல்லு கவின்."

"கிராமத்துல சில நாட்கள்ல எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வந்து விற்கிறதையும் நான் பார்த்திருக்கிறேன். அதைக் கடைனு சொல்லாம சந்தைனு ஏன் சொல்றாங்க?"

"ஆமாம்" கவின்.

**நுகர்வுப் பண்டங்கள்**

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வுப் பண்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை.





QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 202 16-07-2019 2.51.32 PM

QB365 - Question Bank Software

## செயல்பாடு 1

- மாதிரிச் சந்தை அமைக்கத் திட்டமிடவும்.
- ஒவ்வொரு மாணவரும் காய்கறிகளையோ / பழங்களையோ கொண்டு வரச் செய்தல்
- பொருட்களைச் சந்தையைப் போன்று காட்சிப்படுத்தி அதன் விலைகளைக் குறிக்கச் செய்தல்.
- மற்ற வகுப்பு மாணவர்களையும் பொருட்களை வாங்கச் சொல்லுதல்.
- இச்செயல்பாட்டின் மூலம், மாணவர்கள் பொருட்களின் மதிப்பு, வாங்குதல், விற்றல் போன்றவற்றில் அனுபவத்தையும், லாபம், நட்டம், தேவை மற்றும் அளிப்பு போன்றவற்றைப் பற்றிய அறிவினையும் பெறுவர்.
- சந்தை லாபமானதாக இருக்க வேண்டும். எனவே லாபம் கிடைக்கும் வகையில் விற்பனை விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

"சந்தைக்கு வரும் பொருட்கள் எல்லாம் எங்கிருந்து வருகிறதுன்னு உங்களுக்குத் தெரியுமா?".

"தெரியாது மாமா".

"நான் ஏற்கனவே சொன்னதுபோல கிராமத்துலதான் பெரும்பாலான பொருட்கள் விளைவிக்கப்பட்டுச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன."

"சரி கவின். சந்தையில என்ன செயல்பாடு நடைபெறுதுன்னு தெரியுமா?"

"வாங்குவதும் விற்பதும்," என்றான் கவின்.

"அது தான் வியாபாரம். பரவாயில்லையே கவின் நீ அம்மாவோட சந்தைக்குப் போனதும் இல்லாமல் இவ்வளவு விஷயங்களையும் கவனிச்சிருக்கியே".

பெருமிதத்துடன் சிரித்தான் கவின்.

(குழந்தைகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து)

"கிராமம் பத்தி முழுசா தெரிஞ்சுக்காம கவினைக் கிண்டல் பண்ணிட்டோம்".

"மன்னிச்சிடுங்க மாமா, இனி யாரையும் காயப்படுத்தும்படி பேசமாட்டோம். இதைப் பற்றி இன்னும் அதிகமா தெரிஞ்சிக்க ஆவலா இருக்கோம் மாமா," என்றனர்.

"சரி சொல்றேன் கேளுங்க," என்று விவரிக்கத் தொடங்கினார் மோகன்.



பண்டமாற்று முறையின் சிக்கல்கள்

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.** *–குறள்: 479*

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 203 16-07-2019 2.51.32 PM

QB365 - Question Bank Software

## செயல்பாடு 2

"ஒன்றிலிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம் கொண்டாட்டம்" என்ற பாடலைப் பாட / இசைக்கச் செய்தல். பாடலின் பொருளை விமர்சிக்கச் செய்தல்."

9L7VAT

## செயல்பாடு 3

கொடுக்கப்பட்ட அட்டவணையைப் பூர்த்திச் செய்தல்.

| வ. எண். | நாடுகள் | நாணயம் | குறியீடு |
|---|---|---|---|
| 1. | ஜெர்மனி | | |
| 2. | பிரேசில் | | |
| 3. | இந்தியா | | |
| 4. | அர்ஜெண்டினா | | |
| 5. | சீனா | | |

"சந்தையில் விற்கப்படும் பொருட்களைச் சிறு வியாபாரிகளும் மக்களும் பணம் கொடுத்து வாங்கிட்டுப் போறாங்க" என்றார் மோகன்.

"உங்களுக்கு தெரியுமா?"

"பழைய காலத்தில் பண்டமாற்று முறைன்னு ஒன்று இருந்தது ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் அது. (எ.கா.) ஒரு மூட்டை அரிசிக்குப் பதிலாகத் தேவையான அளவு துணியைப் பெற்றுக் கொள்வதாகும்".

"இதிலே சிக்கல் என்னன்னா.... ஒருவரிடம் அரிசி அதிகமாக இருக்கும், ஒரு நெசவாளரிடம் துணி அதிகமாக இருக்கும். அரிசி வைத்திருப்பவர் துணியை வாங்க விரும்புவார். ஆனால் துணியை வைத்திருப்பவர் அரிசியை வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பரிமாற்றம் நடக்கும்".

### முதல் நிலைத் தொழில்கள்

உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.

- வேளாண்மை
- கால்நடைகள் வளர்த்தல்
- மீன் பிடித்தல்
- சுரங்கத் தொழில்
- கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல் மற்றும் மரம் வெட்டுதல்.







QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 204 16-07-2019 2.51.33 PM

"பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும்போது பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் வேறுபாடு பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க கண்டுபிடிக்கப்பட்ட கருவிதான் பணம்."

"ஓ! அப்படியா!" என வியந்தனர் குழந்தைகள்.

"பழங்காலத்துல வேட்டையாடிகளாக, உணவு சேகரிப்பாளர்களாக வாழ்ந்து வந்த மக்கள், படிப்படியாக வேளாண்மை செய்யக் கற்றுக் கொண்டனர், என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு அவர்கள் வேளாண்மை செய்வற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே கிராமம், ஊர் என்று அழைக்கப்பட்டன. இன்றளவும் விவசாயம் நமது நாட்டின் பொருளாதார ஆணிவேராகத் திகழ்கிறது. மனிதனின் தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் அளவில்லை. அதன் அடிப்படையிலேயே புதிது புதிதாக தொழில்களைச் செய்யக் கற்றுக் கொண்டான். வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

"விவசாயம் முதன்மைத் தொழிலா?"

"ஆமாம், விவசாயம் போலவே இன்னும் சில தொழில்களையும் முதன்மையான தொழில்கள்னு சொல்லுவாங்க".



"விவசாயம், தொழிற்சாலைகள் எல்லாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கு. உங்களுக்குப் புரியும்படி நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம்".

"கிராமம்னா விவசாயம் தானா? அங்கே இருக்கிறவங்க என்ன வேலைக்குப் போவாங்க?" என்றான் விமலன்.

"கிராமம் எப்படி இருக்கும் மாமா" என்று இன்பாவும் சேர்ந்து கொண்டாள்.

"விவசாயம் தான் முதன்மையான வேலையாக இருக்கும் விமலன். பட்டணம்னு சொல்லப்படுகின்ற நகரம் போன்று வசதிகள் அங்கே இருக்காது. அதே நேரம் அவர்களுக்குத் தேவையான அடிப்படையானவை கிடைக்கும்படி இருக்கும். சின்னச்சின்ன கடைகள் இருக்கும். அரிசி, பருப்பு மாதிரியே காய்கறி உற்பத்தியும் கிராமங்களில்தான் அதிகம். பால், காபி, டீ போன்ற பானங்களில் சேர்க்கும் சர்க்கரை, ஆலைகளில்தான் உற்பத்தியாகுதுன்னாலும் அதுக்கு மூலப் பொருளான கரும்பு கிராமங்களில்தான் விளையுது. மிளகாய் தொடங்கி கடுகு வரை சமையலுக்கான பெரும்பாலான பொருட்கள் கிரமத்துலேர்ந்துதான் வருது."

"அடேயப்பா... இதுக்கெல்லாம் ரொம்ப விலை அதிகம்னு அம்மா சொல்லுவாங்க. அப்ப கிராமத்தில் இருக்கிறவங்க எல்லாம் பணக்காரங்களாகத்தான் இருப்பாங்க போல," என்றான் ஆதித்யா.

"அப்படி இல்லை. அங்கே உற்பத்தி செய்யுறது மட்டும்தான் அவங்க. அப்பொருட்களை அவங்கட்ட இருந்து வாங்கி, விற்க நிறைய வியாபர இடை நிலை முகவர்கள் இருப்பதால்.. விவசாய உற்பத்தியாளர்களுக்குப் போய்ச்சேரும் பணம் குறைவாகத்தான் இருக்கும்."

"ஐயோ.. பாவம்! ஆனா.. கிராமம் தான் உண்மையிலேயே நகரத்தின் நிழல் போல," என்று வியந்தான் ஆனந்தன்.

QB365 - Question Bank Software

## இரண்டாம் நிலைத் தொழில்கள்

முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவது இரண்டாம் நிலை தொழில்கள் (தொழில் துறை) என்று அழைக்கப்படுகின்றன.

உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்.**

- ➢ வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்.
- ➢ காடுசார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- ➢ கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- ➢ கடல்சார் தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்.






### செயல்பாடு 4

தகுந்த இடங்களில் ✓ குறியிடவும்

| வ. எண். | தொழில் | முதல் நிலைத் தொழில்கள் | இரண்டாம் நிலைத் தொழில்கள் | மூன்றாம் நிலைத் தொழில்கள் |
|---|---|---|---|---|
| 1. | விவசாயி | | | |
| 2. | ஆசிரியர் | | | |
| 3. | துணி தைப்பவர் | | | |
| 4. | பொறியாளர் | | | |
| 5. | வங்கி மேலாளர் | | | |

**"கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு என்று மகாத்மா காந்தியடிகளே சொல்லியிருக்கிறார்."**

"அருமையாகச் சொல்லி இருக்கிறார்," என்று உற்சாகமாகச் சொன்னான் கவின்.

அப்போது மோகனுடைய சட்டைப்பையில் கைபேசி சிணுங்கியது.

அவர் அதை எடுத்துப் பார்த்தார். விமலனின் அம்மா பொன்னி அழைத்திருந்தார். செல்போனை ஆன் செய்து, "சொல்லும்மா.." என்றார்.



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 206 16-07-2019 2.51.34 PM

QB365 - Question Bank Software

## மூன்றாம் நிலைத் தொழில்கள்

முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.








"அங்கே என்ன உட்கார்ந்துகிட்டுக் கதை அளந்துகிட்டு இருக்கீங்க. பசங்களையும் அழைச்சுட்டு வீட்டுக்கு வாங்க. சாப்பாடு தயாரா இருக்கு," என்று சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டார்.

"சரி வாங்க எங்க வீட்டுக்குப் போகலாம். சாப்பாடு தயாரா இருக்குன்னு," எழுந்தார் மோகன். பின்னடியே பசங்களும் "ஹேய்!" என்று உற்சாகமாய்ச் சத்தம்போட்டபடி எழுந்தனர்.

"கிராமம் எவ்வளவு முக்கியமானதுன்னு சொன்னீங்க. அப்போ நகரம் முக்கியமானது இல்லையா?" என்று கேட்டாள் இன்பா.

"ஒன்று முக்கியமாக இருந்தால் மற்றொன்று முக்கியமில்லாதது என்று யார் சொன்னது? அதனதன் அளவில் ஒவ்வொன்றும் முக்கியமானதுதான்."

அப்படீன்னா, நகரத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்," என்று கேட்டாள் இன்பா.

"அவ்வளவுதானே.. சொன்னால் போச்சு. இன்று உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் தான் வாழ்கிறார்கள். நம்ம தமிழ்நாட்டில் 47 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கிறார்களாம்."

"அடேயப்பா!"

"அதுமட்டுமல்ல. தமிழ்நாடு உற்பத்தி தொழிலிலும் சேவைத்தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம். இவை நகரங்களை மையமாகக்கொண்டே இயங்குகின்றன."

"கேட்கவே பெருமையா இருக்கு மாமா. இந்தச் செயல்பாடுகளை என்னவென்று சொல்லுங்களேன்" என்றான் கவின்.

"ஆமா.. அதுவுமில்லாமல்.. கிராமங்களைவிட நகரங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம். சிறுதொழில் செய்பவர்கள் தொடங்கி அமைப்பு சாரா தொழிலாளர்கள் வரை நகரத்தில் தான் அதிகமாக இருக்காங்க."

"புரியலையே."



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

"இப்போ கிராமத்தில் முடி திருத்தகம், துணிகளைத் துவைத்து, இஸ்திரி போட்டுக்கொடுக்கும் சலவை நிலையங்கள் எல்லாம் ஒண்ணோ ரெண்டோ தானே இருக்கும். ஆனால் நகரத்தில் இந்த மாதிரி சிறுதொழில் செய்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். இப்படி நகரத்தில் கிடைக்கக்கூடிய உபரி வருவாயும் அதிகமாக இருக்கும்."

"ஓ!"

"ஆமா, நன்கு வடிவமைக்கப்பட்ட சாலைகள், துறைமுகம், விமான நிலையம், ரயில் நிலையங்கள் போன்ற இடங்கள் எல்லாம் ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பாக நடக்கத் துணை புரிகின்றன. இதற்கு உதவுவதற்கு ஏற்றார் போல வங்கிக் கிளைகள் நகரங்களில் அதிகம். இப்படி அன்றாடப் பணப்புழக்கத்திற்குப் பெருமளவில் வங்கிகள் உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன."

"இவை அனைத்தையும் மூன்றாம் நிலை தொழில்கள் எனலாம்."

"நான் இங்கேயே இருந்தும், எனக்கு இதெல்லாம் தெரியல அப்பா," என்றான் விமலன்.

"உண்மையிலயே நிறைய செய்திகள் தெரிஞ்சுகிட்டோம் மாமா," என்றாள் இன்பா.

"நல்லது. இனிமே கிராமம்தான் உசத்தி, நகரம்தான் உசத்தின்னு யாராச்சும் சொல்லுவீங்களா?"

"நிச்சயமாகச் சொல்லமாட்டோம் மாமா. யாராச்சும் அப்படிச் சொன்னால் எங்களுக்குத் தெரிஞ்சதை அவங்களுக்கும் சொல்லிக்கொடுப்போம்," என்று ஒரே குரலில் கூறினர் குழந்தைகள்.

"சரி சாப்பிட போகலாம் எல்லோரும் வாங்க," என்று கூப்பிட்டார் மோகன்.

"இன்னும் கொஞ்சம் நேரம் விளையாடிட்டு சாப்பிடப் போகிறோம்", என்றனர் குழந்தைகள்.

கவினின் கையைப் பற்றிக்கொண்டு, குழந்தைகள் பூங்காவை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

எல்லோரும் ஒற்றுமையோடே விளையாடப் போவதைப் பெருமிதத்துடன் பார்த்து, நல்ல விஷயங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்த மனநிறைவைப் பெற்றார், பொருளாதார ஆசிரியரான மோகன்.

**கற்றல் வெளிப்பாடுகள்**

- குழந்தைகள் 'சந்தை' என்பதன் பொருளை புரிந்து கொள்வர்.
- 'பண்டமாற்று முறை' பற்றித் தெளிவான கருத்தைப் பெறுவர்.
- பலவிதமான தொழில்களைப் பற்றிய அறிவினைப் பெறுவர்.

A-Z கலைச்சொற்கள்

**கலைச்சொற்கள்**

- நுகர்வோர் – பொருட்களைப் பயன்படுத்துவோர்
- குடியிருப்புகள் – மனிதர்கள் வாழுமிடம்



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 208 16-07-2019 2.51.35 PM

QB365 - Question Bank Software

## பயிற்சிகள்

9LD4NJ

**I) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ________________.
2. 'தேன் சேகரித்தல்,' என்பது ________________ தொழில்.
3. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது ________________ எனப்படும்.
4. காந்தியடிகளின் கூற்றுப்படி, கிராமங்கள் நம் நாட்டின் ________________.
5. தமிழ்நாட்டில் ________________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.

**II) பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. கால்நடைகள் வளர்ப்பு | – | இரண்டாம்நிலைத் தொழில் |
| 2. உணவு பதப்படுத்துதல் | – | சேவை |
| 3. இரும்பு எஃகுத் தொழிற்சாலை | – | முதல்நிலைத் தொழில் |
| 4. தொலைபேசி | – | வேளாண்சார் தொழிற்சாலை |
| 5. பருத்தியாலை | – | மூன்றாம்நிலைத் தொழில் |

**III) பொருத்திய பின் பொருந்தாத இணையைக் கண்டறிக.**

| | | |
|---|---|---|
| 1. சிறிய அளவிலான தொழிற்சாலை | – | பண பரிவர்த்தனை |
| 2. காடுசார்ந்த தொழிற்சாலைகள் | – | தகவல் தொழில்நுட்பம் |
| 3. சேவைகள் | – | காகிதத் தொழிற்சாலைகள் |
| 4. வங்கி | – | கால்நடைகள் வளர்ப்பு |

**IV) சரியான விடையைக் கண்டறிக.**

1. வேளாண்மை என்பது (முதன்மை / இரண்டாம் )நிலைத் தொழிலாகும்.
2. பொருளாதார நடவடிக்கைகள் (உடைமை / பயன்பாடு) அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.
3. சர்க்கரை ஆலை (முதன்மை / இரண்டாம்) நிலைத் தொழிலாகும்.
4. வேளாண்மைசார் தொழிற்சாலை (பருத்தி யாலை / மரச்சாமான்கள்).
5. பால்பண்ணை ஒரு (பொது நிறுவனம் / கூட்டுறவு துறை).

**V) கீழ்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.**

1. சந்தை – வரையறு.
2. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
3. வணிகம் என்றால் என்ன?
4. சேமிப்பு என்றால் என்ன?
5. பணம் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் யாது?
6. நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்புகள் வளர்ச்சியடைதற்கான காரணம் என்ன?
7. இரண்டாம்நிலைத் தொழில்கள் என்று எவற்றை அழைக்கின்றோம்?
8. நகரங்களை மையமாகக் கொண்டு இயங்கும் தொழில்கள் எவை?



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

VI) கீழ்கண்ட வினாக்களுக்கு விரிவாக விடை எழுதுக.

1. உனது மாவட்டத்தில் நடைபெறும் முக்கிய முதல்நிலைத் தொழில்களைப் பட்டியலிடுக.
2. உனது மாவட்டத்தில் உள்ள உற்பத்தித் தொழிற்சாலைகளைக் குறிப்பிடுக.
3. மூலப்பொருள் பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன?
4. சேவைத்துறையில் காணப்படும் தொழில்களை எழுதுக.
5. நகரங்களின் அம்சங்களாக நீ அறிவன யாவை?

VII) கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| வ. எண். | கிராமங்களில் நடைபெறும் தொழில்கள் | நகரங்களில் நடைபெறும் தொழில்கள் | இரண்டிலும் நடைபெறும் தொழில்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

**செயல்பாடு**

"சிந்துநதியின் மிசை நிலவினிலே" என்ற பாரதியாரின் பாடலிலுள்ள வரிகளை எழுதவும். இப்பாடலில் பண்டமாற்று முறையின் மூலம் மாற்றிக் கொள்ளப்பட்ட பொருட்கள் எவையெவை என ஆசிரியர் உதவியுடன் அறிந்து கொள்ளவும்.

VIII) படங்களை ஒட்டவும்.

| முதல்நிலைத் தொழில்கள் | இரண்டாம்நிலைத் தொழில்கள் | மூன்றாம்நிலைத் தொழில்கள் |
|---|---|---|
| | | |



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 210 16-07-2019 2.51.35 PM

QB365 - Question Bank Software

A-Z கலைச்சொற்கள்

| | |
|---|---|
| நிலையான | Eternal |
| இரத்த உறவு | Kinship |
| சமகாலத்தில் | Contemporary |
| உலோகவியல் | Metallurgy |
| ஆசான் | Preceptor |
| கோட்பாடு | Doctrine |
| நல்லொழுக்கம் | Virtuous |
| சடலம் | Corpse |
| மடாலயம் | Monastery |
| ஆய்வுக்கட்டுரை | Treatise |
| உற்பத்தி | Manufacture |
| பயன்பாட்டில் குறைதல் | Deplete |
| நிலைநிறுத்துதல் | Sustainable |
| மூன்றாம் நிலை | Tertiary |
| வளம் | Resource |
| உயிருள்ள | Biotic |
| உயிரற்ற | Abiotic |
| சுதந்திரம் | Independence |
| குடியரசு | Republic |
| பாரம்பரியம் | Heritage |
| நீர்வாழ்வன | Aquatic |
| வான்இயற்பியலாளர் | Astrophysicist |
| மக்களாட்சி | Democracy |
| வரைவுக்குழு | Drafting Committee |
| முகப்புரை | Preamble |
| மதச்சார்பின்மை | Secular |
| சமத்துவம் | Socialist |
| இறையாண்மை | Sovereign |
| நுகர்வோர் | Consumer |
| விற்பனைப் பொருட்கள் | Commodity |
| தொழில்கள் | Occupation |
| குடியிருப்பு | Settlement |



QB365 - Question Bank Software

QB365 - Question Bank Software

குறிப்புகள்



QB365 - Question Bank Software

VI Economics- Lesson 1.indd 212 16-07-2019 2.51.35 PM